
# சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும்



நூலாசிரியர் . கா . சிவலிங்கம்

வெளியீடு: திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை
பாலமீன்மடு - திராய்மடு, மட்டக்களப்பு.

திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயம்
பாலமீன்மடு - திராய்மடு.
மட்டக்களப்பு.
பதிவு இலக்கம்: HA/5/BT/343

# ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் சுவாமிகள்



# சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும்

சடையப்பர் சுவாமிகளது 100ஆவது ஜனன தினத்தைக்
குறிக்குமுகமாக இந்நூல் வெளியிடப்படுகிறது.
(13-07-1909 - 13-07-2009)

ஆசிரியர்
திரு.கா.சிவலிங்கம்

நூல் வெளியீடு : *திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை*
*பாலமீன்மடு - திராய்மடு,*
*மட்டக்களப்பு.*

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும் |
| ஆசிரியர் | : | திரு. கா.சிவலிங்கம் |
| முகவரி | : | கிராமோதயவீதி, பாலமீன்மடு - முகத்துவாரம் மட்டக்களப்பு. |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு விபரம் | : | முதல் பதிப்பு - 2009 |
| தாளின் தன்மை | : | வேங் பேப்பர் |
| நூலின் அளவு | : | 148 × 210mm |
| அச்சுஎழுத்து அளவு | : | 12 |
| மொத்தபக்கங்கள் | : | XXVI, 81 |
| அட்டைப்படம் | : | ஆலய பரிபாலனசபை |
| அச்சிட்டோர் | : | துர்க்கா அச்சகம்,1ம்குறுக்கு, கொக்குவில்,மட்டக்களப்பு. 0654922496. |
| வெளியிட்டோர் | : | திராய்மடு ஸ்ரீமுருகன் ஆலய பரிபாலனசபை, பாலமீன்மடு, திராய்மடு மட்டக்களப்பு. |
| நூலின் விலை | : | ரூபா 150.00 |

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| I. | சமர்ப்பணம் | I |
| II. | ஆசியுரை - 1 | II - III |
| III. | ஆசியுரை - 2 | IV - V |
| IV. | வாழ்த்துரை - 1 | VI - VII |
| V. | வாழ்த்துரை - 2 | VIII - IX |
| VI. | வாழ்த்துரை - 3 | X |
| VII. | நன்றியுரை | XI - XII |
| VIII. | அணிந்துரை | XIII - XVII |
| IX. | நூலாசிரியர் பற்றி | XVIII - XX |
| X. | முன்னுரை | XXI - XXVI |

நூல்

1. பிரதேச வரைபடம் ........................................ 01 - 02
2. பொதுவான கண்ணோட்டம் ........................ 03 - 04
3. சுவாமிகளின் பிறப்பிடம் ........................................ 05
4. சுவாமிகளின் பிறப்பு ........................................ 06
5. சுவாமிகளின் பாலப்பருவம் ............................ 07 - 08
6. சித்தானைக்குட்டிச் சுவாமிகள் நோய் தீர்த்தமை ........................................ 09
7. சுவாமிகளின் திருமணம் ........................................ 10
8. தொழிலின் நிமித்தமான பிரிவு ........................ 11
9. மனைவியின் மறுமணம் ........................................ 12
10. சுவாமிகளின் மனமாற்றம் ............................ 13 - 14
11. அன்றையத் திராய்மடு ........................................ 15
12. துறவு வாழ்க்கை ........................................ 16 - 19
13. துறவுத் தோற்றம் ........................................ 20 - 21

14. ஆலயம் உருவான வரலாறு...................... 22 - 25
15. ஆலய கும்பாபிஷேகங்கள்........................ 26 - 27
16. சுவாமிகளின் மகாசமாதி............................ 28 - 30
17. திராய்மடுவின் வளர்ச்சியும் ஆலயத்தின் இன்றைய நிலையும்.................................... 31 - 33
18. சுவாமிகளுக்கு உண்டான சோதனைகளும்,அவற்றின்விளைவுகளும்... 34 - 37
19. அற்புத நிகழ்வுகள்........................................ 38 - 46
20. சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள்........ 47 - 51
21. சுவாமிகளின் தீர்க்கதரிசனங்கள்............... 52 - 53
22. சுவாமிகளின் கோரிக்கைகள்...................... 54
23. செஞ்சடை, திருநீற்றின் மகிமை................ 55
24. வருடாந்த மகோற்சவம்............................... 56 - 57
25. கந்தசஷ்டி விரதம்
26. பாண்டவர்கள் வனவாசம் } ..................... 58 - 59
27. முடிவுரை .................................................... 60 - 61

## பின்னிணைப்புக்கள்

1. சுவாமிகளின் மறைவை ஒட்டிய அறிவித்தல்............................................. 62
2. மகோற்சவ விபரங்கள்.................................. 63
3. விசேடதினப் பூசை விபரங்கள்..................... 64 - 65
4. வெள்ளிக்கிழமைப் பூசை விபரங்கள்......... 66 - 67
5. காவடிச்சிந்தும், கும்மிப்பாடல்களும் -அமரர் ம.நல்லதம்பி சாஸ்திரியார் இயற்றியது........ 68 - 76
6. காவடிச்சிந்து - திருமதி வசந்தாதேவி நல்லரெத்தினம் இயற்றியது......................................... 77 - 80
7. ஆலயபரிபாலனசபை செயற்குழு உறுப்பினர்கள்...................................................... 81
8. பிழை திருத்தம் - - - - - - - - - - - - - - - - - - 82

# சமர்ப்பணம்



இடி மின்னலோடு வரும் மழை போன்ற துன்பமதை
வடிவேலாற் பனிபோன்று மாற்றி வரமருளி
அடியார் மனக்கோயில் வீற்றிருக்கும் சேவல்
கொடியோன் மலரடிக்கு இந்நூல் சமர்ப்பணமே.





## ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானாந்தாஜீ மகாராஜ்

ஸ்ரீ ராமகிருஷ்ண மிசன், மட்டக்களப்பு.

# ஆசியுரை - 1

நூலாசிரியர் கா.சிவலிங்கம் எழுதியுள்ள "சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும் " எனும் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் இனிதே நிகழ்ந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

''ஜீவனானது, ஒன்றாகிற இறைவனை ஒட்டிக்கொண்டிராத வரையில் மதிப்பைப் பெறுவதில்லை ஏனெனில் இவ்வுலகத்துள் எல்லாப் பொருள்களும் ஈஸ்வர சம்பந்தத்தால்தான் மதிப்பைப் பெறுகின்றன.

ஒன்று என்ற இலக்கத்தைப் போன்ற இறைவனை ஜீவன் சார்ந்து நின்று எல்லாக் காரியங்களையும் அவன் பொருட்டுச் செய்து வந்தால், மேலும் மேலும் நற்பயன் எய்துவான். அவ்விதமின்றி இறைவனைப் புறக்கணித்து, தன்னுடைய திருப்திக்கென்றே செய்து வரும் பல காரியங்களை ஒரு ஜீவன் சிந்தித்துப் பெருமையடைந்து கொண்டிருப்பானாயின் யாதொரு பலனும் உண்டாகாது.'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுகின்றார்.

ஒன்றாகிய இறைவனை சார்ந்து வாழ்ந்ததின் பயனாக சடையப்பர் சுவாமிகள் தனக்கும் தன்னை சார்ந்தவர்களுக்கும் பெரும் ஆன்மீக நலனைப் பெற்று உயர்ந்துள்ளார்.

பணமுள்ளவர்களையும், படித்தவர்களையுமே உலகத்தவர் மதிப்பர்.'' பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை'' என்பர். சடையப்பர் சுவாமிகள் இவ்வுலகுக்குரிய ஏட்டுக் கல்வியையோ அன்றி பொருட்செல்வமோ பெற்றிருக்கவில்லை. அவரது தனி வாழ்வில் ஏற்பட்ட ஒரு திருப்பு முனையானது அவருடைய வாழ்க்கையையே முற்றிலுமாக மாற்றிவிட்டது.

முருகன் திருவடியில் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து கனவிலும் நனவிலும் முருகன் உணர்விலேயே வாழ்ந்த வாழ்க்கை சடையப்பர் சுவாமிகளுடையது. பலர் அவரை அண்டி தங்கள் தங்கள் மனக்கவலைகளை களைந்து ஆறுதல்கள் பெற்றுள்ளார்கள்.

திரு. கா. சிவலிங்கம் அவர்கள் சடையப்பர் சுவாமிகளுடைய சரித்திரத்தை எளிய நடையில், செம்மையாக எழுதியுள்ளார்கள். இந்நூல் இக்கால சந்ததியினருக்கு ஆன்மீக உத்வேகத்தை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.
இந்நூல் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்கள்.

இறைபணியில்
சுவாமி அஜராத்மானந்தா

05. 06. 2009



## நா. வைகுந்தராசா சுவாமிகள்

**தர்மகர்த்தா பிரதமகுரு**

திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயம்,

# ஆசியுரை - 2

**ஓம் மாணிக்கமே சற்குநாத சடையப்பர் துணை**

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம் சொன்னவனே
தூய்மைச் சுகத்தவனே மன்னவனே சிற்பரனே
ஐங்கரனே செஞ்சடையோன் சேகரனே
தற்பரனே - நின் தாழ்சரன்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாய் யாதும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே

அதன்படி- அன்பே சிவமாய் 1909ம் ஆண்டு ஆடி மாதம் ஆடிஅமாவாசை தினத்தில் மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமானின் தீர்த்தோற்சவ தினத்தன்று உயர்திரு பட்டங்கட்டி தம்பியப்பா, அமராதி தாயின் கருவறையில் அவதரித்து, அன்பே சிவமாய் அருள் பணி ஆற்றி, அன்பே சிவமாய் வாழ்ந்து, அன்பே சிவமான ஆலயத்தையும், ஆச்சிரமத்தையும் ஸ்தாபித்து, அன்பே சிவமாய் சமாதி அடைந்த அன்பே சிவமான செஞ்சடைப் பெருமான் சற்குருநாத சடையப்பர் சுவாமிகளின் பாதாரவிந்தம் சரணடைகின்றேன்.

எம் பெருமான் சடையப்பர் சுவாமிகள் அவதரித்து 100ஆவது வருட (1909-2009) மலரில் சடையர் என்கின்ற ஒளியை வெளி உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய அறங்காவலர் நிர்வாகத்தினருக்கு எம் பெருமான் சடையப்பர் சுவாமிகளின் அருள் ஒளி அருளப்பட்டுள்ளது. அருள் ஒளி அருளப்பட்டதால் நீங்கள் அருளாளர்களாக்கப்பட்டு சடையப்பர் சுவாமிகளின் சரித்திர இலக்கியத்தில் பிரகாசிக்கப்போகின்றீர்கள்

திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய ஆச்சிரமத்திற்கு அருள் ஒளிப் பிரமாண்டமான எழுச்சிக்கு நீங்கள் வித்திட்டுள்ளீர்கள். அந்த முத்துக்கள் உலகிற்கு ஒளியை பிரகாசிக்கின்றபோது நாம் எல்லோரும் அந்தப்பிரகாச ஒளியில் மூழ்கப்போகின்றோம். நாம் எல்லோரும் இப் புனிதமான ஒளியில் பிரகாசிக்கவைத்த உங்களை, திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய நிர்வாகத்தினரை நான் பணிகின்றேன். வணங்குகின்றேன். வாழ்த்துகின்றேன்.

சடையப்பர் சுவாமிகளின் அருள் பெற்றவர்களாகிய நூலாசிரியர் உயர் திரு. கா.சிவலிங்கம் ஐயா, போஷகர்கள் உயர் திரு.ந. ஜெகதீஸன் ஐயா, உயர்திரு. வே.கணேசமூர்த்தி ஐயா, தலைவர் உயர் திரு. த. விஜயகுமார் ஐயா, செயலாளர் உயர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஐயா, பொருளாளர் உயர்திரு. ம. ஸ்ரீதரன் ஐயா, மற்றும் ஆலய நிர்வாக சக அங்கத்தவர்கட்கும் இதற்குமுன் பணியாற்றிய நிர்வாகத்தினருக்கும் சடையப்பரின் அன்பர்கள், அடியார்கள் தொண்டர்கள், இவ் ஆலயத்தின் உபயகாரர்கள் எல்லோருக்கும் சடையப்பர் சுவாமிகளின் சிறப்புப் பணியாற்றிய சகல ஆத்மாக்களுக்கும் அவர்களின் பாதாரவிந்தம் பணிகின்றேன். வணங்குகின்றேன். வாழ்த்துகின்றேன். சடையப்பர் பெருமானுக்கும் உங்களுக்கும் சேவைசெய்ய கடமைப்பட்டுள்ளேன். ஓம் சிவம் சடையப்பர் சுவாமிகளின் ஆசியும் ஓம் முருகப்பெருமானின் ஆசியும் உங்கள் எல்லோருக்கும் வாரிவழங்க எம் பெருமான் சடையப்பர் சுவாமிகளையும் திராய்மடு ஸ்ரீ முருகப்பெருமானையும் பிரார்த்திக்கின்றேன்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**ஓம் மாணிக்க குருநாதசற்குருநாத சடையப்பர் அடிமை**

01.07.2009



# க. தங்கேஸ்வரி

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்

மட்டக்களப்பு

## வாழ்த்துரை - 1

### திராய்மடு சித்தர்

சித்தர்கள் என்போர் ஆத்மீகப் பாதையில் சென்று ஞான ஒளியைக் கண்டவர்கள். தமது ஆத்மீக பலத்தால் அதீத அற்புதங்களைச் செய்ய வல்லவர்கள். இந்து சமய இலக்கியத்தில் பதினெண் சித்தர்கள் பற்றியும் அவர்கள் செய்த அற்புதங்கள் பற்றியும் விபரமாகக் கூறப்பட்டுள்ளன.

இந்த வரலாறுகள் வெறும் கட்டுக்கதை அல்ல என்பதை உறுதி செய்யும் வகையில் காலத்துக்கு காலம் சித்தர்கள் இவ்வுலகில் தோன்றி பல அற்புதங்களைச் செய்து வருகின்றனர். அந்த வகையில் யாழ்ப்பாணம் யோகசுவாமிகள், காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமிகள் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களைப் போன்றே பெயர் பிரபலம் அடையாத பல சித்தர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர்தான் திராய்மடு சடையப்பர் சுவாமிகள்.

அவரைப் பற்றி கவிஞர் கா. சிவலிங்கம் எழுதியுள்ள இந்நூல் நல்ல முறையில், கருத்துக்கள் இலகுவாக மனதில் பதியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

கவிஞரின் இயல்பான தமிழ் நடையும் அலட்டல் இல்லாது சம்பவங்களை ரத்தினச்சுருக்கமாகக் கூறியுள்ள முறையும் இந்நூலை சிறப்பாக உருவாக்கியுள்ளளது. எளிய நடை, இனிய தமிழ், இயல்பான சம்பவ ஓட்டம் அனைத்தும் சேர்ந்து வாசிப்போரை இந்நூலோடு ஐக்கியமாக்கி விடுகிறது. அந்த வகையில் நூலாசிரியர் கவிஞர் கா. சிவலிங்கம் அவர்கட்கு எனது பாராட்டுக்கள்.

மட்டக்களப்பில் வாழ்ந்த ஒரு சித்தரின் வரலாற்றைக் கூறும் இந்நூல் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டும் வீட்டில் உள்ள அனைவரும் இதை வாசித்து பயனடைய வேண்டும்.





## சாந்தி நாவுக்கரசன்

பணிப்பாளர்.
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# வாழ்த்துரை - 2

## திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயம்

திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயப் பரிபாலன சபையின் அனுசரணையுடன் வெளிவரவுள்ள "சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும்" என்ற நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதர்கள் தம்மிடமுள்ள விலங்குத் தன்மையை விடுத்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு காலந்தோறும் மகான்களும், சித்தர்களும் சிவானுபூதிச் செல்வர்களும் தோன்றி வழிகாட்டியுள்ளனர். இப் பெரியார்களின் உபதேசங்களினால் மக்களின் மனதில் இறைசிந்தனை ஆழமாகப் பதிந்து விடுகின்றது. நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். என்ற உணர்வு ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எச்சரித்துக்கொண்டிருக்கும் போது அவர்கள் தவறு செய்யப் பயப்படுவார்கள். ஆக அவர்களை நல்வழிப்படுத்தி இறைபக்தியை ஊட்டிநிற்கும் இப்பெரியார்களை நமது சமுதாயம் என்றென்றும் மறவாது நினைவு கூர்வது மிக அவசியம்.

இந்த வகையில் திராய்மடு முருகன் திருத்தலம் உருவாகுவதற்கு கர்த்தாவாக இருந்த சடையப்பர் சுவாமிகளை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து போற்றும் வகையில், அவரது வாழ்க்கை வரலாற்றை, முருகன் மீது அவர் கொண்டிருந்த பக்தி வைராக்கியத்தை, அற்புதங்களை எல்லாம் நூல்வடிவில் வெளிக்கொணர எடுத்த முயற்சி போற்றத்தக்கது. சடையப்பர் சுவாமிகள் போன்று பல அனுபூதிச் செல்வர்கள் எம் மத்தியில் வாழ்ந்து மடிந்து விட்டார்கள். ஆனால் அவர்களைப் பற்றிய செய்திகள் எழுத்துருவாக்கம் பெறாதபடியால் இன்று எமக்கு அறிய வாய்ப்பின்றிப் போய்விட்டது.

தமது வாழ்வில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட ஒரு நிகழ்வினால் துறவு பூண்டு காடுமேடெங்கிலும் சுற்றித்திரிந்து பிறர் தன்னை இகழ்ந்தாலும், புகழ்ந்தாலும், அறிந்தாலும், அறியாவிட்டாலும் முருகப்பெருமானையே தஞ்சமாகக் கொண்டு நிறைவு வாழ்வு வாழ்ந்து சமாதியானவர் சடையப்பர் சுவாமிகள். அவரது அருளாசி என்றென்றும் எமக்குத் துணையாக இருக்கும் என்பது எனது முழுமையான நம்பிக்கை.

இத்தகைய பெருமைகள் பல உடைய இம் மகானது வாழ்க்கை வரலாற்றை நூலுருவில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட திராய்மடு முருகன் ஆலயப் பரிபாலன சபையினரின் சேவையினை நான் பாராட்டுகின்றேன்.



26-6-2009

# பாலமீன்மடு, திராய்மடு இந்துசமய அபிவிருத்தி மன்றம்

## வாழ்த்துரை - 3

மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் திராய்மடு பதியிலே பனம் சோலைகளுக்கு மத்தியில் ஆலமரநிழலில் அமர்ந்திருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் ஸ்தாபகரும் தர்மகர்த்தாவுமாகிய ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் நல்லதம்பி சுவாமிகள் அவர்களுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கும் "சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும்" என்ற மலர் வெளியிடுவதனை மனதாரவாழ்த்துகின்றோம். பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பொதுவாக ஆலயத்தின் சிறப்புக்களையும் நிகழ்வுகளையும் பற்றி நூல் வெளியிடுவது இயல்பாக வருகின்ற காலக்கட்டத்தில் மருவிப்போகின்ற சித்தர்களைப் பற்றியும் அவருடைய வரலாறு, அவர் சொன்ன தீக்கதரிசனங்கள், செய்த அற்புதங்கள், அவரைப்பின்பற்றி நடாத்திக்கொண்டிருக்கிற பூசை வழிமுறைகள், அதன் சிறப்பியல்புகள் பற்றி மிக அருமையாகவும் தெளிவாகவும் எழுதி நூல் வெளியீடாக எடுத்துரைத்தமை சாலச்சிறந்த தொன்றாகும்.

இம்மலர் வெளியீட்டிற்கும், ஆலய திருப்பணிக்கும் அயராது உழைத்த பரிபாலன சபையினருக்கும் மற்றும் நூலாசிரியர் திரு.கா. சிவலிங்கம் அவர்கட்கும் இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென்று வாழ்த்தி இவ் ஆலயத்தின் சிறப்பும், பணிகளும் மென்மேலும் ஓங்க எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டிவணங்குகின்றோம்.

நன்றி

இந்து சமய அபிவிருத்தி மன்றம்
பாலமீன்மடு, திராய்மடு
மட்டக்களப்பு

2009-07-04

திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை

பாலமீன்மடு - திராய்மடு - மட்டக்களப்பு

# நன்றியுரை

முருகப் பெருமானது அருளோடும் சடையப்பர் சுவாமிகளது ஆசியோடும் முருகப்பெருமானது சன்னிதானத்தின் முற்றத்தில் வைத்து; மூன்றாண்டுகள் முன்னெடுக்க ஆலய பரிபாலன சபையை உருவாக்கிவைத்த மூத்தவர்களுக்கும், மகாசபையினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு : இந்த இறைதொண்டை புரிய அருள் வழங்கிய எல்லாம் வல்ல முருகப்பெருமானையும், ஆசிர்வதித்த சடையப்பர் சுவாமிகளையும் வணங்கி எமது இறைபணியை முன்னெடுத்தோம்.


இந்த வகையில் ஆலயபுனருத்தாரன பணிகளோடு நின்று விடாமல் : ஆலயத்தின் தொன்மையையும், ஆலய ஸ்தாபகரது வரலாற்றையும் எழுத்துருவில் ஆவணப்படுத்தி நூல் வடிவில் வெளியிட முனைந்த முயற்சி இன்று நூல் வெளியீட்டு விழாவரைக்கும் எம் பெருமானது இறைஅருளோடு கைகூடியிருக்கின்றது.

இவ்விழா நிகழ்ந்தேறிட எமது ஆலய பரிபாலன சபைக்கு அமைவாக தமது நோய் நொடியையும் பாராது பல சிரமங்களுக்கு மத்தியிலும் இந்நூல் எழுதியுள்ள நூலாசிரியர் மதிப்புக்குரிய திரு. கா.சிவலிங்கம் ஐயா அவர்கட்கு எமது உள்ளங்கனிந்த நன்றிகளை தெரிவிப்பதோடு மென்மேலும் அவரது அத்தனை பணிகளும், தொண்டுகளும் சிறப்படையவும், வளம்பெறவும் முருகப்பெருமானையும், சடையப்பர் சுவாமிகளையும் வணங்கிநிற்கின்றோம்.

மேலும் "சடையப்பர் சுவாமிகளும், திராய்மடுத் திருத்தலமும்" என்ற நூல் வெளியாகி அடியார்களது திருக்கரங்களில் சென்றடைவதற்கு நாம் மேற்கொண்ட முயற்சிக்கு அனுமதி வழங்கிய பொதுமக்களுக்கும், ஆலயவரலாற்று உண்மைகளையும் சுவாமிகளது அத்தனை அம்சங்களையும் இந்தளவிற்கேனும் வெளிக்கொண்டு வருவதற்கு ஆலோசனைகளையும் ஆவணங்களையும் வழங்கிய அனைத்து பிரமுகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

நூல் சிறப்புப் பெற ஆசியுரைகள், அணிந்துரைகள், வாழ்த்துச்செய்திகள், காவடிச்சிந்துகள், கும்மிப்பாடல்கள் ஆகியவற்றை சிரமம்பாராது வழங்கிய மதிப்புக்குரிய அனைத்து பெரியோர்களுக்கும் விரைவாகவும் சிறப்பாகவும் அச்சுப்பதித்த "துர்க்கா" அச்சகத்தாருக்கும் எமது மேலான நன்றிகள்.

மேலும் எமது இறைபணிக்கும் ஆலய திருப்பணிக்கும் எண்ணிலடங்கா அன்பர்கள், அடியார்கள் பல தொண்டுகளையும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கி உதவிபுரிந்துள்ளார்கள். இவ்வேளையில் இவ்வரிகளுக்குள் தவறிவிடப்பட்ட அத்தனை உள்ளங்களுக்கும் மீண்டும் நன்றியை தெரிவித்துக்கொண்டு எமது நன்றியுரையினை நிறைவு செய்கின்றோம்.



நன்றி

என்றும் ஆலய இறைபணியில்
ஆலய பரிபாலன சபை
திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயம்

# அணிந்துரை

"சித்" என்பது ஞானம், அதாவது ஆன்மீக உணர்வு. ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவர் தமது அடியார்கள், சீடர்கள் கூடியிருக்கும் போது அவர்களுக்கு அற்புதமான கருத்துக்களை வெளியிடுவார். ஒருநாள் அவர் பின்வருமாறு கூறினார். "சித்தர்களின் பல நிலையிலுள்ளவர்கள் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பிறவியிலிருந்தே ஆன்மீக உணர்வு பெற்றவர்களாய்ச் சிலர் உள்ளனர். இவர்களை ''நித்திய சித்தர்'' என்பர். இவர்கள் மக்களுக்குப் போதிப்பதற்காகவே உடல் தரித்துள்ளனர்.

"சிலருக்குத் திடீரென்று இறையருள் கிடைக்கின்றது. உடனே இறைக்காட்சி பெறுகின்றார்கள். இவர்களைக் "கிருபா சித்தர்" என்பர்.

ஜபம், தவம் ஆகியவற்றில் ஈடுபட்டு அனுபூதி பெற்றவர்களை "சாதனைச்சித்தர்" என்பர்.

மட்டக்களப்பு துறைமுகத்துக்கு அருகே அமைந்துள்ள மட்டிக்கழி என்ற கடலோரக்கிராமத்தில் சாதாரணமனிதனாகப் பிறந்து தமது முருகபக்தியினாலும் சாதனைகளாலும் துறவியாகப் பரிணமித்த ஒருவருடைய வரலாற்றை இந்நூல் கூறுகிறது. இவரது சடை உச்சியிலிருந்து புறங்கால்வரை நீண்டு கிடந்ததால் மக்கள் இவரை ''சடையப்பர் சுவாமிகள்'' என்று அழைக்கத்தொடங்கினர். புராண, இதிகாசகாலத்தில் வாழ்ந்த

யோகிகளும் ஞானிகளும் நீண்ட சடையை உடையவர்கள் என்பது பிரசித்தம். மகா யோகியாகிய சிவபெருமானின் சடையைக் கவிஞர்கள் பலவாறாகப் புகழ்ந்துள்ளனர்.

பக்கத்துக் கிராமங்களில் வாழ்ந்தவர்களுக்கும் தெரியாமல் தானுண்டு, தன்முருகனுண்டு, முருகனுக்குத் தான் அமைத்த ஆலயம் உண்டு என்று வாழ்ந்து மறைந்த இப்பெரியோரின் வரலாற்றைத் தான் அறிந்துகொண்ட அளவிலாவது எழுதிவைக்கவேண்டும் என்னும் ஆவல் இந்நூலின் ஆசிரியர், நண்பர் திரு.கா.சிவலிங்கம் அவர்களுக்கு உண்டானது இயல்பானதே. ஏனெனில் திரு. சிவலிங்கம் அவர்களும் சுவாமிகள் பிறந்த மட்டிக்கழியின் பக்கத்தூராகிய பாலமீன்மடு என்னும் கிராமத்தில் பிறந்தவர். தமது பிள்ளைப்பராயத்தில் தங்கள் வீட்டிற்கு வரும் சடையப்பர் சுவாமிகளைக் கண்டு மகிழ்ந்தவர். சுவாமிகள் திராய்மடு முருகன் ஆலயத்தை அமைத்து அங்கு வாழ்ந்த போது அடிக்கடி சுவாமிகளைக் கண்டு பேசியுள்ளார். ஆலயத்தில் சுவாமிகளோடு சேர்ந்து கந்தசஷ்டி விரதத்தை அனுஸ்டித்த பாக்கியம் பெற்றவர்.

சுவாமிகளைப் பற்றிய ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் ஆசிரியர் குழந்தைப்பருவத்தில் தன் பொற்றோர் மூலமும் வளர்ந்தபின் ஊரவர்களிடமிருந்து பெற்ற தகவல்களைக் கொண்டும் பின் தானே நேரில் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் நூலை எழுதிமுடித்துள்ளார்.

சடையப்பர் சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் நல்லதம்பி என்பது. பட்டங்கட்டி தம்பியப்பாவுக்கும் அமராவதி அம்மையாருக்கும் புத்திரனாக 1909 ஆம் ஆண்டு ஆடி அமாவாசையன்று இவர் பிறந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். நல்லதம்பி பெயரளவில் மட்டுமன்றி இயல்பில் நற்குணங்கள் படைத்தவராகவும் இருந்தார்.

பாலப்பருவத்தில் தந்தையை இழந்த நல்லதம்பி 12ஆவது வயதில் தாயையும் இழந்தார். உறவினர் ஆதரவில் வாழ்ந்த இவருக்கு அவர்கள் திருமணம் பேசி முடித்தனர். இல்வாழ்க்கைக்குப் பணம் முக்கியம் என்பதை உணர்ந்த நல்லதம்பி நண்பர்களுடன் திருகோணமலைக்குச் சென்றார்.

ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் நடவடிக்கைகளால் ஒரு மகாயுத்தம் தோன்றவிருந்தது. அது 1939ம் ஆண்டில் ஆரம்பித்து விட்டது. 1940ல் ஜப்பான் நாடு ஜேர்மனி, இத்தாலி என்னும் நாடுகளோடிணைந்து போரிட்டது. ஜப்பானின் இந்த நடவடிக்கை பிரித்தானிய குடியேற்ற நாடுகளுக்கும் பெரும் ஆபத்தாய் முடிந்தது. ஜப்பானின் விமானம் தாங்கிக் கப்பல்கள் கிழக்காசியாவில் அமெரிக்க, பிரித்தானியத் துறைமுகங்களைத் தாக்கத் தொடங்கின. 1942ம் ஆண்டு ஏப்ரல் 5ம் திகதி கொழும்புத் துறைமுகமும், 09ம் திகதி திருகோணமலைத் துறைமுகமும், ஜப்பானியரின் விமானக் குண்டுத் தாக்குதலுக்குக் குறியாயின.

அடுத்த நாளே இவ்விரண்டு நகரங்களும் மனித சஞ்சாரமற்றுக் கிடந்தன. துறைமுகங்களில் வேலை செய்தவர்கள் நகரத்தை விட்டு வெளியே உள் நாட்டுக்கும் சொந்த இடங்களுக்கும் சென்று விட்டனர்.

இப்படிப் புறப்பட்டவர்களில் நல்லதம்பியின் கூட்டத்தைச் சேர்ந்த நண்பர்களும் அடங்குவர். இவர்கள் நல்லதம்பியைத் தேடியதாகவும் அவரைப்பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை யென்றும் அவர் குண்டுவீச்சில் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஊரவர்களுக்குக் கூறினர். உறவினர்களும் ஊரவர்களும் இதனை நம்பிவிட்டார்கள். இரண்டு வருடங்களின் பின் நல்லதம்பியின் மனைவிக்கு மறுமனம் செய்து விட்டார்கள். இதனால் மனமாற்றமடைந்த சுவாமிகள் ஆறு வருடங்களாக வெளியிடங்களிலுள்ள அன்பர்களுடன் காலத்தைக் கழித்தும் பல யாத்திரைகளில் ஈடுபட்டிருந்தும் இறுதியாக திராய்மடுவுக்கு ஒரு துறவியாக சென்று அங்கே வாழ்ந்தார்.

நூலாசிரியரைப் பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டும். நண்பர் கா.சிவலிங்கம் கவியுள்ளம் படைத்தவர். மென்மையான சுபாவமுள்ளவர். இதனால் அவருடைய பாடல்களும் எளிமையும், இனிமையும் உடைய பாடல்களாக அமைந்துள்ளன. அவர் வெளியிட்டுள்ள "முகம் காட்டும் முழுநிலா" என்ற கவிதைத் தொகுதியில் உள்ள பாடல்கள் அவரது சுபாவத்தின் வெளியீடுகளாக அமைந்துள்ளன.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த கவிமணி தேசிகவினாயகம் பிள்ளையை ஞாபகமூட்டுவன. பெற்ற தாயையும் தந்தையையும் பற்றி பாட்டெழுதி அஞ்சலி செலுத்திய கவிஞர் தான் கல்விகற்ற பாடசாலையையும் தான் தொழில் புரிந்த காகித ஆலையையும் தாயெனப் போற்றுவது புற நானூற்றுக்குப் பின் தற்காலத்தில் முன்னுதாரணமில்லாத கவிதைகள். மாணவர்களுக்குப் பாடபுத்தகங்களைத் தயாரிப்போர் இப்படல்களை உபயோகித்துக் கொள்ளலாம்.

இவரது பாடல்வரிகளைப் போல் கட்டுறைகளும் இயல்பான உயிரோட்டமுள்ள நடையில் எழுதப் பெற்றுள்ளன. எளிமையான தோற்றமும், ஆடம்பரமற்ற பக்தியும் மக்களிடம் அன்பும் நிறைந்த ஒரு மகானைப்பற்றி எழுதுவதற்கு பொருத்தமான ஒரு தமிழ்நடை.

இக்காரணங்களினால் வளர்ந்தவர்கள் மட்டுமன்றி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் இந்நூலைப் படித்து பயன்பெற வேண்டும்.

வ. சிவசுப்பிரமணியம் - **B. A**
இலக்கிய கலாநிதி



# நூலாசிரியர் பற்றி



மட்டக்களப்பு, பாலமீன்மடு கிராமத்தில் கார்த்திகேசு செல்லப்பொன் தம்பதிகளுக்கு இரண்டாவது புத்திரனாக 31.08.1943ல் பிறந்த கவிஞர் கா. சிவலிங்கம் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் லைசென்சியேற் தரம் (LICENTIATE OF I.C.A.S.L), இலங்கைக் கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் (A.A.T.S.L) ஆகிய தகைமைகளைப் பெற்று வாழைச்சேனை காகித ஆலையில் 11 வருடங்கள் கணக்காளராகக் கடமையாற்றித் தமது 60வது வயதில் (31.08.2003) ஓய்வு பெற்றவர்.

நொச்சிமுனையைச் சேர்ந்த செல்லத்துரை பாக்கிய லட்சுமியைக் கரம்பிடித்த இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். கவிதை இயற்றுவதில் ஆர்வம் மிக்கவர். இவர் எழுதிய கவிதைகள் அவ்வப்போது இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.சில சிறுகதைகளும் எழுதியுள்ளார். இவரது முகம் காட்டும் முழுநிலா கவிதைத் தொகுதி 06. 04. 2007ல் கொழும்புத் தம்ழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்டுப் பின்னர் 21. 04. 2007ல் மட்டக்களப்பிலும் மிகக் கோலாகலமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. இலங்கை ரூபவாகினித் தொலைக்காட்சியில் "உதயதரிசனம்" (12. 01. 2007), "கவிதைப் பொங்கல்" கவியரங்கு (14. 01. 2007) முதலிய விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார். இவர் பெற்ற கௌரவங்களாவன :-

(i) “முகம் காட்டும் முழுநிலா” நூல் வெளியீட்டின்போது பொன்னாடைகள் போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

(ii) மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழாவில் (30. 10. 2008) பொன்னாடை போர்த்தி விருது, சான்றிதழ் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டார்.

இவர் அவ்வப்போது அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய வாழ்த்துப் பாடல்களும் அஞ்சலிப் பாடல்களும் எழுதிக் கொடுத்துள்ளார்.

இவர் ஒரு கவிஞராக இனங்காணப்பட்டுள்ளதால் இவரது நாடகத் திறமையைப் பலரும் மறந்துவிட்டனர். இவர் தனது 19 வயதிலிருந்தே நாடகம் எழுதுவதிலும் நடிப்பதிலும் ஆர்வங் காட்டி வந்துள்ளார்.

வாழவைத்த தெய்வம் (1962), குழந்தையாகுற்ற வாளி (1965), பாவை என் நெஞ்சில் (1964, 1965), மாமா எனக்கொரு மச்சாள்..... (1966), துப்பாக்கி முனையில் (1963), காதலும் காஷுவலா (1971), முதலிய நாடகங்களில் இவர் நடித்துள்ளார்.

பாசம், வினை ஏன் விதைத்தாய், துப்பாக்கி முனையில், மாமா எனக்கொரு மச்சாள், சூரவதம், காதலும் காஷுவலா, முதற்பரிசு, தலைச் சித்திரை முதலிய எட்டு நாடகங்களை இவர் எழுதியுள்ளார். மாமா எனக்கொரு மச்சாள், துப்பாக்கி முனையில், காதலும் காஷுவலா ஆகிய மூன்று நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றியும் உள்ளார்.

15 வயதிலிருந்தே இவர் கவிதைகளை எழுதியுள்ளார். பரிசுகளையும் பெற்றுள்ளார். கடமையில் கண்ணான இவர் ஓய்வு பெற்ற பின்னரே (2004) முழுமூச்சாக இதில் ஈடுபட்டுள்ளார். அண்மைக்காலமாக இவரது கவிதைகள் "செங்கதிர்", "சுவைந்திரள்", "இருக்கிறம்" மூதலிய சஞ்சிகைகளிலும் அடிக்கடி இடம் பெறுகின்றன.

ஆடுதல், பாடுதல், சித்திரம் வரைதல் முதலிய கலைகளிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. இவரது பக்திப் பாடல்கள் பல இறுவட்டுக்களில் பதிவு செய்யப்படவுள்ளன.

சரவனபவாமன்றம், பாலநதிக் கலாமன்றம் ஆகியவற்றின் தலைவராகப் பல தடவைகள் பதவி வகித்துக் கலைச் சேவையில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

அன்புமணி -

# முன்னுரை

நான் சிறுவனாக இருந்த காலத்தில் முதியவர் ஒருவர் வேட்டியை இடுப்பிற் கட்டி ஒரு சால்வைத் துண்டால் நெஞ்சைப் போத்தியபடி தோளில் ஒரு முடக்குத் தடியுடனும் அதில் தொங்க விடப்பட்ட போத்தல், பை என்பவற்றுடனும் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வார். புரிகள் போன்று முறுக்கேறிய சடாமுடியை அவர் தலையிற் சுற்றிக் கட்டியிருப்பார். அவர் யாரென்பது கூட எனக்குத் தெரியாது. ஒரு நாள் எனது தந்தையிடம் அவரைப்பற்றி விசாரித்தேன். அப்போது " இவர்தான் சாமி அப்பாச்சி" என்று தந்தையார் எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். அதன் பின் அவர் வருவதைக் கண்டால் உடனே விறாந்தையில் பாயை எடுத்துக் கொண்டு வந்து விரித்து விடுவேன். சாமி அப்பாச்சியும் சிரித்த முகத்துடன் பாயில் அமர்வார். அவர் எங்கிருந்து வருகிறார் என்பதைக் கூட நான் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. அவர் எனது தந்தை தாயாருடன் அளவளாவி இருந்து விட்டுத் தேநீரையும் அருந்தி ஏதாவது அன்பளிப்பையும் பெற்றுக்கொண்டு விடைபெற்றுச் செல்வார். அந்த நாளிலிருந்தே எனக்கு சாமி அப்பாச்சி மீது ஒரு பற்றுதலும் மதிப்பும் ஏற்படத் தொடங்கியது.

சுவாமிகளிடத்திலும் திராய்மடு முருகனிடத்திலும் எனக்கு ஏற்பட்ட ஈடுபாடே சுவாமிகளைப் பற்றியும் திராய்மடு முருகனாலயத்தைப் பற்றியும் என்னை எழுதத் தூண்டியது. அதன் வெளிப்பாடே நான் முதன் முதலில் எழுதிய ஒரு கட்டுரையாகும். அக்கட்டுரை இந்துசமய கலாச்சார

திணைக்களத்தினால் 1993ம் ஆண்டு ஆவணி மாதம் வெளியிடப்பட்ட "கோபுரம்" சஞ்சிகையிலும் 1993ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி வெளிவந்த தினகரன் நாளிதழிலும் சுவாமிகளின் புகைப்படத்துடன் வெளிவந்தது. அது வெளிவருவதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைப் புரிந்த அத் திணைக்கள உதவிப்பணிப்பாளராயிருந்த திரு. சீ. தெய்வநாயகம் அவர்களை என்றுமே என்னால் மறக்க இயலாது. அவர்கட்கு எனது நன்றிகள் உரித்தாகுக. மேலும் வாழைச்சேனைக் காகித ஆலையில் வெளியான "காகிதமலர்" சஞ்சிகையிலும் அக்கட்டுரை பிரசுரமானது. அவற்றை அலுமாரியினுள் பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்த போதிலும் எலிகளின் அட்டகாசத்தால் அவை சிதைந்து போனது துரதிர்ஷ்டமே.

திராய்மடு திருத்தலத்தைப் பற்றியும் அதற்கு மூல காரணகர்த்தாவாகவும் ஸ்தாபகராகவும் விளங்கிய சடையப்பர் சுவாமிகளைப் பற்றியும் அக்கட்டுரையைத் தவிர வேறு எந்தவொரு ஆவணமும் இதற்கு முதல் இருந்ததில்லை. அவ்வாறு ஆவணப்படுத்தி வைத்திருந்த அந்த ஒரே ஒரு கட்டுரையும் தற்சமயம் என் கைவசமில்லாதது எனக்கு மிகுந்த கவலையளித்தது. எனவே அதை மீண்டும் ஆவனப்படுத்த வேண்டும் என்ற ஒரு எண்ணம் என் மனதில் உதித்தது.

எனது அறிவுக்கெட்டிய காலத்திலேயே இவ்வாலயம் உருவானதால் அதைப்பற்றி நான் அறிந்திருந்த போதிலும் மேலும் தகவல்களைப் பெற விழைந்தேன். அது போல சடையப்பர் சுவாமிகளின் துறவு வாழ்க்கையை மாத்திரமே நான் அறிந்திருந்ததால் துறவுக்கு முந்திய அவரது வாழ்க்கை பற்றிய தகவல்களையும் அறிய வேண்டும் என்ற ஆவலும் எனக்கு ஏற்பட்டது. இதனால் ஆலய தர்மகர்த்தாவும் பிரதம குருவுமான திரு. நா. வைக்குந்தராசா அவர்களையும் ஆலயமுன்னாள் தலைவரும் இந்நாள் ஆலோசகருமான திரு. வே. கணேசமூர்த்தி அவர்களையும் எனது தாயார் திருமதி செல்லப்பொன் கார்த்திகேசு அவர்களையும் அணுகி மேலும் பல தகவல்களைப் பெற்றுக்கொண்டேன். அத்துடன் சடையப்பர் சுவாமிகளும் எனது தந்தையார் அமரர். வ. கார்த்திகேசு அவர்களும் அவ்வப்போது என்னிடம் கூறிய தகவல்களும் எனது ஞாபகத்திலிருந்தன. இவர்களைத் தவிர திருவாளர்கள் ஐ. சிறிதரன், மயில்ச்சாமி, விஜயன்சாமி, த.கந்தசாமி, ஆகியோரும் மேலும் பல தகவல்களை தந்துதவினர். எனவே அந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்து இந்நூலை எழுதத் தொடங்கினேன். தகவல்களைத் தந்துதவிய இப்பெருந்த கைகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு நாள் தற்போதைய ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. த. விஜயகுமார் அவர்களுடன் வேறாரு விடயம் சம்பந்தமாக உரையாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் கதையோடு கதையாக" திராய்மடு முருகன் ஆலய வரலாற்றை ஒரு புத்தகமாக எழுதி ஆவணப்படுத்த

வேண்டும். அண்ணாச்சி" என்று எனக்கு ஒரு அன்புக் கட்டளையிட்டார். நான் அந்த கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது அவருக்கு தெரியாத விடையம் தான். அதனால் நான் அது பற்றி ஏற்கனவே எழுதத் தொடங்கிவிட்டதை அவரிடம் தெரிவித்ததும் அவர் ஆச்சரியத்துக்குள்ளானார். எனவே இவ்வாலய வரலாற்றை நூலுருவாக்கி ஆவணப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தைத் தோற்றுவித்தவர் முருகனே என்பதை இதன் மூலம் உணரமுடிகின்றதல்லவா.

சுவாமிகளைப் பற்றிய தகவல்கள் இன்னும் இருக்கலாம். ஆனால் அவற்றைப் பற்றி கேட்டு தெரிந்து கொள்வதற்கு அவரது சமகாலத்தவர்கள் தற்சமயம் இல்லாதிருப்பது துரதிர்ஷ்டவசமானதே. சுவாமிகளைப் பற்றிய மேலதிக தகவல்களை அறிந்தவர்கள் யாராவது இருப்பின் அவற்றை எனக்கு தெரியப்படுத்துமிடத்து இந்நூலை மறு பதிப்புச் செய்யும் வேளையிலாவது அவற்றையும் உள்ளடக்க முடியும்.

நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அகவை 90ஐத் தாண்டிய நிலையிலும் சிரமம் பாராது மிக அருமையான அணிந்துரையை வழங்கிய மட்டுநகரின் தமிழ் மூதறிஞர், இலக்கிய கலாநிதி, மதிப்புக்குரிய திரு.வ. சிவசுப்பிரமணியம் B.A. ஐயா அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. வேலைப்பளுவுக்கு மத்தியிலும் இந்நூலுக்கு ஆசியுரைகளை மனமுகர்ந்தளித்த அதி வணக்கத்திற்குரிய சுவாமி அஜராத்மானந்தாஜீ மகராஜ் அவர்கட்கும் திராய்மடு திருத்தலைத் தர்மகர்த்தாவும் பிரதம

குருவுமான சங்கைக்குரிய திரு. நா. வைகுந்தராசா சுவாமி அவர்கட்கும், மேலும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய மதிப்புக்குரிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் செல்வி. க. தங்கேஸ்வரி அவர்களுக்கும், இந்துசமய கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் மதிபபுக்குரிய திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கட்கும், மற்றும் பாலமீன்மடு, திராய்மடு இந்துசமய அபிவிருத்தி மன்றத்தினருக்கும், நன்றியுரை வழங்கிய ஆலயபரிபாலன சபைக்கும், காவடிச்சிந்து பாடலை எழுதிய திருமதி. வசந்தாதேவி நல்லரெட்ணம் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந் நூலாசிரியரைப் பற்றி இரத்தினச் சுருக்கமாகவும் அழகாகவும் எழுதித் தந்த மூத்த எழுத்தாளரும் ஓய்வு பெற்ற பதில் அரசாங்க அதிபருமான மதிப்புக்குரிய திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) ஐயா அவர்கட்கும் எனது மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.


இவற்றை விட, தற்போதுள்ள ஆலயம் உருவாகுமுன் தற்காலிகமாக மரம், தடி, கிடுகு, தகரம் முதலியவற்றால் அமைக்கப்பட்டிருந்த வணக்கத் தலங்களின் மாதிரிகளை அழகாகவும் தத்ரூபமாகவும் வரைந்து தந்த நண்பர் திரு.ந. கந்தசாமி அவர்கட்கும், திராய்மடு அடங்கலாக உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் வரைபடத்தை தந்துதவிய புதல்வன் திரு. கஜேந்திரா அவர்கட்கும், திராய்மடு வரைபடத்தை தந்துதவிய திராய்மடு கிராமசேவை உஸ்தியோகத்தர் திரு. கே.ராஜன்

அவர்கட்கும், ஆலயத்தோடு தொடர்புபட்ட புகைப்படங்களையும், சிறந்த சோதிடரும் புலவருமான அமரர். திரு ம.நல்லதம்பி அவர்களால் திராய்மடு முருகன் மீது பாடப்பட்ட காவடிச்சிந்தும், கும்மிப்பாடல்களும் அடங்கிய பிரதியொன்றையும் வழங்கிய ஆலயபரிபாலன சபைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்நூலை அழகுறப் பிரசுரித்துத் தந்த துர்க்கா அச்சகத்தாருக்கும் இந்நூல் வெளியீட்டு விழாவை சிறப்பாக நடாத்திவைத்த ஆலய பரிபாலன சபைக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.


மேலும் காகிதஆலை கணக்காளர் மதிப்புக்குரிய திரு. ச அம்பிகாபதி அவர்களின் ஊக்குவிப்பின் காரணமாக 2007ம் ஆண்டு எனது கன்னிப் படைப்பான "முகம் காட்டும் முழு நிலா" என்னும் கவிதை நூலை தங்கள் கரங்களில் தவழவிட்டேன். அத்தோடு நின்றுவிடாமல் திரும்பவும் எழுத்துலகில் பயணத்தைத் தொடர்ந்ததன் பயனாக எனது இரண்டாவது படைப்பான "சடையப்பர் சுவாமிகளும் திராய்மடு திருத்தலமும்" என்னும் இந்நூல் முருகப்பெருமானின் திருவருளால் சடையப்ப சுவாமிகளின் 100ஆவது ஜனன தினத்தில் (சடையப்பர் நூற்றாண்டு 1909 - 2009) தங்கள் கரங்களை அலங்கரிப்பதையிட்டுப் பெருமகிழ்சியும் மனத்திருப்தியும் அடைகின்றேன். எனது இன்னுமொரு படைப்பு திருமுருகன் திருவருளால் இனி வருங்காலங்களில் வெளியிடப்படலாம் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

அன்புடன்
கா. சிவலிங்கம்

# திராய்மடு உள்ளடங்கலான பிரதேச வரைபடம்



# திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய அமைவிடம்



# பொதுவான கண்ணோட்டம்

திராய்மடுத் திருத்தலம் என்று கூறும் போது ஒருவருடைய திருவுருவம் நம் மனக் கண்முன் நிழலாடும். அவர்தான் ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் சுவாமிகளாகும். இவ்வுலகின் கண் ஏதாவதொன்று உருவாகவேண்டுமெனில் அதற்குப் பின்னணியில் யாரோ ஒரு காரணகர்த்தா இருந்தே ஆகவேண்டும். அதற்கமைய, திராய்மடு ஸ்ரீ முருகன் திருத்தலம் உருவாவதற்கு மூல காரணகர்த்தாவாக இருந்தவர். சடையப்பர் சுவாமிகளேயாவர். அவரது துறவு வாழ்க்கையும் திராய்மடு முருகன் ஆலயத்தின் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. அவரில்லாது இவ்வாலயம் இல்லை இவ்வாலயம் இல்லாது அவருமில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு சுவாமிகளின் வாழ்க்கையும் ஆலயத்தின் வரலாறும் ஒருபோதும் பிரிக்கமுடியாதவை. திராய்மடு திருத்தலத்தின் ஸ்தாபகர் சடையப்பர் சுவாமிகளே. அன்று காடாக காட்சியளித்த திராய்மடுப் பிரதேசமானது இன்று இந்த அளவிற்கு அபிவிருத்தி அடைந்து பிரசித்தி பெற்ற ஒரு தலமாககத் திகழ்வதென்றால் அதற்கு முருகன் மீது அவர் கொண்டிருந்த உறுதியான பற்றுதலும் அவரது அயராத முயற்சியுமே காரணம் என்பது யாவரும் அறிந்த உண்மை.

ஒரு சாதாரண மனிதனாக வாழ்ந்து கொண்டு வந்த அவரது வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏற்பட்ட ஜீரணிக்க முடியாத ஒரு பெரிய சோதனையே அவரது துறவற வாழ்க்கைக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மென்மேலும் அன்னார்க்கு ஏற்பட்ட சோதனைகள் அவரை



நன்கு புடம்போட்டன. எவருக்குமே இல்லாத அவரது அழகான நீண்ட செஞ்சடை அவர்மீது அடியார்களுக்கு ஒரு பற்றுதலையும் பயபக்தியையும் ஏற்படுத்தியது. நல்லதம்பி என்ற இயற்பெயர் மாறி நல்லதம்பிச்சாமியார், சாமியார், சாமி அப்பாச்சி, சடைச்சாமி, சடையப்பர் சுவாமிகள், ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் சுவாமிகள் என்று அடியார்கள் அவரைப் பலவாறு அழைக்கத்தொடங்கியமை படிப்படியாக அவரது ஆன்மீக நிலை உயர்ந்து இறுதியில் வணக்கத்துக்குரிய உன்னதநிலையை அடைந்து விட்டமையை உணர்த்தி நிற்கிறது. அதுபோலவே அவரது இருப்பிடமும் ஆரம்பத்தில் சாமியார் வாடி என்றழைக்கப்பட்டுப் பின்னர் நாளடைவில் சுவாமியின் ஆச்சிரமம் என்று மாற்றமடைந்தது. அவர் வழிபாடு செய்த இடமுங்கூட படிப்படியாக மாறுதலடைந்து தற்சமயம் ஒரு பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழ்கிறது. இப்பொழுது ஈழத்தின் நாலாபக்கமும் இருந்து அடியார்கள் இவ்வாலயத்தை தரிசிப்பதற்காக வருகை தந்தவண்ணம் இருக்கின்றனர். இத்திருத்தலத்தின் மகிமை காரணமாக இவ்வாலயம் "சின்னக்கதிர்காமம்" என்றும் அடியார்களால் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு பெருமைக்குரிய ஒரு ஆலயம் உருவாவதற்கு மூல காரணகர்த்தாவாக இருந்த சடையப்ப சுவாமிகளின் வாழ்க்கையோடு தொடங்கி ஆலயத்தின் இன்றைய நிலைவரை ஏற்பட்ட நிகழ்வுகளை இனி ஒவ்வொன்றாக நோக்குவோம்.

# மட்டக்களப்பு திராய்மடுவில் வாழ்ந்த சடையப்பர் சுவாமிகளின் வரலாறு

**சுவாமிகளின் பிறப்பிடம்:-** இயற்கை எழில் கொஞ்சும் ஈழமணித் திருநாட்டின் கிழக்கில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தை வளங்கொழிக்கச் செய்கின்ற செழுமைமிகு வாவியானது, அலைபுரண்டோடி விளையாடும் வங்கமா கடலுடன் சங்கமிக்கின்ற இயற்கை வனப்பு மிகுந்த இடமே முகத்துவாரமாகும். அதனோடு இணைந்துள்ளதும் வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடமுமான பாலமீன் மடுக் கிராமத்திற்கும் ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அடியார்க்கு அருள்புரியும் பேராலயம் அமைந்துள்ள அமிர்தகழிக் கிராமத்திற்கும் இடையில் அமைந்துள்ளதுதான் வணக்கத்திற்குரிய சடையப்பர் சுவாமிகள் உற்பவித்த மட்டிக்கழி என்னுங் கிராமமாகும்.

இக்கிராமம் முற்காலத்தில் முன்னேற்றம் எதுவுமின்றிப் பின்தங்கிய கிராமமாகவே காணப்பட்டது. இங்குள்ள மக்களிற் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர். சிலர் வத்தை, வாடா என்று அழைக்கப்பட்ட பாய்மரக்கலங்களின் மூலம் கட்டடப் பொருட்களுடன் உப்பு முதலிய உணவுப்பொருட்களையும் வெவ்வேறிடங்களிலிருந்தும் கொண்டு வந்து வர்த்தகம் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் தற்காலத்தில் இக்கிராமம் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்த ஒரு கிராமமாக மாற்றமடைந்துள்ளது. தற்பொழுதும் பெரும்பாலானவர்கள் இயந்திரப்படகுகளின் மூலம் ஆழ்கடல் சென்று மீன் பிடித்து வருகின்றனர். சிலர் வாவியிலும் சிறு தோணிகளில் சென்று மீன்பிடித்து வாழ்க்கையை நடத்துகின்றனர். சிலர் அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர். இன்னும் சிலர் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுப் பொருளீட்டுகின்றனர். இங்கு தென்னை மரங்கள் எங்கும் செறிந்து காணப்படுகின்றன. அத்துடன் மா, பலா, வாழை முதலிய முக்கனி மரங்களும் ஆங்காங்கே தென்படுகின்றன. பாண்டவர் பத்தினியாம் திரௌபதி அம்மனுக்கும் ஓராலயம் இக்கிராமத்தின் மத்தியில் அழகுற அமைந்துள்ளது. தினந்தோறும் செங்கதிரோன் வரவில் கண்விழிக்கும் கிராமங்களுள் மட்டிக்கழியும் ஒன்றாகும். சடையப்பர் சுவாமிகள் பிறந்து வளர்ந்த காரணத்தால் இக்கிராமம் பெருமைக்குரியதாகிறது.

இதன் அருகிலுள்ள வாவியில் "மட்டி" எனும் சிப்பி மீன்கள் ஏராளமாக வாழ்வதால் இக்கிராமம் மட்டிக்கழி என்னும் பெயரைப்பெற்றது.

**சுவாமிகளின் பிறப்பு:-** இந்த மட்டிக்கழிக் கிராமத்தில் பெருமைக்குரிய செல்வன் பட்டங்கட்டி தம்பியப்பா அவர்களும் செல்வி அமராவதி அவர்களும் இறைவன் அருள்பாலிக்க திருமணபந்தத்தில் இணைந்துகொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்தி வந்தனர். அதன் பயனாக அமராவதி அவர்களின் வயிற்றில் கருவாகி உறுப்பெற்றார். சுவாமி அவர்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அன்னையின் வயிற்றில் சிசு வளர்ந்து கொண்டு வந்தது.

வருடாவருடம் மாமாங்கேஸ்வரரின் தீர்த்தோற்சவம் ஆடி மாதம் வரும் அமாவாசை தினத்தன்று இடம்பெறுவது வழக்கம். அவ்வாறே 1909ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி அமாவாசை தினத்தன்று காலை 09.00மணிக்கு மாமாங்கேஸ்வரர் தீர்த்தமாட எழுந்தருளிவரும் அவ்வேளையில் தீர்த்தமாட வந்துகொண்டிருந்த தம்பியப்பா அவர்களிடம் அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் ஓடோடிவந்து அவருக்கு ஓர் ஆண் குழந்தைச் பிறந்திருக்கின்ற செய்தியைக் கூறினார். அதைக் கேட்டதும் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்த தம்பியப்பா அவர்கள் விரைந்தோடி வந்து குழந்தைச் சுவாமியைப் பார்த்துப் பரவசமடைந்தார். மாமாங்கப்பெருமானை உள்ளூர நினைத்து வணங்கி நன்றி செலுத்தினார். மாமாங்கர் தீர்த்தமாடும் தினத்தில் பிறந்ததினாலோ என்னவோ குழந்தை பிற்காலத்தில் வணக்கத்துக்குரிய ஒரு உன்னத நிலையை அடைந்தது.

அந்நாட்களில் பிரசவத்திற்கென்று மருத்துவமனைகள் இல்லாத காரணத்தால் பிரசவங்கள் அவரவர் வீடுகளில்தான் நடைபெறுவது வழக்கம். ஓரிரு நாட்களின் பின் அன்னை அமராவதியுடன் கலந்தாலோசித்து உற்றார் உறவினர்கள் ஆலோசனைக்கு ஏற்ப குழந்தைக்கு "நல்லதம்பி" என்ற நல்ல பெயரை இட்டார் தந்தை தம்பியப்பா அவர்கள். குழந்தையின் குண நலன்கள் தெரியாத நிலையில் ஒரு நல்ல மனிதருக்கு நல்லதம்பி என பெயரிட்டது ஒரு தீர்க்கதரிசனமான செயலென்றே கணிக்கக்கூடியதாக உள்ளது. தெய்வீகத் தன்மை பொருந்திய அத் தினத்தில் இக்குழந்தை பிறந்ததால் அது ஒரு தெய்வக்குழந்தை என்பதை யார் தான் அன்று அறிந்திருப்பார்கள்.!

**சுவாமிகளின் பாலப் பருவம்:-** ஏனையோரைப் போலவே சுவாமிகளும் அன்னையின் மடியிற் கிடந்து பால் குடித்து, பின் தொட்டிற் படுக்கையிற் கையசைத்துக் காலசைத்து, அன்னை தந்தையின் முகம் பார்த்துச் சிரித்து, பாலுக்கு அழுது, குப்புற புரண்டு நிலத்தில் அரைத்து நகர்ந்து, பின் எழுந்திருந்து, கை, கால் ஊன்றித் தவழ்ந்து எழுந்து விழுந்து அடிமேல் அடிவைத்து நடந்து திரிந்து, யாழினுமினிய மழலை மொழி பேசி, புழுதி மண் அளைந்து, அன்னம் புசித்து, ஓடியாடி விளையாடித்திரிந்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சிறுவர் பிராயத்தையடைந்தார்.

அவரது ஐந்தாவது வயதில் தந்தை அவரை பாடசாலையில் சேர்த்து படிக்கவைத்தார். துரதிர்ஷ்டவசமாகத் தந்தையார் தம்பியப்பா அவர்கள் சுவாமியின் ஆறாவது வயது பூர்த்தியாகும் சமயத்தில் இறைவனடி சேர்ந்து விட்டார். அதன்பின்பு 3ம் வகுப்புவரை கல்விகற்ற அன்னாருக்குப் படிப்பில் நாட்டமில்லாமல் போய்விட்டது. அதற்கு இரண்டு காரணங்கள் முக்கியமானவையாக அமைந்திருந்தன. முதலாவது காரணம் சிறு வயதில் தந்தையை இழந்தது. இரண்டாவது காரணம் குடும்பத்தில் வறுமை. அதனால் உழைத்துப் பணம்தேடி தாயையும் காப்பாற்றித் தாமும் வாழவேண்டுமென்ற கட்டாய நிலை சுவாமிகளுக்கு ஏற்பட்டது.

"கொடிது கொடிது வறுமை கொடிது அதனினுங் கொடிது இளமையில் வறுமை" என்ற ஔவையின் கூற்றை நிரூபிப்பதுபோல் அவரது வாழ்க்கை வறுமையின் காரணமாகப் பரிதாபத்திற்குரியதாயிற்று. எனவே சின்னஞ் சிறு வயதில் பணம் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாகப் பாடசாலை படிப்பை 3ம் வகுப்புடன் நிறுத்திக் கொண்டார். படிப்பை விட முக்கியம் தாய்தான் என்பதை அந்த சிறுவயதிலேயே உணர்ந்து கொண்ட உத்தமர் தான் சுவாமி அவர்கள். அன்னைக்காக உழைக்கத்தொடங்கிய சுவாமிகளுக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. சுவாமிகளது 12ஆவது வயதில் அவரது தாயாருக்கு ஏற்பட்ட மரணமே அந்த அதிர்ச்சியாகும். தாயாரின் மரணத்திற்குப்பின் குடும்பத்தில் அனாதரவான நிலைக்குள்ளானார். இருப்பினும் உற்றார் உறவினர்களின் ஆதரவு அவருக்கு சிறிது ஆறுதலையும் தென்பையுங் கொடுத்தது. தனித்துத் தொழில்களில் ஈடுபட்ட காரணத்தால் அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளின்றிச் சுமுகமாக நடந்தது. சிறுவனாக இருந்து இளைஞனாக மாறிக் காளைப்பருவத்தை அடைந்தபோதிலும் உறவினர்களின் கண்காணிப்பிலும் ஆதரவிலுமே அவர் வாழவேண்டிய சூழ்நிலை தவிர்க்கமுடியாததாயிற்று.

# சித்தானைக் குட்டிச் சுவாமிகள் நோய் தீர்த்தமை

சுவாமிகளின் சிறு பிராயத்தில் அதாவது அவரது 13ஆவது வயதளவில் நடந்த ஒரு சம்பவம் இங்கு நினைவுகூறத்தக்கது. சுவாமிகளின் உடலெங்கும் சொறிச்சிரங்குகள் உண்டாகியிருந்தன. அதனால் அவர் மிகுந்த துன்பத்துக்குள்ளானார் எந்த வைத்தியத்திற்கும் அது குணமடையவில்லை அதனால் அவரது உறவினர்கள் தாங்கள் தீர்மானித்தபடி சுவாமிகளைக் காரைதீவிலிருந்த சித்தானைக் குட்டிச்சுவாமியிடம் கூட்டிச் சென்று காட்டினர். அந்நேரம் சித்தானை குட்டி சுவாமிகள் உணவு உட்கொண்டவாறு இருந்தார். அவர்கள் கூறியவற்றை செவிமடுத்த சித்தானைக் குட்டிச்சுவாமி சாப்பிட்டு முடிந்ததும் பாத்திரத்தை கழுவி அதிலிருந்த எச்சீல் தண்ணீரை யாரும் எதிர்பார்த்திராத நிலையில் சடையப்பர் சுவாமிகள் மீது வேகமாக வீசி ஊற்றினார். இதைப்பார்த்ததும் சுவாமிகளோடு வந்தவர்களுக்கு கோபம் உண்டாயிற்று. "ஏன் இவ்வாறு செய்தீர்கள்" என்று சித்தானை குட்டிச் சுவாமி மீது கடிந்தனர். அவரும் "போங்கள் நாளைக்கு வாருங்கள்" என்று கூறினார். அவர்களும் மனவருத்தத்துடன் சுவாமிகளையுங் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தனர். என்ன அதிசயம் மறுநாட்காலை எழுந்து பார்த்தபோது சொறிச்சிரங்குகள் யாவும் இருந்த இடமும் தெரியாது மறைந்து குணமாகியிருந்தன. எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. பின்பு அவர்கள் சித்தானைக் குட்டிச் சுவாமியிடம் சென்று தாங்கள் கடிந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சொறிச்சிரங்கு குணமடைந்ததற்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டு திரும்பினர். இதன் பின்னர் சுவாமிகளுக்கு சித்தானைக் குட்டிச் சுவாமி மீது நம்பிக்கையும் முருகனிடத்தில் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

# சுவாமிகளின் திருமணம்

முதலில் தந்தையை இழந்து பின் தாயையும் இழந்த நிலையில் சுவாமிகள் தனிமையில் இருப்பதை எண்ணி உறவினர்கள் மனம் வருந்தினர். எத்தனை உறவுகள் இருந்தபோதிலும் தாய்க்குப்பின் தாரம் தான் ஒருவனுடைய கருத்தறிந்து செயற்பட்டு நல்லதுணையாக இருக்கமுடியும் என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். எனவே காளைப்பருவ மெய்தி வயது 30ல் அடியெடுத்து வைத்த சுவாமி அவர்கட்கு திருமணம் செய்துவைக்க உறவினர்கள் தீர்மானித்தனர். அதற்கான காலமும் கனிந்து வந்தது. மட்டிக்கழிக்கு மேற்குப்பக்கத்தில் கருவேப்பங்கேணி என்னும் ஊர் உண்டு. அங்கே சுவாமிகளின் உறவினர்களும் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் ஒருவரிடமிருந்து திருமணப்பேச்சு ஆரம்பமாகி வெற்றியிலும் முடிந்தது. அதன்படி அக்காலத்து முறைப்படி பதினாறு (16) வயது நிரம்பிய மங்கை மாரிமுத்துவிற்கும் காளை சுவாமி அவர்கட்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது. புதுமணத் தம்பதிகளின் வாழ்க்கைப் படகு சம்சார சாகரத்தில் அமைதியாகவும், இனிமையாகவும், மகிழ்ச்சியுடனும் நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

# தொழிலின் நிமித்தமான பிரிவு

"பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்ற வள்ளுவர் கூற்றும் "பணமில்லாதவன் பிணம்" என்ற பழமொழியும் வாழ்கைக்குப் பணத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றுகின்றன. குடும்பம் நடத்துவதற்கு பணம் முக்கிய தேவையாகும். பணம் சம்பாதிப்பதற்கு நல்ல தொழில் இன்றியமையாதது. ஊரில் தொழில் செய்து பெற்ற வருமானம் குடும்பத்தை கொண்டு நடத்த போதாமல் இருந்த காரணத்தால் வேறு ஊரில் தொழில் தேடவேண்டிய நிர்ப்பந்தம் சுவாமி அவர்கட்கு ஏற்பட்டது. 1942ம் ஆண்டு இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். திருகோணமலையில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய இராணுவம் அங்கு வேலைக்கு தொழிலாளர்களைத் தேடிய காலம். அக்காலத்தில் பாலமீன்மடு, மட்டிக்கழி, அமிர்தகழி, கருவேப்பங்கேணி, நாவலடி முதலிய இடங்களிலிருந்தும் இளைஞர்கள் தொழிலின் நிமித்தம் சென்றிருந்தனர். இவர்களுக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தினாலும் பிரித்தானியருக்கு தமிழ் தெரியாத காரணத்தினாலும் ஆங்கிலமும் தமிழும் தெரிந்திருந்த திரு. பிலிப்ஜயா அவர்கள் தான் இவர்களைத் திருகோணமலைக்கு அழைத்துச் சென்றவராவர். இவர்களுள் சுவாமிகளும் ஒருவராவர். அங்கு தொழிலுக்காக சென்ற சுவாமி அவர்கள் மாதக் கணக்கில் தொழில் செய்து கொண்டிருந்தார். காடுவெட்டி வெளியாக்குதல், பாதைகள் அமைத்தல், கட்டிடங்கள் நிர்மாணம் செய்தல், சமையல் வேலை செய்தல் முதலிய இன்னோரன்ன வேலைகளில் மற்றவர்கள் ஈடுபட்டிருந்தபோதிலும் அவர் விரும்பியவாறு குழாய்க்கிணற்றிலிருந்து நீரைத் தண்ணீர் தாங்கிக்கு ஏற்றும் வேலையில் அவர் ஈடுபடுத்தப்பட்டார்.

வல்லரசுகள் குண்டுமாரி பொழிந்து உலகை உலுக்கிய அந்தக் காலம் மிகவும் பயங்கரமானதாக இருந்தது. திருகோணமலையிலும் குண்டுகள் வந்து விழத்தொடங்கின இதனால் ஏற்பட்ட அச்சத்தினால் வேலைகளை முடித்தும் முடிக்காமலும் இடைநடுவில் விட்டுவிட்டுத் தொழிலாளர்கள் தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டனர். சுவாமி அவர்கள் துறைமுகத்தின் உட்புறத்தில் வேலை செய்துகொண்டிருந்த காரணத்தால் புறப்படும் போது எவரும் அவரைக் கண்டுகொள்ளவில்லை

இதனால் சுவாமி அவர்கள்குண்டுபட்டு இறந்துவிட்டார் என்று அவர்கள் அனுமானித்தனர். அவர்கள் ஊர் வந்து சேர்ந்ததும் ஊரவர்கள் சுவாமியைப் பற்றி வினவினர். இதனால் வந்தவர்கள் தாங்கள் அனுமானித்தபடி சுவாமிகள் குண்டுபட்டு இறந்துவிட்டதாக சோகந்ததும்பப் பதிலளித்தனர். அந்தக்காலத்தில் தொடர்பாடல் வசதிகள் போதுமானதாக இல்லாதிருந்த காரணத்தினால் ஊரவர் எல்லோரும் அச்செய்தியை நம்பவேண்டியிருந்தது.

## மனைவியின் மறுமணம்

சுவாமிகள் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் மனைவி மாரிமுத்து ஒரு புறம் கதறிஅழ உறவினர்கள் ஒருபுறம் பதறி அழ வீடு அல்லோலகல்லோலப்பட்டது. இதைக்கேள்வியுற்றுப் பிற இடங்களிலிருந்து வந்த நண்பர்களும் உற்றார் உறவினர்களும் தமது துக்கத்தைப் பரிமாறிக்கொண்டிருந்தனர். இளங்குடும்பத்தில் இப்படி ஒரு அவலம் ஏற்பட்டு விட்டதை நினைத்து தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தனர். அவரது உடல் கூட கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்தனர். ஆதங்கப்பட்டனர். எனவே சுற்றத்தாரும், உறவினர்களும் எட்டு நாட்கள் வீட்டில் தங்கியிருந்து சமைத்த உணவும் பரிமாறிக் குடும்பத் துக்கத்தில் கலந்து பங்குகொண்டனர். எட்டாம் நாள் கிரியைகளும் செய்த பின்னர் அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன மாரிமுத்துவின் பெற்றோர் மிகுந்த கவலைக்குள்ளாகி இருந்தனர். தங்களது இளம்பெண் கைம்பெண்ணாக இருப்பதைப்பார்த்து துயரத்தில் ஆழ்ந்தனர். மாரிமுத்து சுமார் இரண்டுவருடங்களாக கவலைகள் மேலிடப் பெற்றோருடன் காலத்தைக் கழித்து வந்தாள். ஒரு இளம் பெண் எவ்வளவு காலத்துக்குத்தான் விதவையாக வாழ்வது? இது பெற்றோரின் மனதில் எழுந்த வினா. இதற்கு அவர்கள் விடைகாணத் தலைப்பட்டனர். விடைதான் மாரிமுத்துவின் மறுமணம். இத்தீர்மானத்தை சுவாமி அவர்களின் உறவினர்களிடம் வெளியிட்டதும் அவர்கள் துயரத்தின் மத்தியிலும் அதற்கு சம்மதம் தெரிவித்தனர். எனவே மாரிமுத்துவின் பெற்றோர் தமது மகளின் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். மறுமணம் நடந்தேறியது. இளம் தம்பதிகள் மணவாழ்க்கையில் ஈடுபடலாயினர்.

# சுவாமிகளின் மனமாற்றம்

சுவாமிகள் நீண்ட காலத்தின் பின் திருகோணமலையிலிருந்து புறப்பட்டு வீடு வந்து அடைந்ததும் அங்கே அவரது மனைவி மறுதிருமணம் செய்திருப்பதைக் கண்டு பேரதிர்ச்சிக்கு உள்ளானார். அதேபோல மனைவி மாரிமுத்துவும் திகைப்படைந்து நின்றார். இக்காட்சியானது சுவாமி அவர்கள் கனவிற்கூட எதிர்பார்த்திராத ஒன்றாகவே இருந்தது. அது போல குண்டுபட்டு இறந்ததாகக் கூறப்பட்ட தன் கனவன் உயிரோடு தன் முன் வந்துநின்றமையும் மாரிமுத்துவின் வாழ்க்கையில் கடைசிவரை எதிர்பார்த்திராத ஒரு காட்சியாகவே இருந்தது. இருவரும் என்ன செய்வதென்று அறியாது அதிர்ச்சிகுள்ளாகி நின்றனர். சுவாமிகளின் உறவினர்கள் அவர் உயிரோடு திரும்பி வந்ததை யெண்ணிப் பேரானந்தமடைந்தனர். ஆனந்தக் கண்ணீர் மல்க அவரைக் கட்டித் தழுவினர். இந்த நிலையில் நடந்த உண்மைச் சம்பவத்தை அவருக்கு எல்லோரும் விளக்கமாக எடுத்தியம்பினர்.

சுவாமி அவர்கள் சிறிது நேரம் சிந்தித்தார். தமக்குள்ளேயே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த சுவாமி அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தார். அதுதான் துறவறம். நல்ல குணங்கொண்ட அவருக்கு நல்ல தம்பி என்ற பெயர் மிகவும் பொருத்தமானதாகவே இருந்தது. மூர்க்க குணங்கொண்ட ஒருவராக அவர் இருந்திருந்தால் அந்தச் சந்தர்ப்பத்தில் விளைவுகள் விபரீதமானவைகளாகவே இருந்திருக்கும். அந்த இடத்தில், தான் நல்லதம்பி தான் என்பதை நிரூபிப்பதுபோல் மனைவியைப் புதியவருடன் வாழ வழிவிட்டுத் தாம் துறவற வாழ்க்கையை மேற்கொள்ளச் சித்தங்கொண்டார். இல்லற வாழ்க்கையில் வெறுப்புற்றார். தமக்கு சீதனமாகக் கொடுத்த சொத்துக்கள் எல்லாவற்றையும் திரும்பவும் எழுதி கையெழுத்திட்டுப் புதுத்தம்பதிகளுக்கே கையளித்தார்.


அத்தோடு அவர் மனைவியுடன் கொண்டிருந்த தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டன. பின்னர் சுவாமி அவர்கள் வேறு பல வெளியிடங்களுக்குச் சென்று சில அன்பர்களுடன் தங்கி நின்று அவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் புரிந்து கொண்டிருந்தார். உதாரணமாக பாலமீன்மடுவைச் சேர்ந்த திரு. த. பொன்னையா என்பவர் குருவிட்ட எனும் இடத்தில் புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அவருடைய அழைப்பின் பேரில் விடுதியில் அவருக்குக் ஒரு உதவியாளராக செயற்பட்டார். அதுபோல் முதலைக்குடா என்னும் இடத்தில் அமிர்தகழியைச் சேர்ந்த திரு. கன கசபை அவர்கள் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த போது அவரது அழைப்பை ஏற்று அங்கு சென்ற சுவாமி அவர்கள் அங்கு தங்கியிருந்து அவருக்கும் ஓர் உதவியாளராக சேவைசெய்திருந்தார். மேலும் இறை சிந்தனையுடன் பல தல யாத்திரைகளில் ஈடுபட்டிருந்த சுவாமிகளுக்கு முருகப் பெருமான் மீது மிகுந்த பக்தி ஏற்பட்டது. இவ்வாறு சுமார் ஆறு வருடங்களைக் கழித்த சுவாமிகள் இனிமேல் தமக்கு உற்றார், உறவினர், நண்பர், சொந்தம் பந்தமெல்லாமே முருகப்பெருமான் தான் என்ற மன உறுதியுடன் துறவற வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்தார். சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை நாடினார். முருகனுக்குத் தொண்டு செய்வதே இனி தமது பணியெனக் கொண்டார். வீட்டுக்கு விடைகொடுத்து மட்டக்களப்பு முகத்துவாரத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள காட்டுப் பகுதிக்குப் புறப்பட்டார்.

# அன்றையத் திராய்மடு

திராய்மடு என்னும் இப்பிரதேசம் மட்டக்களப்பு முகத்துவாரத்திலிருந்து வடக்குப் பக்கமாக கிட்டத்தட்ட இரண்டு மைல் தொலைவில் முல்லையும் (காடும் காடுசார்ந்த இடமும்)நெய்தலும் (கடலும் கடல் சார்ந்த இடமும்) ஒன்றை ஒன்று சந்திக்கின்ற ஓர் இடமாகும். அந்தக் காலத்தில் தற்போது உள்ளது போலன்றி ஒரு காட்டுப் பிரதேசமாகவே இப்பகுதி காணப்பட்டது. அங்கு நீண்ட வாய்க்கால் ஒன்றுடன் சேர்ந்ததாக ஒரு சிறு குளம் அமைந்திருந்தது. அதன் கிழக்குப் பகுதி செழித்து அடர்ந்து வளர்ந்த பிரப்பங்கொடிகளால் சூழப்பட்டிருந்தது. அதன் மேற்குப் பக்கமாக திராய் என்னும் ஒருவகை உணவுப் பூண்டுகள் செழித்து வளர்ந்து பரந்து காணப்பட்டன. அதன் காரணமாகவே இப்பிரதேசம் திராய்மடு என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அப்பெயர் சுவாமிகளாலேயே இடப்பட்டது.

மேலும் இப்பகுதியில் பனை, வம்மி, மாதுரை, வேம்பு, முந்திரி, பாலை, நாவல், ஈச்சை, காரை, வீரை துவரை, மருக்காலை, காயான், விராலி முதலிய மரங்களும் பற்றைகளும் பரந்து நெருக்கமாக வளர்ந்திருந்தன. இவ்விடம் கடற்கரையை அண்மித்த பிரதேசமாகையால் வெள்ளை குருத்து மணல் கொட்டிப் பரப்பப்பட்ட இடம் போல காட்சியளித்தது. மயில்கள் அகவ, குயில்கள் கூவ, காட்டுக் கோழிகள் சத்தமிட, பிறவகைக் குருவிகளும் பறவைகளும் கீச்சிட இவ்விடம் ஒரு சங்கீதக் கல்லூரியா என்று எண்ணத் தோன்றும். அவற்றின் குரல்கள் செவிக்கு விருந்தாகும். பகலில் கொளுத்தும் வெயிலாக இருப்பினும் இளந்தென்றல் வீசி வெப்பத்தைத் தணிக்கும். நெளிந்தும் நேராகவும் காட்டினுள்ளே செல்லும் ஒற்றையடிப்பாதையினூடாகத் தான் இப்பகுதிக்கு அக்காலத்தில் பயணம் செய்ய வேண்டியதாயிருந்தது.

# துறவு வாழ்க்கை



இனி தமக்குத் தந்தை, தாய், குரு, உற்றார் உறவினர்களெல்லாம் முருகனே என்று திடங்கொண்ட மனத்தினராய்ச் சுவாமி அவர்கள் தன்னத் தனியராய் 1950ம் ஆண்டு சித்திரை மாதம் 13ம் திகதி வீட்டை விட்டு புறப்பட்டார். முகத்துவாரத்துக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவில் அடர்ந்திருந்த பற்றைக் காடுகளை வெட்டி வெளியாக்கி அவ்விடத்தில் நின்ற ஒரு வேம்ப மரத்தடியில் வேலொன்றைவைத்து முருகனே கதியென்று வழிபட்டார். அதனருகே தாம் குடியிருப்பதற்காக மரம், தடி, கிடுகு ஆகியவற்றைக் கொண்டு ஒரு குடிசையை அமைத்து அதில் வாழ்ந்து வந்தார். பனை மரத்தினாலான ஒரு கொட்டுக் கிணற்றில் இருந்து தமக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொண்டார்.



இரண்டு காரணங்களுக்காக அவர் தொழில் செய்து உழைக்கவேண்டியிருந்தது. ஒன்று அவரது வழிபாட்டிற்கு தேவையான கற்பூரம், சாம்பிராணி, தேங்காயெண்ணெய் முதலியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக, மற்றது அவருடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுப்பொருட்களை வாங்குவதற்காக. எனவே அவற்றிற்கு தேவையான பணத்தை பெறும்பொருட்டு அவர் காட்டில் விறகு, பனைமட்டை, கம்பு தடிகள் முதலியவற்றை வெட்டி கட்டுகளாக கட்டித் தலையிலும், தோளிலும் சுமந்து நடந்து சென்று ஊரிலே தேவையானவர்களுக்கு அவற்றை விற்பனை செய்வார். மேலும் அங்குள்ள பிரம்புகளை வெட்டிப் பலவகையான கூடைகளையும் கூடுகளையும் இழைத்து அவற்றையும் விற்றுப் பணத்தைப் பெற்றுக் கொள்வார்.

"கும்" என்ற இருட்டில் கூட அவர் எவ்வித பயமும் இன்றிக் காட்டினூடே பிரயாணஞ்செய்யும் துணிவு மிக்கவர். அவர் இருந்த இடத்தை முன்னர் " வாடி" என்று தான் எல்லோரும் அழைத்தனர். நாட் செல்லச் செல்ல அவ்விடம் தெய்வீகத்தன்மை பொருந்தியதாக மாற்றமடைந்த காரணத்தாலும் அவ்விடத்தில் அடியார்களுக்கு உயர்ந்த நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தினாலும் அவ்விடத்தை "ஆச்சிரமம்" என்று அழைக்கத் தொடங்கினர். அது மாத்திரமன்றிப் புராண காலங்களில் வாழ்ந்த முனிவர்களுக்குச் செஞ்சடையிருந்தது. அவர்கள் வசித்த இருப்பிடம் ஆச்சிரமம் என்று அழைக்கப்பட்டது. அது போலவே சுவாமிகளுக்கும் செஞ்சடை உருவாகியிருந்ததால் அவரும் ஒரு முனிவர் என்று மக்களால் கருதப்பட்டார். அதனால் அவரது இருப்பிடமும் ஆச்சிரமம் என்றே அழைக்கப்பட்டது. அந்த ஆச்சிரமத்தைச் சுற்றி துப்பரவு செய்து தென்னங்கன்றுகளை நாட்டினார். அவை பிற்காலத்தில் பயனைக் கொடுத்தன. வெவ்வேறு நோக்கங்களுக்காக திராய்மடுவுக்கு வருபவர்கள் ஆச்சிரமத்தில் சற்று இளைப்பாறி செல்லாது விடுவதில்லை. சுவாமிகளும் கோப்பி தயாரித்து சிரட்டையில் கொடுத்து அவர்களை உபசரிக்கவுந் தவறுவதில்லை. சிரட்டையில் குடிக்கும் கோப்பியின் சுவையோ தனி.

சுவாமிகள் திராய்மடுவுக்கு வந்ததிலிருந்து வருடாவருடம் தல யாத்திரைகளிலும் ஈடுபடலானார். ஈழத்திலுள்ள அனைத்து திருத்தலங்களுக்கும் சென்று அவர் இறை தரிசனம் செய்துள்ளார். கதிர்காமயாத்திரையை எவ்வருடத்திலும் அவர் தவறவிட்டது கிடையாது. யாத்திரிகர்களோடு யாத்திரிகராய் அவரும் பாதயாத்திரையிற் கலந்து கொள்வார். பதினொரு (11) வருடங்கள் அவ்வாறு தொடர்ந்து பாதயாத்திரையில் ஈடுபட்ட சுவாமிகள் திராய்மடுவில் வீற்றிருப்பதும் கதிர்காமக்கந்தனே என்று உணர்ந்துகொண்ட காரணத்தால் கதிர்காம யாத்திரையை நிறுத்திக் கொண்டார். வேறு துறவிகளும் சுவாமிகளுடன் நற்புறவை பேணி இருந்தனர்.

உடலில் தென்பு இருக்கும் வரை பாடுபட்டு உழைத்த சுவாமிகள் பின்னர் வயது மூப்பெய்தி உடல் தளர்ந்ததன் காரணமாகச் சுமைகளை சுமப்பதை நிறுத்திக் கொண்டார். அதற்குப் பதிலாக அவர் தாம் விரும்பிய அன்பர்களின் இருப்பிடங்களுக்கு மாத்திரம் சென்று அவர்கள்மனமுவந்தளிக்கும் நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டு ஆலயத்திற்கு தேவையான பொருட்களையும். அவரது உணவுக்கு தேவையானவற்றையும் கடைகளில் வாங்கி வந்து வாழ்க்கையை நடத்தினார். உடுப்பதற்கு வேட்டி, சால்வை என்பவற்றை அன்பர்களும் அடியார்களும் அவருக்கு அன்பளிப்புச் செய்வதனால் அவற்றிற்கென்று அவர் பணத்தை செலவு செய்வதில்லை. உடையைத் தவிர உணவுக்கும் பூசைக்குந் தேவையான பொருட்களையும் கூட அன்பர்கள் அவ்வப்போது அவருக்கு அன்பளிப்புச் செய்வதுண்டு. இல்லங்களில் அன்பர்கள் விருப்பத்தோடு பரிமாறும் உண்டிகளையும் பானங்களையும் மறுப்பின்றி உட்கொள்வார்.

கோயிலில் பூசையைத் தாமே நடத்துவார். மணி அடித்துச் சங்கூதித் தூப தீபங்காட்டி கந்தசஷ்டி கவசம், தேவார திருவாசகங்கள் பாடி தமது உணவை முருகனுக்குப் படைத்து பூசையை நடத்துவார். ஆலயத்தினுள் அக்கினிக் குண்டம் வளர்த்து நைவேந்தியங்களைஅக்கினிக்கு அர்ப்பணஞ் செய்வார். பூசை முடிவுற்றதும் முருகனுக்குப் படைத்த உணவையே அவர் உட்கொள்வது வழக்கம். அக்கினிக் குண்டத்தில் உண்டாகும் சாம்பலை ஒரு பாத்திரத்தில் சேர்த்தெடுத்து நீரிற் கரைத்து வெயிலிற் காயவைத்துத் திருநீறு தயாரிப்பார். அந்த அரிய கந்தன் திருநீற்றைப் பெறுவதற்கும் அடியார்கள் ஆச்சிரமத்திற்கு வருகை தருவதுண்டு.



# துறவுத் தோற்றம்



சுவாமிகள் பொதுவான உயரமும் மெலிந்த உருவமும் இளஞ் கருநிறமுங் கொண்டவர். வேட்டியை இரட்டைப் பட்டாக மடித்தக் கட்டி இடுப்பிற் சொருகியிருப்பார். ஒரு சிறு சால்வைத் துண்டால் மார்பை போர்த்தியிருப்பார். ஒரு உருத்திராக்கக் காயைக் கழுத்தில் ஒட்டக் கட்டியிருப்பார். திரு நீற்றை நெற்றி நிறையப் பூசியிருப்பார். அதைவிட அவரது முகம், வயிறு, மார்பு, கைகள், கால்கள் எங்கிலும் திருநீறு பூசியிருப்பதைக் காணலாம். உண்டோ இல்லையோ என்று ஐயங்கொள்ளுமளவிற்கு மிகச் சிறிய அளவிலான மீசையும் மிகக் குறுகிய குறைந்த அளவுள்ள தாடியும் அவரது சிரித்த முகத்திற் காணப்படும்.

இவரது தோற்றத்தின் மிக முக்கிய அம்சம் என்னவென்றால் அவரது செஞ்சடாமுடியாகும். 1952ம் ஆண்டு இவ்வவதார புருஷருக்கு முருகனருளால் செஞ்சடை தோன்றியது. பின் அது வளர்ந்து கிட்டத்தட்ட பதின்மூன்று (13) அடிகளையுந் தாண்டி நீண்ட பல புரிகளாக அமைந்திருந்தது. அதைத் தலையிற் சுற்றிக் கட்டியிருப்பார். நித்திரைக்குப் போகும் போது மாத்திரம் நிலத்தில் ஒரு துணியை விரித்துச் சடையை அதில் அவிழ்த்துவிட்டு அவருடலோடு நீட்டிப்போட்டுக் கொள்வார். காலையில் எழுந்ததும் அதை திரும்பவும் தலையிற் சுற்றிக் கட்டிக் கொள்வார். ஒவ்வொரு புரியாகச் சுற்றி கட்டுவதற்கு அவருக்குக் குறைந்தது அரை(1/2) மணித்தியாலமாவது தேவைப்படும். சடையின் நுனிகள் மஞ்சளும் சிவப்புங்கலந்த தங்க நிறத்துடன் அழகாக காட்சியளிக்கும். செஞ்சடை வளர்ந்திருந்த அளவிற்கு அவரது மீசையும் தாடியும் வளர்ந்திருக்கவில்லை.

தோளில் ஒரு முடக்குத் தடியை கொழுவி அதில் எண்ணெய் போத்தல், அரிசி, காய்கறி மற்றும் ஆச்சிரமத்துக்கு தேவையான ஏனைய பொருட்களடங்கிய பை என்பவற்றைக் கொழுவித் தொங்கவிட்டுக்கொண்டு செல்வார். வெளிப்பகட்டு அவரிடம் இல்லாததொன்று. வேறு துறவிகளைப் போல் அவர் காவி வஸ்திரம் அணியவில்லை. பூ நூலும் அணியவில்லை. மயிலிறகு, வேல் முதலிய முருக சின்னங்களையும் சுமந்து கொண்டு திரிந்ததில்லை, உருத்திராக்க மாலைகளைக் கழுத்திலும் கைகளிலும் போட்டுக் கொள்ளவில்லை. அதனால் அவரது தோற்றம் சாதாரணமானதாவே காணப்பட்டது.


அவர் தமது சிவசின்னமான செஞ்சடையை நீர் கொண்டு நனைப்பது கிடையாது. முகத்தையும் உடலையும் நீராற் கழுவிக்கொள்வார். முருகப்பெருமான் தீர்த்தமாடும் நேரத்தில் கூட அவர் தீர்த்தமாடுவதில்லை. அன்பர்களுடன் உரையாடும் போதும், உறவாடும் போதும் அவரின் முகத்தில் புன்சிரிப்பு தவழும். அவர் சாந்தமான முகமும் குரலும் சுபாவமும் கொண்டவர். அவரது உடை, உடம்பெங்கும் சாம்பிராணி கற்பூரவாசனையே வீசும்.


# ஆலயம் உருவான வரலாறு



சுவாமிகள் திராய்மடுவுக்கு வருகை தந்த அன்றைய தினத்தில் அதாவது 13-04-1950 அன்று முன்னர் குறிப்பிட்டது போல் ஒரு வேப்ப மரத்தடியில் வேலொன்றை வைத்து வழிபடத் தொடங்கினார். அவ்வாறு வழிபட்ட அவர் அதில் திருப்தியடையாதவராய் அந்த வேலை நிலத்தில் படாதவாறு சற்று உயரத்தில் வைப்பதற்கு சித்தங்கொண்டார். அதன் படி ஒரு தச்சனின் உதவியுடன் மரம், தடிகள், கிடுகுகள் ஆகியவற்றைக் கொண்டு ஒரு பந்தலை அமைத்தார். அதனுள் ஏறக்குறைய நான்கு அடி உயரத்திற்குப் பீடமொன்றையும் அமைத்து அதன் மேல் அந்த வடிவேலை வைத்து வணங்கினார். தினமும் தாம் சமைத்த உணவை நைவேத்தியமாக வேலின் முன் படைத்து பூசை செய்து வழிபட்டபின்னர் அதை எடுத்து உண்பதுதான் அவரது வழக்கமாக இருந்தது. சிறிது காலத்தின் பின் அக் கிடுகுப் பந்தலைப் பிரித்து நல்ல மரங்களையும் அலுமினியம் தகடுகளையும் கொண்டு பந்தலைச் சற்று பெரிதாக அமைத்தார். முருகன் மீது நம்பிக்கை வைத்த அன்பர்கள் நேர்த்திக்கடனாகப் பொங்கிப் படைத்துப் பூசை செய்யத் தொடங்கிய

காரணத்தால் அந்தப் பந்தலும் போதாதிருந்தது. அதனால் இன்னும் சிறிது காலத்தின் பின் அன்பர்கள் அடியவர்களின் அனுசரணையுடன் மரம், அலுமினியம் தகடு முதலியவற்றைக் கொண்டு அப்பந்தலுக்கு முன்னால் அதைவிட பெரியஅளவில் இன்னுமொரு பந்தலை அமைத்தார். முதற் பந்தலில் வடிவேலைப் பிரதிஷ்டை செய்து வைத்து பிந்திய பந்தலில் நைவேந்தியங்களைப் படைத்து பூசை நடைபெற்றது. இதனால் முதற்பந்தல் மூலஸ்தாபனமாகக் கருதப்பட்டது. இன்னும் சில காலஞ்செல்ல அந்த இரு பந்தல்களையும் உள்ளடக்கியவாறு மரத்தடி கிடுகுகளினால் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. இதில் ஒரு பகுதி சுவாமிகளின் ஆச்சிரமமாக இருந்தது. முன்பு வேறாக இருந்த ஆச்சிரமம் பழுதடைந்திருந்தமையே இதற்கு காரணமாகும். இதையும் அடியார்களின் அனுசரணையுடன் தான் அமைக்க முடிந்தது






இப்படி இவ் வழிபாட்டுத் தலத்தில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது கோயிலைக் கல்லாற் கட்டவேண்டுமென்ற எண்ணம் சுவாமிகளின் மனதில் எழுந்தது. எனவே ஊரிலுள்ள சில அன்பர்களை ஆச்சிரமத்துக்கு அழைத்து அவரது விருப்பத்தை வெளியிட்டார். அதை எல்லோரும் வரவேற்றனர். அதன் படி அதற்கென தெரிவு செய்யப்பட்ட ஒரு செயற்குழு சுவாமிகளின் தலைமையில் நடவடிக்கைகளில் இறங்கியது. அதற்குப் பெருமளவு நிதி தேவையாக இருந்தமையால் பாலமீன்மடு, திராய்மடு, மட்டிக்கழி, அமிர்தகழி, புன்னச்சோலை, நாவலடி, ஊறணி, கருவேப்பங்கேணி, நாவற்கேணி, சீலாமுனை, சத்துருக்கொண்டான் ஆகிய இடங்களில் வாழும் பொது மக்களிடமிருந்து அக் குழு தேவையான நிதியைச் சேகரித்தது.




1974ம் ஆண்டு (திகதி அறிய முடியவில்லை) நல்லதொரு சுபவேளையில் இவ்வாலயத்துக்கான முதலாவது அடிக்கல் சுவாமிகளால் நாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து திருவாளர்கள் தம்பிப்பிள்ளை, கார்த்திகேசு, வைகுந்தராசா, கணேசமூர்த்தி, கோபாலப்பிள்ளை, செல்லத்தம்பி, கீர்த்தி சிங்கம், இராசமணி ஆகியோருடன் இன்னும் பல அடியார்கள் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அடியார்கள் அன்பர்களது நன்கொடைகளைக் கொண்டு தொண்டர்கள் மேற்கொண்ட சிரமதானப்பணிகள் மூலம் ஆலயம் படிப்படியாக நிர்மாணிக்கப்பட்டது. மூலஸ்தானம், உள் மண்டபம், வெளி மண்டபம், வைரவர் பந்தல், தெற்கு வாசல் மண்டபம் யாவும் கட்டி முடிக்கப்பட்டன. சுவாமிகளது காலத்திலேயே 1980ம் ஆண்டு ஆலயத்தை நிர்வகிப்பதற்கென்று ஒரு பரிபாலன சபை முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன் தலைவராக சுவாமிகளின் ஆலோசனைக்கு அமைய திரு.வே. கணேசமூர்த்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரதும் பரிபாலன சபை உறுப்பினர்களினதும் அயராத முயற்சியின் பயனாக ஆலய நிர்மாணப்பணிகள் மற்றும் ஆலய மின்னிணைப்பு என்பனவும் பூர்த்தியடைந்தன.




# ஆலய கும்பாபிஷேகங்கள்





# ஆலய கும்பாபிஷேகங்கள்

ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட பின் கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அடியார்கள் எல்லாரும் சுவாமிகளையே கும்பாபிஷேகம் செய்யும் படி வேண்டிக் கொண்டனர். ஆனால் சுவாமிகள் அதை விரும்பாத காரணத்தால் அதற்கு உடன்படவில்லை. மாமாங்கேஸ்வரர் ஆலய குருக்களையே அழைத்துவந்து கும்பாபிஷேகத்தை செய்யும் படி சுவாமிகள் அடியார்களிடம் வேண்டிக் கொண்டார். அதன் படி அப்போது மாமாங்கேஸ்வரத்தின் பிரதமகுருவாக இருந்த வேதாகம மாமணி இரத்தின பூராணந்தக் குருக்களால் 1987ம் ஆண்டு ஆடி மாதம் 06ம் திகதி ஆலய கும்பாபிஷேகம் முறைப்படி நடத்திவைக்கப்பட்டது. அதிலிருந்து 12வருடங்களின் பின்னர் இரண்டாவது தடவையாகவும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதை இரத்தின பூராணந்தக் குருக்களின் புதல்வரான பிரமஸ்ரீ பூரணசந்திரானந்த சிவாச்சாரியார் முறைப்படி நடாத்திவைத்தார்.




# சுவாமிகளின் மகா சமாதி



சுவாமி அவர்கள் தமக்கு எப்படிப்பட்ட நோய் வந்திடினும் மருத்துவமனைக்குச் செல்வதில்லை என்ற உறுதிப்பாட்டுடனே வாழ்ந்து வந்தவராவார். அவருடைய சமாதி நிலைக்கான காலம் அன்மித்ததாலோ என்னவோ நோய் அவரை மெல்ல மெல்ல அணுகத் தொடஙகியது. அந்நேரம் அவருக்கு வயது 83ஆக இருந்தது. உடல் மெலிந்து நலிந்து பலவீனமுற்றிருந்தார். அவ்வேளையிலும் அவர் மருத்துவமனைக்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டிருந்தார். எனினும் அடியார்கள் அவரை விட்டபாடில்லை. அதனால் அடியார்களின் அன்புக் கோரிக்கையை தட்டிக்கழிக்க முடியாதவராய் மருத்துவமனைக்குச் செல்வதற்கு சம்மதித்தார்.


அதன்படி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு தனி விடுதியில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் ஓரளவு குணமடைந்த நிலையில் அவர் ஆச்சிரமத்திற்கு கொண்டு வரப்பட்டார். மீண்டும் நோயின் பிடியில் சிக்குண்ட சுவாமிகள் மருத்துவமனையில் திரும்பவும் சேர்க்கப்பட்டார். இருப்பினும் நோய் சிறிதளவும் குறைந்த பாடில்லை. கொடு நோயின் ஆக்கிரமிப்பால் அவரது ஆன்மா ஊசலாடிக்கொண்டிருந்தது. வைத்தியர்களும் கையை விரித்தனர். அவரது ஆன்மாவை கொடுநோய் போ போ என்றிட முருகப்பெருமான் வா வா என்றிட பூவுலகநாடகமேடையில் சுவாமிகளின் இறுதிக்காட்சியின் இறுதிக் கட்டம் அரங்கேறிக் கொண்டிருந்தது. மருத்துவமனையில் அந்த இறுதிக்கட்டம் நிறைவடையக் கூடாது என்ற ஆதங்கத்தால் திரு. நா.வைகுந்தராசா அவர்களின் சுய விருப்பத்தின் பேரில் வைத்தியர்களின் அனுமதியுடன் சுவாமிகள் மீண்டும் ஆச்சிரமத்திற்கு கொண்டு வரப்பட்டார்.





அன்றே அதாவது 1992ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ம் திகதி அவரது தெய்வீக ஆன்மா முருகப் பெருமானின் திருவடி நிழலைச் சென்றடைந்தது. மறுநாள் அவரது பொன்னுடல் அவர் ஏற்கனவே விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஆச்சிரமத்திற்குள் அவர் துயிலுமிடத்தில் உரிய விடங்குகளுடன் முறைப்படி சமாதியில் வைக்கப்பட்டது. நாலாபக்கங்களிலுமிருந்து வந்து பெருந்திரளான அடியார்கள் இந்த இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர். சுவாமிகளின் சமாதி ஆலயத்திற் கருகாமையில் மேற்குப் பக்கமாக அழகுற அமைக்கப்பட்டுள்ளது. சமாதியை உள்ளடக்கிய வாறு அறுகோண மண்டபமொன்று அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவை யாவும் பரோபகாரிகளின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டன.

# திராய்மடுவின் வளர்ச்சியும் ஆலயத்தின் இன்றைய நிலையும்



பாலமீன் மடுவிலிருந்து திராய்மடுவுக்குச் செல்லும் முன்னைய ஒற்றையடிப் பாதையானது அன்பர்களினதும் அடியார்களினதும் சிரமதானப் பணிகள் மூலம் கிறவலிட்ட பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் அடியார்கள் ஆலயத்திற்கு வாகனங்கள் மூலமாகப் பயணஞ் செய்யக் கூடிய வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட பகுதி அரசாங்கத்திற்குரிய காணியானதால் காணியற்ற மக்களுக்கு இப்பகுதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதையின் இரு மருங்கும் பொதுமக்களின் இருப்பிடங்கள் பரந்து காணப்படுகின்றன. மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை பொற்றுக்கொள்ளக் கூடியவாறு கடைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் வாழும் சிறார்களின் கல்வியை கருத்திற் கொண்டு ஒரு பாடசாலையும் இப்பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

பெரியஆலமரமொன்றின் கீழ் நாகதம்பிரானுக்குரிய வழிபாட்டிடமும் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கப்பால் சிறிது தூரத்தில் வீரம்மாகாளிக்கென ஆலயம் ஒன்றும் அப்பகுதி மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. வருடாந்த உற்சவமும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடைபெறுகின்றது.

2004ம் ஆண்டு மார்கழிமாதம் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தங்காரணமாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளான மக்களுக்கென்று திராய்மடு முருகன் ஆலயத்திற்கு மேற்குப் புறமாக இருந்த காடுகள் அழிக்கப்பட்டு சில அரசசார்பற்ற நிறுவனங்களினால் நிரந்தரவீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளன. இது ஒரு மாதிரிக்கிராமமாக "திராய்மடு தமிழ் சுவிஸ் கிராமம்" என்று அழைக்கப்படுகின்றது. மக்களின் போக்குவரத்து வசதி கருதி பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

2007ம் ஆண்டு திரு.த. விஜயகுமார் அவர்களின் தலைமையிலான புதிய பரிபாலன சபை ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றது. அச்சபை மிகுந்த உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் செயற்பட்ட காரணத்தினால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் வசந்த மண்டபம், மகாசமாதி அறுகோணமண்டபம், வைரவர் பந்தல், மடைப்பள்ளி, சுற்றுமதில் என்பவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சுற்றுமதில் மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இரவில் பார்ப்பதற்கு அவை கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அத்தோடு ஆலயம், சுற்றுமதில் யாவும் வர்ணம் தீட்டப்பட்டு மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன.

முன்னர் ஆலயத்தின் அருகாமையில் கிழக்குப் பக்கமாக நின்ற மரங்கள் யாவும் இயந்திரங்களைக் கொண்டு வேரோடு பிடுங்கப்பட்டு பிரப்பங்கொடிகளும் பற்றைகளும் அழிக்கப்பட்டு

அவ்விடத்திலிருந்த குளம், வாய்க்கால் என்பவையும் மூடப்பட்டு முருகப்பெருமான் வெளிவீதி வலம் வருவதற்கு ஏற்ற வகையில் குருத்துமணல் பரப்பப்பட்டு அப்பகுதி அழகாக காட்சிதருகிறது. முன்பிருந்த குளத்திற்குப் பதிலாக ஆலயத்தின் முன்பக்கமாக ஒரு சிறு தீர்த்தக் குளமும் அமைக்கப்பட்டுள்ளது. இக் கைங்கரியங்களுக்கும் தாராள மனம்படைத்த அனுசரணையாளர்களின் நிதியுதவியும் திருத்தொண்டர்களின் சிரமதானப்பணியும் இன்றியமையாததாக இருந்தது. அத்துடன் கருங்கற்களைக் கொண்டு அகலமான வாய்க்காலும் அதன் மேல் ஆலயத்திற்கு முன்பாக ஒரு கொங்றீட் பாலமும் அரசசார்பற்ற நிறுவமொன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சுவிஸ்கிராமத்தை தொடர்பு படுத்தும் வகையில் இன்னுமொரு பாலமும் அதனருகில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தைச் சுற்றியிருந்த மரங்கள், பற்றைகள் யாவும் அழிக்கப்பட்டு உற்சவகாலங்களில் அன்னதானம் அளிக்கக்கூடிய விதத்திலும் தேநீர் கடைகள், சிற்றூண்டிச் சாலைகள், விளையாட்டுப் பொருட்களுடன் சமையல் பாத்திரங்கள், உபகரணங்கள் முதலியவற்றுக்கான விற்பனை நிலையங்கள் என்பன அமைக்கக் கூடியவாறும் அவ்விடம் வெட்டைவெளியாக்கப்பட்டுள்ளது. அடியார்களின் உபயோகத்திற்கென நான்கு கிணறுகளும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு அடியவர்களின் அசௌகரியங்களை போக்கும் பொருட்டுக் குழாய் மூலமாக தண்ணீர் பெறக்கூடிய வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அடியார்களின் வசதிகருதிக் கழிப்பிடங்களும் சற்றுத்தூரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முருக்பெருமானின் சமுத்திரதீர்தத்திற்கு வசதியாக கடற்கரைவரை புதியபாதையும் போடப்பட்டுள்ளது. மின்சார வசதிகூட ஆலயத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் முன்னர் என்றும் இல்லாதவாறு இன்று இத் திராய்மடுத் திருத்தலம் புதுப்பொலிவோடும் மெருகோடும் மிளர்கிறதென்றால் மிகையில்லை.

# சுவாமிகளுக்கு உண்டான சோதனைகளும் அவற்றின் விளைவுகளும்

1. முருகன் மீது அசையாத நம்பிக்கை கொண்டவராய் இருந்த போதிலும் சுவாமிகள் ஆரம்பகாலத்தில் சுகயீனமென்றால் மருத்துவமனைக்குச் செல்வது வழக்கமாக இருந்தது. அவ்வாறு ஒரு நாள் சுகயீனமுற்றிருந்த சுவாமிகள் மருந்து எடுப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்று அங்கே நோயாளிகளின் வரிசையில் தாமும் ஒருவராக நின்று கொண்டிருந்தார். தலையிற் சுற்றி கட்டப்பட்டிருந்த செஞ்சடை, மார்பை போர்த்தியிருந்த துணி, தோளில் தொங்கவிடப்பட்டிருந்த முடக்குத்தடி, அதில் தொங்கிய பை மற்றும் போத்தல்கள் ஆகியவற்றைப் பார்த்துச் சுவாமிக்குப் பின்னால் நின்ற ஒருவர் சற்று அருவருப்புடன் மற்றொருவரிடம் தன்னைப் பற்றி கேலியாகவும் கேவலமாகவும் குசு குசுத்துக் கொண்டிருந்தததைச் சுவாமிகளால் அவதானிக்க முடிந்தது. அந்நிகழ்வு அவர் மனதை மிகவும் புண்படுத்தியது. உடனே அவர் மனம் நொந்து முருகனை நினைத்தார். ''நானே மருந்தாக இருக்கும் போது நீ ஏன் மருத்துவமனைக்கு வந்தாய். இன்னும் நீ வரிசையில் நிற்காதே உனது ஆச்சிரமத்திற்கு நீ திரும்பிச்செல்'' என்று முருகன் கட்டளையிட்டது போன்ற உணர்வு அப்போது அவர் மனதில் ஏற்பட்டது. இதுவும் முருகனின் சோதனைதான் என்று எண்ணியவாறு மருந்தெதுவும் எடுக்காதவராய் உடனடியாக அங்கிருந்து வெளியேறினார். அதன் பின் அவர் மருத்துவமனை எதற்கும் சென்றது கிடையாது. (அவரது இறுதிக்கட்டம் விதிவிலக்கானதாகும்.)

2.சுவாமிகள் தவறாது ஒவ்வொரு வருடமும் பாதயாத்திரை செய்து கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பது வழக்கம் ஒரு வருடம் கதிர்காம யாத்திரை செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த தினத்திற்கு முந்திய தினம் வேதனையுடன் கூடிய சோதனை ஒன்று அவருக்கு ஏற்பட்டது. அதாவது அக்கினிக் குண்டத்திற்கு விறகு தேவைப்பட்ட

காரணத்தால் ஒரு மரக்குற்றியை எடுத்து கோடரியாற் கொத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரது வலக்காலில் கோடரி தவறி விழுந்து பெரிய காயத்தை ஏற்படுத்தி விட்டது. குருதியும் பீறிட்டு ஓடத் தொடங்கியது. வலியோ தாங்க முடியாதிருந்தது. இதற்கிடையில் மறுநாள் கதிர்காமத்திற்கும் புறப்பட வேண்டும். என்ன செய்வதென்றறியாது அவர் மனம் தடுமாறியது. கால் வேதனை ஒரு பக்கம் மனவேதனை ஒரு பக்கமுமாகத் தாங்கொணாத் துயரம் அவரை வாட்டியது.

கதிர்காம யாத்திரையை நிச்சயமாகச் செய்யமுடியாதென்பதை உணர்ந்து கொண்ட சுவாமிகள் சிந்திக்கலானார். "இதுவும் முருகனது சோதனைதான். கதிர்காமத்தில் இருப்பதும் முருகன்தான்; திராய்மடுவில் இருப்பதும் அதே முருகன் தான். அதனால் அவரை தரிசிக்கவென்று கதிர்காமம் செல்லவேண்டிய அவசியமில்லை. அவர் எங்குமிருக்கிறார் என்பதை உணர்த்துவதற்காகத்தான். என்னை நடக்க முடியாதவாறு செய்திருக்கிறார் " என்று உணர்ந்து கொண்ட சுவாமிகள் இனி கதிர்காம யாத்திரை செய்வதில்லையெனத் திடசங்கற்பம் செய்து கொண்டார். அன்றிலிருந்து கதிர்காம யாத்திரையை நிறுத்திக் கொண்டார். காலிலேற்பட்ட காயத்திற்குக் கந்தன் திருநீறே மருந்தானது. முருகனின் சோதனைகள் அவரை மேலும் மேலும் புடம் போட்டன.

3."துறவுத் தோற்றம் " என்ற உபதலைப்பின் கீழ் சுவாமிகளின் செஞ்சடை பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. நீளத்திற் பதின்மூன்று (13) அடியையுந் தாண்டிய நீண்ட சடையைத் தமது தலையிற் சுற்றிக்கட்டிக் கொண்டுதான் எப்போதும் இருப்பார். (நித்திரை செய்யும் நேரத்தைத் தவிர) அவர் தமது ஆச்சிரமத்தின் தேவைக்காகவும் ஆலயத்தின் தேவைக்காகவுமே சிரமப்பட்டு உழைக்கவேண்டியிருந்தது. விறகு, கம்பு, தடிகள், பனைமட்டை என்பவற்றை காட்டில் வெட்டி கட்டுக்

கட்டாக கட்டித் தமது சடாமுடிமீது வைத்து சுமந்து சென்று அவற்றை தேவையானவர்களுக்கு விற்றுப் பணத்தைப் பெற்றுக்கொள்வார். அப்பணத்தைக் கொண்டு முன்னர் குறிப்பிட்ட படி ஆலயத்திற்கும் ஆச்சிரமத்திற்குந் தேவையான பொருட்களைக் கடையில் வாங்கிக் கொண்டு ஆச்சிரமத்துக்குத் திரும்புவார்

ஒரு நாள் இரவு ஆச்சிரமத்தில் நித்திரையிலாழ்ந்திருந்த சமயம் முருகன் அவரின் கனவில் தோன்றி “என் மேற் சுமைகளை வைத்து அழுத்தி தினமும் ஏன் என்னை சித்திரவதை செய்கிறாய்? ” என்று ஒரு கேள்வியை கேட்டு விட்டு மறைந்தார். உடனே திடுக்கிட்டு விழித்தெழுந்த சுவாமிகள் சிந்திக்கலானார். தமது செஞ்சடை எவருக்குமே இல்லாத ஒரு தெய்வீகச் சின்னம் என்பதை அறிந்திருந்தும் அதை மறந்தவராய் அதன் மேல் சுமைகளை வைத்து சுமப்பது தெய்வத்தை துன்பத்துக்குள்ளாக்கி அவமதிக்கும் செயலென்பதை அப்பொழுதுதான் அவர் புரிந்து கொண்டார். “முருகா! என்னை நீ மிகவும் சோதிக்கிறாயப்பா. அப்படி மடத்தனமான செயலை இனிமேல் செய்ய மாட்டேன். செய்த தவறுக்கு என்னை நீ தயவு செய்து மன்னித்துக் கொள் முருகப்பா” என்று முருகனை வேண்டிவிட்டு மீண்டும் நித்திரைக்காக நிலத்தில் சாய்ந்தார். இருந்தும் விடியும்வரை அவருக்கு நித்திரை வரவேயில்லை. அன்றிலிருந்து பாரங்களை சடைமேல் வைத்து சுமப்பதை விட்டுத் தோளில் வைத்து சுமக்கலானார்.

(4) கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கையின் போது சுற்றி வளைப்புகளுக்கும் தேடுதல்களுக்கும் திராய்மடு திருத்தலமும் கூட விதிவிலக்காயிருக்கவில்லை. ஒரு நாள் இராணுவத்தினர் இத் திருத்தலத்திற்கும் சோதனையிடும் நோக்கோடு வந்து சுற்றி வளைத்தனர். பாதணிகளுடன் ஆலயத்தினுட் பிரவேசித்து மூலஸ்தானம் வரை சென்று தேடுதல் நடத்தினர்.

அது மாத்திமல்லாது சுவாமிகளையும் பெருந்தொந்தரவுக் குள்ளாக்கினர். சொல்லாலும் செயலாலும் அவரை அவமதித்துத் துன்புறுத்தினர். அங்கிருந்து கிட்டதட்ட ஒரு மைலுக்கப்பாலிலுள்ள மதுரையடி என்னும் இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர். அவரது புனிதமான செஞ்சடையை அவிழ்த்துக் காட்டும் படி கட்டளையிட்டு துன்புறுத்தினர். அதற்குள் ஒன்றும் இல்லையென்று சுவாமிகள் கூறியபோதிலும் அவரை அவர்கள் விட்டபாடில்லை. அதை ஏற்றுக் கொள்ளாமல் எவ்வித மதிப்பு, மரியாதையுமின்றித் தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தனர். பின்னர் அவர்களின் தொந்தரவு தாங்க முடியாதவராய் இறுதியில் சடையை அவிழ்த்தார்.

இராணுவத்தினர் எதிர்ப்பார்த்தபடி அதனுள் எதுவும் இருக்கவில்லை. சடையின் புரிகளையும் அவற்றின் நீளத்தையும் கண்டு அவர்கள் அஞ்சி நடுங்கினர். அப்புரிகள் அவர்களுக்கு பாம்புகள் போல் காட்சியளித்தனவோ என்னவோ தெரியவில்லை. நடுக்கத்துடன் அவர்கள் சடையை உடனடியாக கட்டும்படி கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர். சுவாமிகள் மனம் மிக நொந்தவராய் முருகனை நினைத்துக் கொண்டு சிரமத்துடன் சடையைக் கட்டிக்கொண்டு ஆச்சிரமத்திற்குத் திரும்பினார். சுவாமிகளின் முனிவு காரணமாக இதில் சம்பந்தப்படடிருந்தவர்கள் முருகப்பெருமானின் தண்டனைக்கு உள்ளானதாக பின்னர் அறிய முடிந்தது.



# அற்புத நிகழ்வுகள்

(1) காலிற் கோடரி விழுந்ததன் பின்னர் கதிர்காமத்துக்கு பாத யாத்திரை செய்வதை நிறுத்தி கொண்டதைப் பற்றி ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ளது. அதன் பின் தீர்த்தோற்சவத்தை அமைதியான முறையிலும் மிகவும் எளிய விதத்திலும் திராய்மடுவில் நடத்துவதுதான் அவரது வழக்கமாக இருந்தது.

ஒரு வருடம் கதிர்காம தீர்த்தத்திற்கு முந்திய தினம் தீர்த்தத்திற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்டு ஊர் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் ஓரிடத்தில் வேரொன்று காலில் தடக்கவே நிலத்தைக் குனிந்து பார்த்தார். என்ன அதிசயம், அங்கே வள்ளி தெய்வானை சகிதம் ஆறுமுகப் பெருமான் மயிலில் அமர்ந்திருக்கும் ஈயத்தாலான சிறிய விக்கிரகமொன்று அவர் கண்ணிற் தென்பட்டது. உடனே அதைத் தமது இரு கைகளாலும் எடுத்துக் கண்ணிலொற்றிக் கொண்டு சிந்தித்தவாறு நடையைத் தொடர்ந்தார்.

"நாளையத் தினம் ஆறுமுகனுக்குக் கதிர்காமத்தில் தீர்த்தம். அதனாற்தான் அப்பெருமான் இன்று எனக்குக் காட்சி கொடுத்திருக்கிறார்" என்று எண்ணிய அவர் "முருகா! எல்லாம் உன் சித்தம்" என்று மனதிற் கூறியவாறு ஊர் மனைகளிற் சேர்த்த நிதியைக் கொண்டு தீர்த்தத்திற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்து மறுநாட் காலையில் தீர்த்தத்தைத் திராய்மடுவில் எளிய முறையில் நடத்தி வைத்தார். வேறெந்த விக்கிரகமுமல்லாது முருகனது விக்கிரகமே அன்றையத் தினத்திற் காட்சி கொடுத்தது அதிசயமான ஒரு நிகழ்வல்லவா.



(2) இறுதியாகச் சுவாமிகள் கடும் நோய்வாய்ப் படுவதற்கு முன்னதாக ஒருநாள் திராய்மடுத் திருத்தலத்திற்கு என்றுமே அறிமுகமில்லாத இரு அன்னியர் வருகை தந்திருந்தனர். சுவாமிகள்நலிவுற்றிருந்த காரணத்தால் அந்நேரம் பூசை செய்யும் நிலையில் அவர் இருக்கவில்லை. அதனால் அங்கு பூசை செய்வதற்கு அவருடன் மிகவும் நெருக்கமானவரும் அவரது நம்பிக்கைக்குப் பாத்திமானவருமான (தற்போதைய தர்மகர்த்தா) திரு.நா.வைகுந்தராசா அவர்களை அனுமதித்திருந்தார்.

அடியார் வைகுந்தராசா அவர்கள் அன்று ஏதோ ஒரு மனச்சஞ்சலத்தோடு ஆலய மூலஸ்தானத்தின் பின் புறமாக நிலத்திற் சாய்ந்து படுத்திருந்தார். அவ்விடத்தில் சுவாமிகளும் பிரசன்னமாயிருந்தார். அப்பொழுது அங்கு வந்திருந்த அந்த அன்னியர்கள் இருவரில் ஒருவர் அவ்விடத்தில் சயனித்திருந்த அடியார் வைகுந்தராசா அவர்களின் தோளைத் தட்டி "நீ பெரும் சஞ்சலத்தோடு படுத்திருப்பது தெரிகிறது. சஞ்சலப்படுவதில் பிரயோசனம் எதுவுமே இல்லை. எல்லாம் நன்றாகவே நடக்கும். நீ எழுந்து பூசையை நடத்து" என்றார். வைகுந்தராசா அவர்கள் எழுந்திருந்தார். வந்தவரிடம் நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன? எங்கிருந்து வருகிறீர்கள்? என்றெல்லாம் கேள்விகணைகளைத் தொடுத்தார் அடியார் வைகுந்தராசா அவர்கள். "நானும் உங்களைப் போல் ஒரு அடியார்தான். என் பெயர் ஞானபண்டிதன். நாங்களிருவரும் உகந்தையிலிருந்து வந்திருக்கிறோம்" என்று விடையளித்த அன்னார். சுவாமிகளைப் பார்த்து " உங்களது சமாதி நிலை மிகவும் நெருங்கிவிட்டது என்று எனக்குப் பணிவிடையாகி இருக்கிறது. அதை தெரியப்படுத்துவதற்காகவே இருவரும் இங்கு வந்தோம்" என்றார். பின்னர் அவ்விருவரும் ஆலயத்தைச் சுற்றி பார்வையிட்டதின் பின் அவ்விடத்திலிருந்து விடைபெற்றுச் சென்றனர்.



அவர் (ஞானபண்டிதர்) அவ்வாறு கூறியதைக் கேட்டு எல்லோரும் பெரும் ஆச்சரியம் அடைந்தனர்."யார் இந்த ஞானபண்டிதன்" என்று எல்லோரும் சிந்திக்கலாயினர். அவர் முருகப்பெருமானாகத்தான் இருக்குமோ என்று ஐயங்கொண்டனர். எனவே அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்பதை அவதானிக்க ஆவல் கொண்ட அடியார் வைகுந்தராசா அவர்களும் அவ்விடத்தில் பிரசன்னமாயிருந்த ஜே. பிரேமதாஸ என்பவரும் அரவமேதுமின்றி மெல்ல மெல்ல அவர்களைப் பின்தொடர்ந்து சென்றபோது இடையில் அவர்களைக் காணாது திகைத்தவர்களாய் ஆச்சிரமத்துக்குத் திரும்பினர்.

அவர்கள் ஞானபண்டிதனும் அவருடன் வந்த நபரும் இடையில் மாயமாய் மறைந்த செய்தியைக் கூறவே அந்த ஞானப்பண்டிதன் முருகப்பெருமான் தான் என்று எல்லோரும் ஊர்ஜிதம் செய்து கொண்டனர். மயிர்க்கூச்சரிய எல்லோரும் முருகனை வழிபடலாயினர். அன்றைய தினத்திலிருந்து இரு ஆண்டுகளின் பின்புதான் சுவாமிகள் கடும் நோய்வாய்ப் பட்டு மகாசமாதியடைந்தார். அடியார் திரு. வைகுந்தராசா அவர்களே இப்பொழுது திராய்மடு திருத்தலத்தின் தர்மகர்த்தாவாகவும், பிரதம குருவாகவும் செயற்பட்டு அங்கேயே தங்கியிருந்து பூசை செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். இது அற்புதங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

(3) பாலமீன் மடுவில் மாணிக்கம் என்றழைக்கப்பட்ட முதியவர் ஒருவர் ஒரு நாள் திராய்மடுவுக்குச் சென்று அங்கு ஆச்சிரமத்திற்கு சமீபமாக நின்ற பனைமரங்களின் கீழே விழுந்து கிடந்த பனை மட்டைகளை வெட்டி ஒரு கட்டாகக் கட்டிக்கொண்டார். பின்னர் அக்கட்டைத் தூக்கிப் பார்த்தார். அவரால் அதைத் தூக்க முடியவில்லை. உடனே அவர் ஆச்சிரமத்திற்கு வந்து சுவாமிகளை அழைத்தார். சுவாமியும் வந்தார் "சுவாமி! பனைமட்டைக் கட்டைத்

தூக்கினேன் தூக்க முடியவில்லை. மிகவும் பாரமாக இருக்கிறது. தயவுசெய்து அதை தோளில் வைத்து தூக்குவதற்கு கொஞ்சம் உதவி செய்வீர்களா? " என்று அவர் கேட்டதும் "ஓம் அதுக்கென்ன" என்று கூறி சிறுசிரிப்பையும் உதிர்த்திவிட்டு அவருடன் சென்ற சுவாமிகள் பனைமட்டைக் கட்டைத் தூக்கித் தோளில் வைத்துவிட மாணிக்கம் அவர்களும் அதைச் சுமந்துகொண்டு பாலமீன் மடுவை நோக்கி சென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது நடுவழியில் சுவாமியை சந்தித்தார். அவருக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருந்தது. என்ன நடந்ததென்றே புரியாமல் அவர் திகைத்து நின்றார். இதென்ன ஆச்சரியம்! ஆச்சிரமத்தில் வைத்து பனைமட்டைக் கட்டைத் தூக்கிவைதது விட்ட சுவாமிகள் அவர் எதிரே வந்துகொண்டிருந்தால் ஆச்சரியமாகத்தானே இருக்கும். அப்பொழுது அவர் "சுவாமி! இந்தப் பனைமட்டைக் கட்டை ஆச்சிரமத்தில் வைத்து நீங்கள் தானே தூக்கி வைத்தீர்கள், இப்பொழுது என் எதிரே வந்து கொண்டிருக்கிறீர்களே, அது எப்படி?" என்று வினவ சுவாமிகளும் "நான் இக்கட்டை அப்படித் தூக்கி வைக்கவில்லையே. தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு இப்பொழுதுதான் ஆச்சிரமத்திற்குச் செல்கிறேன் என்று பதிலளித்து அவரது வழக்கமான கலகலவென்ற சிரிப்புடன் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுதுதான் மாணிக்கம் அவர்களுக்கு உண்மை புலப்பட்டது. பனை மட்டைக் கட்டை தூக்கிவைத்து உதவியது முருகப்பெருமானே தான் என்பதை உணர்ந்து மயிர்க்கூச்செறிய அவர் பாலமீன்மடுவை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். சுவாமிகளுக்கும் அந்த உண்மை மிகத் தெட்டத்தெளிவாக தெரிந்தது. இது முருகனின் திருவிளையாடல் தான் என்று எண்ணியவாறு திராய்மடுவை நோக்கி நடந்து கொண்டிருந்தார் சுவாமிகள்.

(4) அது மார்கழி, மாதம் திருவெம்பாப் பூசை நடந்துகொண்டிருந்த காலம். ஒரு குறிப்பிட்ட தினம் பூசைக்குரிய உபயகாரர்கள் ஆலயத்திற்கு சமுகம் தரவுமில்லை, பூசைக்குரிய ஒழுங்குகள் எதையும் செய்யவுமில்லை. காரணம் என்னவென்று கூட அறியமுடியாதிருந்தது. ஆலயத்தில் சுவாமிகளும் அங்கிருந்த அடியார்களும் உபயகாரர்களின் வரவை வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். பூசை அதிகாலையில் தொடங்கி சூரியன் உதிக்குமுன் நிறைவடைய வேண்டும். உபயகாரர்கள் வருகை தராதவிடத்து பூசை நடைபெறுவதற்கே வாய்ப்பில்லை. எனவே என்ன செய்வதென்றறியாது அனைவரும் கவலையிலாழ்ந்திருந்தனர்.

சுவாமிகளுக்கு முருகன் மீது அளவுகடந்த நம்பிக்கை உண்டென்பது யாவரும் அறிந்த விடயந்தான். எனவே “இன்றைக்குப் பூசை எப்படியாவது நிச்சயம் நடந்தே தீரும். நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை” என்று அங்கிருந்தவர்களை சுவாமிகள் தேற்றிவிட்டு அவர்களுக்குத் தெரியாதவாறு “என்னப்பா முருகா உனக்கு இன்று பூசை இல்லையா?” என்று மனதுக்குள் உருக்கமுடன் வினவிக்கொண்டிருந்தார். அவ்வேளை ஆலயத்தின் மேற்குப் புறமாக சிலர் வந்து கொண்டிருந்ததை அங்கிருந்தவர்கள் அவதானித்தனர். அவர்கள் சத்துருக்கொண்டான் என்னும் ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் அனுமானித்தனர். தலைகளிலும் தோள்களிலும் கைகளிலும் சுமைகள் காணப்பட்டன. அவர்கள் மெல்ல மெல்ல ஆலயத்தை வந்தடைந்ததும் அவர்களிடம் பூசைக்குரிய பொருட்களே காணப்பட்டன.

அதைக் கண்ணுற்ற சுவாமிகள் உடனே அங்கிருந்தவர்களிடம் “நான் என்ன சொன்னேன்? இன்று பூசை நிச்சயம் நடந்தே தீரும் என்று கூறினேனோ இல்லையோ? பார்த்தீர்களா முருகப்பெருமானின்

திருவிளையாடலை" என்று கூறி வழக்கமான சிரிப்பை உதிர்த்து மகிழ்ந்ததுமல்லாது முருகனில் தான் கொண்ட நம்பிக்கை வீண்போகவுமில்லை என்பதையும் நிருபித்திருந்தார். அதை அவதானித்த அனைவரும் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். அன்று பூசை மிகச்சிறப்பாக நடந்தேறியது. உரியஉபயகாரர்கள் அன்று பூசையைச் செய்யத் தவறியிருந்த போதிலும் யாரோ ஒரு அன்பர் அன்றைய உபயகாரராய்ச் சமுகங்கொடுத்தமை முருகனின் திருவிளையாடல் தான் என்பதை யார் தான் மறுக்கமுடியும். எதிர்பாராமல் நிகழ்ந்த இச்சம்பவம் அதிசயத்துக்குரியதொன்றல்லவா.

(5) சுவாமிகள் மரணப்படுக்கையில் இருந்த அன்றைய தினம் அதாவது 1992-9-24 அன்று அடியார்கள் பலர் ஆச்சிரமத்திற்கு வெளியே குழுமியிருந்தனர். அவரது ஆத்மாவானது உடலை விட்டு வெளியேறும் நிமித்தம் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது. எல்லோரும் கந்தசஷ்டி கவசம் மற்றும் தேவார திருப்புராணங்களைப் பாடியவண்ணமிருந்தனர். சிறிது நேரத்தில் சுவாமிகள் தமது பொய்யுடலை விட்டு முருகப்பெருமானின் திருவடிநிழலைச் சென்றடைந்தார்.

அந்நேரம் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அந்த மாலைப்பொழுதில் ஒரு ஒளிக்கீற்று ஆகாயத்தில் பறந்து சென்றுகொண்டிருந்ததை அனைவரும் அவதானித்தனர். முருகப்பெருமான் மயிலில் வந்து சுவாமிகளை அழைத்து செல்வதாக கூறிக்கொண்டு அவ்வொளிக்கீற்று சென்ற திசைநோக்கி சிரம்மீது கரங்களைக் கூப்பிய வண்ணம் முருகா! முருகா! என்றும் அரோகரா, அரோகரா என்றும் கோசமிட்டுக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்தவாறு பக்திப்பரவசமாய் நின்று கொண்டிருந்தனர். சுவாமிகளது இன்னுயிர் பிரிந்த நேரம் அந்த ஒளிக்கீற்று ஆகாயத்தில் பறந்து சென்றதும் ஓர் அதிசயமான நிகழ்வே.



(6) அன்றொருநாள் செல்லப்பொன் என்னும் அடியார் ஒருவர் ஆலயத்திற்கு வந்திருந்தார். அப்போது வேறு அடியார் எவரும் அங்கு இருக்கவில்லை. அவர் கல்லில் சந்தனத்தை அரைத்துக் கொண்டிருந்த போது ஒருவர் துவிச்சக்கரவண்டியில் வந்திறங்கி அதை உருட்டிக்கொண்டு ஆலயத்திற்கு வந்தார். அவர் வரும் போது கையில் ஒரு குடையை வைத்துக் கொண்டு அதை சுற்றி சுழற்றியவாறு வெள்ளைச் சட்டை அணிந்த ஒரு சிறுமி நின்றுகொண்டிருந்தாள். அதை செல்லப்பொன் என்பவர் அவதானிக்கத் தவறவில்லை.

அவர் ஆலயத்தை வலம் வந்து வணங்கிவிட்டுப் பார்த்தபோது அச்சிறுமியைக் காணவில்லை. உடனே அவர் அங்கிருந்த அடியாரிடம் "உங்களோடு ஒரு வெள்ளைச்சட்டை அணிந்த சிறுமி வந்து ஒரு குடடையை சுழற்றிக்கொண்டு நின்றாளே. அந்தச் சிறுமியைக் காண்வில்லையே எங்கே அந்தச் சிறுமி"? என்று வினவினார். "அதற்கு அவர் "நான் அப்படி ஒரு சிறுமியையும் காணவில்லையே" என்று பதிலளித்தார். உடனே இருவரும் பரபரப்படைந்து சிந்திக்கலாயினர். நின்ற சிறுமி திடீரென மறைந்த மாயமென்ன? இது விடைகாணாத ஒரு வினாவாக இருந்தது. இருப்பினும் அது முருகன் காட்டிய அற்புதக் காட்சியே என்று அவர்கள் ஊகித்துக் கொண்டனர்.

(7)ஆலயத்தைக் கல்லால் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் மரம், தடி, கிடுகுகளைக் கொண்டு ஒரு ஆலயம் முன்பக்கமாக வேறொரு இடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் அதில் முருகனுக்குப் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது அடியார்களுக்கு மதியில் திருமதி. செல்லப்பொன் கார்த்திகேசு அவர்களும் கையேந்திநின்று முருகப்பெருமானிடம் தமது குறைகளை முறையிட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளையில் அவ்வாலயத்தின் அருகில் இருந்த அலரிமரத்திலிருந்து ஒரு பூ அவரது ஏந்திய கரங்களில் வந்து விழுந்தது. அதைப் பார்த்து ஆச்சரியடைந்த அவர் முருகனின் ஆசிர்வாதம் கிடைத்து

விட்டதாக எண்ணிக் கண்ணீர் மல்க வழிபட்டார். அந்தப் பூ வேறெங்காவது விழுந்திருக்கலாமல்லவா ஆனால் அப் பூ அவரது ஏந்திய கரங்களில் விழுந்தமை அதிசயமானதும் அபூர்வமானதுமான ஒரு சம்பவமென்றால் அது மிகையாகாது. அப்பூவை அவர் முருகப்பெருமானக்கே அர்ப்பணித்தார்.

(8) இது அன்மையில் நிகழ்ந்த ஒரு அதிசயம். ஆலயத்தின் மேற்குப் பக்கமாகவும் ஆலயத்தை அண்மித்துள்ளதுமான திராய்மடு தமிழ் சுவிஸ்கிராமத்தில் பாஸ்கரன் என்னும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவர் வாழ்ந்து வருகிறார். அவரது இல்லமும் ஆலயத்திற்கு சமீபமாகவே உள்ளது.

ஒரு நாள் மாலை நேரம் சற்று உலாத்துவதற்கு எண்ணியவராய் வீட்டை விட்டு வெளியே வந்து வீட்ரோரமாய்ச் செல்லும் பாதையில் நின்றார். அப்போதுதான் இவ்வதிசயம் நிகழ்ந்தது. ஆலயத்தின் பக்கமாக உள்ள வெளியில் மூன்று பெரிய பனைமரங்கள் அவரது கண்களுக்குத் தென்பட்டன. அவை அவ்விடத்தில் ஒருபோதுமே இருந்தவையல்ல. அவருக்கு மயிர்க்கூச் செறிந்தது. ஆச்சரியத்துடன் அச்சமும் கூடவே வந்தது. உடனே ஆலய தர்மகர்த்தாவான திரு. வைகுந்தராசா அவர்களைக் கூவியழைக்க எத்தணித்தார்.ஆனால் அவரால் வாய்திறந்து அழைக்க முடியில்லை. தொண்டை அடைத்து விட்டது. வாயிலிருந்து பேச்சே வரவில்லை. சத்தமும் எழவில்லை. அதிர்ச்சியினால் அவர் நடுநடுங்கி நின்றார். பனை மரங்கள் மூன்றும் உடனே அவ்விடத்திலிருந்தும் மறைந்து விட்டன.

தொண்டைக்குத் தெரிந்த கைமருந்துகள் செய்தும் பலனளிக்காது போய்விட்டது. எனவே அச்சங்கொண்ட நிலையில் அவர் ஆலயத்திற்குச் சென்று முருகனை வணங்கி வாய் பேச வைக்குமாறு இரந்து அழுது நின்றார். அவ்வாறு வழிபட்டு மூன்று

நாட்களின் பின்னரே அவரது வாய் பேசக்கூடிய தன்மையை பெற்றது. கண்ணுக்குத் தரிசனமான தெய்வீக அற்புதங்களை பிறரிடம் கூற எத்தணிக்கும் போது அவ்வாறு ஏற்படும் என்றும் முருகன் தான் அதைக் கூறவிடாது தடுத்து வாயைக் கட்டியிருக்கிறார் என்றும் இந்நிகழ்ச்சியை கேள்வியுற்றவர்கள் கூறிக்கொள்கின்றனர். நோக்குமிடத்து இந்நிகழ்வும் முருகப்பெருமான் காட்டிய அற்புதங்களில் ஒன்றென்றே கூறமுடிகிறது.

(9) முதற் கூறிய நிகழ்வையடுத்து அதேபோன்ற நிகழ்வொன்று இன்னொருநாள் இடம்பெற்றது. அந்தச் சுவிஸ்கிராமத்திலேயே குடியிருக்கும் கோபியென்னும் சிறுவனொருவனுக்கே முருகன் இவ்வதிசயத்தைக் காட்டியுள்ளார். ஒரு நாள் மாலை வேளையில் மேற்கூறப்பட்ட மூன்று பனைமரங்கள் நின்று மறைந்த அதே இடத்தில் திடீரென மூன்று தீப்பொறிகள் சத்தமெதுவுமின்றி ஆகாயத்திலிருந்து வந்து விழுந்ததை வெளியில் நின்ற அச்சிறுவன் அவதானித்தான். உடனே அவனுக்கு கையுமோடவில்லை காலுமோடவில்லை. அச்சத்தில் கத்தியவாறு தனது தந்தையிடம் ஓடிப்போய் அது பற்றிக் கூறினான். பையனுடன் தந்தையும் வந்து பார்த்தபோது அவ்விடத்தில் எதையும் காணமுடியவில்லை. அவரும் ஆச்சரியமடைந்தவராய் முருகனை நினைத்துக் கொண்டு வீடு சென்றார்.

# சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள்

1.கதிர்காமத்திலுள்ள வள்ளிமலைக்குட் பிரவேசிப்பதும் அதை தரிசிப்பதும் இலகுவான காரியமல்ல. அதை ஒரு முடியாத காரியமாகவே எல்லோரும் கருதினர். காரணம் கடும் அனல்வீச்சு. ஒரு முறை வள்ளி மலையைத் தரிசிப்பதற்காக அதன் முன்னால் பல துறவிகள் வரிசையில் நின்றனர். அவர்களுள் சடையப்பர் சுவாமிகளும் ஒருவராக நின்றிருந்தார். அந்த மலையில் உண்டான அனல் வீச்சைத் தாங்கமுடியாமல் அவ்வரிசையில் நின்றவர்கள் ஒவ்வொருவராகப் பின்வாங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் சுவாமிகளோ அவ்விடத்தை விட்டு நகரவில்லை. அனல்வீச்சு ஒரு பொருட்டாக அவருக்கு தென்படவில்லை. அவர் மாத்திரம் எவ்வித தயக்கமும் இன்றி அதனுள் பிரவேசித்துத் தரிசித்துவிட்டுத் திரும்பினார் என்றால் அதற்கு அவரது உண்மைத் துறவறமும் முருகனிடத்தில் அவர் வைத்திருந்த அசையாத பக்தியும் உறுதியான நம்பிக்கையுந்தான். காரணமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

2.அண்மையில் அமரராகிவிட்ட கவிஞர் முத்தழகு அவர்கள் ஒரு கிறிஸ்தவராவார். இருப்பினும் இந்துசமய கலாசாரங்களிலும் சற்று ஈடுபாடு கொண்டிருந்தார். முன்னர் ஒரு முறை அவர் திராய்மடுத் திருத்தலத்திற்கும் வருகை தந்திருந்தார். அவர் சுவாமிகளைக் கண்டு வணங்கி உரையாடிவிட்டு ஆலய வழிபாட்டிலும் ஈடுபட்டார். அப்பொழுது சுவாமிகள் ஆலய வாசலில் முத்தழகு அவர்கட்கு முன்னால் சிறிய கற்பூரக்கட்டு (பக்கற்) ஒன்றைக் கொளுத்தி வைத்தார். அது பற்றிக் கொண்டிருந்தது. முத்தழகு அவர்களும் அதைப்பார்த்துக் கொண்டிருந்தார். என்ன அதிசயம் ஐந்து நிமிடங்கள் எரிந்து முடியக் கூடிய அக்கற்பூரப்பக்கற் எரிந்து முடிவதற்கு 45நிமிடங்கள் எடுத்தன. அது முத்தழகு அவர்கட்கும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது மல்லாது சுவாமிகளிடத்தில் ஒரு பயபக்தியையும் ஏற்படுத்தியது.

3. சடையப்பர் சுவாமிகளுடன் மயிலர் சுவாமியும் இருந்த காலத்தில் ஒரு நாள் கோப்பி தயாரிப்பதற்கு மயிலர் சுவாமி ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அக்கினி குண்டமும் எரிந்து கொண்டிருந்தது. இருப்பினும் வெளியில் வேறு ஒரு அடுப்பை மூட்டி அதில் கோப்பியைத்தயாரிக்க எண்ணி வெளியில் சென்றார். அப்போது அதைக் கண்ணுற்ற சடையப்பர் சுவாமிகள் அக்கினிக் குண்டத்திலேயே கோப்பியைத் தயாரிக்கும் படி மயிலர் சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டார். ஆனால் அவ்வேண்டுகோளை மயிலர் சுவாமியின் மனம் எற்க மறுத்துத் தடுமாறிக் கொண்டிருந்தது. முருகனுக்குரிய அக்கினிக் குண்டத்தில் கோப்பியைத் தயாரிப்பது படு பிழையான செயலென்று எண்ணித் தயங்கியபடி நின்றார் மயிலர் சுவாமி அவர்கள். அதைப்பார்த்த சுவாமிகள் அக்கினிக்குண்டத்திலேயே கோப்பியைத் தயாரிக்கும் படியும் அதில் பிழையேதுமில்லை என்றும் சுவாமிகள் மறுபடிம் கேட்டுக் கொண்டார். அதற்கமைய கோப்பி அக்கினிக் குண்டத்திலேயே தயாரிக்கப்பட்டது. அதைக் குண்டத்திலிருந்து இறக்கி நிலத்தில் வைத்த அதே கனத்தில் கொதித்த கோப்பி குளிர்ந்திருந்தது. மயிலர் சுவாமி ஆச்சரியமடைந்தார்.

4. ஆலயத்தின் முன்னாள் தலைவரும் இன்றைய ஆலோசகருமான திரு. வே. கணேசமூர்த்தி அவர்களது புதல்வன் குழந்தைப் பருவத்தில் அதாவது 06வயது வரை மழலைக்கதை பேசித்திரிந்துவிட்டுப் பின்னர் இரண்டு வருடங்களாகப் பேசும் தன்மையை இழந்திருந்தான். இது தந்தைக்கும் தாய்க்கும் பெரும் கவலையை தோற்றுவித்தது. வாய்பேச வைப்பதற்கு எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. இருந்தும் முயற்சியை கைவிடவில்லை. திராய்மடு முருகன் மீது அளவுகடந்த பக்தியும் நம்பிக்கையும் சுவாமிகளின் மேல் அதீத பற்றுதலும் விசுவாசமும் கொண்டிருந்த கணேசமூர்த்தி அவர்கள் ஒருநாள் பையனை திராய்மடுத் திருத்தலத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே சுவாமிகளிடம் விடயத்தை கவலையுடன் தெரியப்படுத்தினார். அதை மிகுந்த கரிசனையுடன் செவிமடுத்த

சுவாமிகள் தமது வழக்கமான கலகல வென்ற சிரிப்புடன் பையனின் கையைப் பிடித்த வண்ணம் ஆலயத்தினுள் அழைத்துச் சென்றார். சிறிது நேரத்தின்பின் பையனை வெளியில் கொண்டுவந்து தந்தை கணேசமூர்த்தியிடம் கையளித்துவிட்டு கவலையை விடும்படி கூறி நம்பிக்கையை ஏற்படுத்தினார். தந்தை கணேசமூர்த்தியும் பையனுடன் ஆலயத்தை வலம்வந்து வழிபட்டுவிட்டு வீடு திரும்பினார். என்ன அதிசயம் பையன் மறுநாளே பேசத்தொடங்கிவிட்டான். தந்தையாரும் தாயாரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். ஆலயத்தினுள் சுவாமிகள் பையனை அழைத்துச் சென்றதும் அங்கு என்ன நடந்தது என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது என்று கணேசமூர்த்தி கூறுகின்றார். அதன் பின் அவர் மறுநாளே ஆலயத்திற்குச் சென்று நடந்ததைக் கூறிச் சுவாமிகளுக்குத் தமது நன்றிகளைச் சமர்ப்பித்தார். முருகனையும் மனமுருகி வழிபடலானார்.

5.சந்தோசம் என்னும் அடியார் தமது தொழிலின் மூலம் பெறப்படவேண்டிய நிலுவைப் பணம் கிடைக்கப்பெறாமையினால் மிகவும் கவலையடைந்திருந்தார். அடிக்கடி திராய்மடு ஆச்சிரமத்திற்கு வந்து தமது கவலையை சுவாமிகளிடம் முறையிடுவார். சுவாமிகளும், கவலையை விடும்படியும் சேரவேண்டிய நிலுவைப்பணம் வந்து சேரும் எனவும் கூறி அவரைத் தேற்றுவார். அவ்வாறு ஒருநாள் சந்தோசம் அவர்கள் ஆச்சிரமத்திற்கு வந்தார். அந்நேரமும் அவர் கவலை தோய்ந்த முகத்துடனேயே காணப்பட்டார். அவரைப்பார்த்ததும் சுவாமிகள் கைகளைத் தட்டிக் கூத்தாடினார். "வரவேண்டிய பணமெல்லாம் வந்து சேர்ந்து விட்டதல்லவா" என்று சந்தோசத்தை வினவினார். அவரும் அப்படி எதுவும் வரவில்லை என்று வருத்தத்தை தெரிவித்தார். அவரைப்பார்த்து சுவாமிகள் "வரவேண்டிய பணமெல்லாம் வந்து விட்டது நீ வீட்டுக்குப்போ " என்றார். சந்தோசத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. இருந்தும் சுவாமிகளின் சொற்படி வீடு திரும்பினார்.

அங்கே அவருக்கு வரவேண்டிய நிலுவைப் பணம் முழுவதும் வந்திருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தார். அதே நேரம் பெருமகிழ்ச்சியும் அடைந்தார்."இது எப்படி சுவாமிகளுக்குத் தெரிந்தது?" என்ற கேள்வியும் அவரது மனதில் எழுந்தது. மறுநாள் அவர் ஆச்சிரமத்திற்கு சென்று சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். எவருக்குமே தெரிந்திராத இவ்விடயம் சுவாமிகளுக்கு மாத்திரம் தெரிந்தது. அதிசயமான ஒரு விடயந்தான். அதற்கு நன்றி செலுத்தும் விதத்தில் ஆலயத்துக்கு செங்கற்களை வாங்கி அன்பளிப்புச் செய்தார்.

6. திரு.த கந்தசாமி என்பவர் கருவேப்பங்கேணியைச் சேர்ந்தவர். அந்த அடியார் சிறிது காலம் சுவாமிகளது ஆச்சிரமத்தில் தங்கியிருந்து சுவாமிகளுக்கான சேவைகளில் ஈடுபடலானார். ஒரு நாள் சமைப்பதற்காக அரிசி வைத்திருக்கும் பானையைப் பார்த்தார். அதில் அரிசி இருக்கவில்லை. பின் அங்கிருந்த பானைகள் எல்லாவற்றையும் திறந்து பார்த்தார் ஒரு பானையிலும் அரிசி இல்லாத காரணத்தால் அதை சுவாமிகளிடம் எடுத்தியம்பினார். அதைக் கேட்ட சுவாமிகள் "நன்றாகப் பாருங்கள் அரிசி இருக்கும்" என்றார். பின்னர் மீண்டும் பானைகளில் கையை விட்டுப்பார்த்தார். என்ன அதிசயம் ஒரு பானையில் அரிசி இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துக்குள்ளானார். சுவாமிகளிடம் அதை தெரிவித்ததும் சுவாமிகள் "நான் சொன்னேன் அல்லவா அரிசி இருக்கும் என்று" எனக் கூறிவிட்டு தமது வேலைகளில் ஈடுபட்டார். கந்தசாமியும் அரிசை எடுத்து சமைக்க தொடங்கினார்.

7. ஒரு நாள் தேநீர் தயாரிக்கும் நேரம் வந்தது. அப்போது அங்கிருந்த கந்தசாமி என்னும் அடியார் தனக்கும் சுவாமிகளுக்குமாக இரண்டு தேநீருக்களவாகத் தண்ணீரை எடுத்தார். அப்பொழுது சுவாமிகள் அவரிடம் நான்கு தேநீர்களை தயாரிக்கும் படி கூறினார். அவ்வேளையில் அவ்விருவரையும் தவிர வேறெவரும் அங்கிருக்கவில்லை. எனவே சுவாமியிடம்" நாம் இருவர் தானே

இருக்கிறோம். அப்படியிருக்க நான்கு தேநீர் தயாரிக்கும் படி கூறுகின்றீர்களே. ஏன் சுவாமி?'' என்று கந்தசாமி வினவினார். "பறவாயில்லை இன்னும் இரண்டு தேநீரை கூட போடுங்கள்'' என்றார் சுவாமிகள். பின் சுவாமிகள் கேட்டுக்கொண்ட படி நான்கு தேநீரைப் போட்டுவிட்டு இருவரும் தேநீர் அருந்திக்கொண்டிருந்தனர். அவர்கள் குடித்து முடிப்பதற்கு முன் இரண்டு அடியார்கள் அங்கு சமூகமளித்தனர். அப்போது கந்தசாமிக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. வந்த இருவருக்கும் கந்தசாமி மிகுதியாயிருந்த தேநீரை சிரட்டையில் ஊற்றிக்கொடுத்தார். அப்போது சுவாமிகளுடைய மகிமையை எண்ணி கந்தசாமி ஆச்சரியத்துக்குள்ளானார்.

8. முன் கூறியது போன்ற சம்பவமொன்று பின்னர் ஒரு நாள் நிகழ்ந்தது. ஒருநாள் கந்தசாமி இருவருக்குமாக சமைத்துவைத்து விட்டு அதில் நைவேத்தியமாக சிறிதளவு எடுத்து பூசைக்கு வைத்துப் பூசை முடிந்ததும் இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவ்வேளை நினையாப்பிரகாரமாக திடீரென்று சில அடியார்கள் அங்கு வருகை தந்தனர். கந்தசாமிக்குக் கவலையாக இருந்தது. வந்திருந்த அனைவருக்கும் சாப்பாடு கொடுக்க முடியாதே என்று மனம்வருந்தினார். சுவாமிகள் வந்த அடியார்களை இருக்க வைத்து உணவு பரிமாறும்படி கந்தசாமியிடம் கேட்டுக்கொண்டார். கந்தசாமி நிலைமையை உணர்ந்திருந்த போதிலும் சுவாமிகள் கேட்டுக்கொண்டபடி அவர்களை உட்காரவைத்து அங்கு கிடைக்கக் கூடியதாய் இருந்த பாத்திரங்களை எடுத்து சோற்றை அள்ளிவைக்க அத்தனை பேருக்கும் போதுமானதாக இருந்தது. இந்நிகழ்வும் கந்தசாமிக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவருக்குச் சுவாமிகள் மீது மேலும் மேலும் பயபக்தியை ஏற்படுத்தியது.

# சுவாமிகளின் தீக்கதரிசனங்கள்

01) சுவாமியவர்கள் ஒரு சிறந்த தீக்கதரிசியாகவும் திகழ்ந்திருந்தார் என்பது அவரது வாய்ச்சொற்கள் பிற்காலத்திற் பலித்திருப்பதன் மூலம் நிரூபனமாகியிருக்கிறது. அதற்குக் காரணம் அவர் முருகன் மீது வைத்திருந்த உறுதியான பற்றுதலும் நம்பிக்கையுமேயாகும்.

ஒரு நாள் அதாவது 1990ம் ஆண்டு மாசி மாதம் 01ம் திகதியன்று அவருடன் பலரும் உரையாடிக் கொண்டிருந்த சமயம் கதையோடு கதையாக இடம்பெற்ற அவரது எதிர்வுகூறல் 14வருடங்களின் பின்னர் நிறைவேறியுள்ளது. கங்காதேவியால் ஒரு பேரழிவு ஏற்படப்போகிறதென்று சுவாமிகள் அன்று கூறியிருந்தார். அவர் கடலால் ஏற்படும் என்று கூறியிருக்காத போதும் கங்காதேவி என்று அவர் குறிப்பிட்டது சுனாமிபேரலையைத்தான் என்பது தற்போது புலனாகிறது. அவர் கூறிய அவ்வாய்ச்சொல்லானது 2004ம் ஆண்டு மார்கழி மாதம் 26ம் திகதி பலித்துவிட்டதை எவரும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது. உயிர்கள் உடைமைகள் யாவும் சுனாமிப் பேரலையால் காவுகொள்ளப் பட்டதை யார் தான் மறக்கமுடியும்.

(2) இன்னுமொரு நாள் ஆச்சிரமத்தில் சுவாமிகளுடன் ஒருவர் உரையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் சுவாமியைப் பார்த்து "சுவாமி! தாங்கள் இந்தக் காட்டில் தன்னந்தனியாக இருக்கிறீர்களே. அக்கம் பக்கத்தில் தங்களுக்கு உதவிக்குக் கூட யாரும் இல்லையே. நானும் போனால் தங்கள் மாத்திரம் தானே இருக்கப்போகிறீர்கள்" என்றார். அப்போது சுவாமிகள் ஆலயத்தைச் சுட்டிக்காட்டி "எனக்கு உதவிக்கு இவர்தான் இருக்கிறாரே. அதனால் எனக்குத் தனிமையே

இல்லை. இப்போது இப்படியிருந்தாலும் ஒரு காலத்தில் இவ்விடம் சன நடமாட்டம் மிகுந்த ஒரு இடமாக மாறும். நீங்கள் இருந்து பாருங்கள். நாலாபக்கங்களிலுமிருந்து வந்து சனங்கள் இப்பகுதியில் குடியேறுவார்கள். பாடசாலை, வைத்தியசாலை தபால் அலுவலகம், புகையிரதநிலையம், துறைமுகம் ஆகியவையும் அமைக்கப்பட்டு ஒரு நகரமாக இவ்விடம் காட்சியளிக்கும். அதைப்பார்த்து நீங்கள் மூக்கில் விரல் வைத்து நிற்கப்போகிறீர்கள்.'' என்று அவரது வழக்கமான கலகல வென்ற சிரிப்புடன் பதிலளித்தார்.

தற்போது இவ்விடத்தை பார்க்குமிடத்து அவரது அவ்வாய்ச் சொற்கள் பலித்திருப்பதை கண்கூடாகக் காணமுடிகின்றதல்லவா. சுனாமி பேரலையால் தமது குடும்ப அங்கத்தினரை பறிகொடுத்துச் சொத்துக்களையும் இழந்து நிர்கதிக்குள்ளான மக்களுக்கு சில அரசசார்பற்ற நிறுவனங்களால் ஆலயத்தின் மேற்குப்புறமாக இருந்த பற்றைக் காடுகள் வெட்டி வெளியாக்கப்பட்டு பல வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் அவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இது ''திராய்மடு சுவிஸ் தமிழ் கிராமம்'' என்றழைக்கப்படுகிறது. பாதைகளும் அமைக்கப்பட்டு போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அவர் கூறியவற்றில் புகையிரத நிலையம், தபால் அலுவலகம், துறைமுகம், என்பன இன்னும் அமைக்கப்படாவிட்டாலும் இன்னும் சிறிது காலத்தில் அவைகள் ஒவ்வொன்றாக நிர்மாணிக்கப்படலாம். தற்சமயம் கடற்கரையை அண்டிய பகுதியில் யுத்த சூழ்நிலையால் இடம்பெயர்ந்த மக்களுக்கென தற்காலிக வதிவிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே தற்சமயம் திராய்மடு சனசந்தடியுள்ள ஒரு நகரமாக மாறிக்கொண்டிருக்கிறது. இப்பகுதி வருங்காலத்தில் மேலும் பல வழிகளில் அபிவிருத்தியடைந்த இடமாக மாற்றமடையலாம். எனவே சுவாமிகளது தீக்கதரிசனங்கள் பலித்துக்கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோமல்லவா.

# சுவாமிகளின் கோரிக்கைகள்

தமது இறுதிச் சடங்கில் அதாவது தாம் மகா சமாதி அடையும் நேரத்தில் கவனிக்க வேண்டிய மூன்று முக்கிய விடயங்களை சுவாமிகள் தமது ஆச்சிரமத்துத்தொண்டர்களிடம் ஏற்கனவே கூறிவைத்திருந்தார். அவையாவன:

1. வெட்டுவதற்கு வருவார்கள் அதை அனுமதிக்கக் கூடாது.
2. கட்டுவதற்கும் வருவார்கள் அதையும் அனுமதிக்கக் கூடாது.
3. உறங்கும் இடத்தில் தான் சமாதி வைக்கவேண்டும் என்பவையாகும்.

இவற்றிற்கு அவர் கூறிய அர்த்தங்கள் வருமாறு :- **முதலாவதாக வெட்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதன் அர்த்தம் என்னவென்றால்:-**

தமது செஞ்சடையை வெட்டி எடுப்பதற்கு எவரையும் அனுமதிக்கக் கூடாது. அதைத் தம்முடனேயே சமாதியில் வைக்கவேண்டும் என்பதாகும்.

**இரண்டாவதாக:- கட்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதன் அர்த்தம் என்னவென்றால்:-**

தமது வெற்றுடலை (அதாவது பூதவுடலை) திருவாசியில் நிஷ்டையிலிருப்பது போல் வைத்து கயிற்றால் கட்டிவைத்தவாறு சமாதியில் வைப்பதற்கும் அனுமதிக்கக் கூடாது. அதைவிடுத்து நீட்டி நிமிர்ந்து சயனிப்பது போலவே தம்மை சமாதியில் வைக்கவேண்டும் என்பதாகும்.

மூன்றாவதாக:- தான் நித்திரை செய்யும் இடத்திலே தான் தன் உடலை சமாதியில் வைக்கவேண்டும் என்பதாகும். இது சுவாமிகளின் மகாசமாதி என்ற உபதலைப்பின் கீழ் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது:- அதன்படி அவரது மகாசமாதியின் போது அவரது இக் கோரிக்கைகள் பூரணமாக நிறைவேற்றப்பட்டன.

# செஞ்சடை, திருநீற்றின் மகிமை

(1)சுவாமிகளின் தூய உண்மைத் துறவின் பயனாகவும் முருகன்மீது அவர் கொண்டிருந்த அளவுகடந்த பக்தியினாலும் தீவிரஈடுபாட்டினாலும் முருகனால் அவரது உடலோடு ஒட்டியதாகத் தெய்வீகச் சின்னமொன்று உருவானது. அது தான் அவரது தலையிலுள்ள செஞ்சடையாகும். இச் செஞ்சடை பற்றிய விபரம் "துறவுத் தோற்றம்" என்னும் உப தலைப்பின் கீழ் ஏற்கனவே தரப்பட்டுள்ளது. இச்சடை அசாதாரணமானதும் அதிசயிக்கத் தக்கதுமாகும். அச்சடை மெல்ல மெல்ல வளர்ந்து வளர்ந்து 13அடியைத் தாண்டிவிட்டது. அவர் அதைத் துண்டித்து இல்லாமற் செய்ய ஒருபோதும் முயற்சிக்கவில்லை. மாறாக அதை அவர் வளரவிட்டார். தெய்வம் தமக்குக் கொடுத்த அருட்கொடையாகவே அதை நினைத்துப் பாதுகாத்துப் பராமரித்து வந்தார். அதன் நிறம் செம்மஞ்சளாக மாறியிருந்தது. சடையின் நுனி தங்கச் சரிகை போல் பளபளவென்று பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அச்சடை சிறு சிறு புரிகளாக அமைந்திருந்தது. எந்தவொரு துறவிக்குமில்லாத அவரது அழகான நீண்ட சடையானது முருகப்பெருமானால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அதிசயமே. இது கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்காது விட்டது துரதிர்ஷ்டமே.

(2)சுவாமிகள் கதிர்காம யாத்திரை செய்வதற்கு எண்ணிய தினத்திற்கு முந்திய தினம் அவரது காலில் கோடரிபட்டதால் பெரிய காயம் உண்டானது பற்றி ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைக்குச் செல்வதில்லை என்ற அவரது சபதத்தின் காரணமாக அவர் அக்காயத்திற்குக் கந்தன் திருநீற்றையே மருந்தாகப் பாவித்து அதைக் குணமாக்கினார். மருத்துவ மனையில் அதற்குரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டிருந்தால் அது குணமடைவதற்கு ஒரு மாதங்கூடப் போதாமலிருந்திருக்கும். எனினும் அவர் முருகன் மீது கொண்டிருந்த அசையாத பற்றுதலினாலும் திருநீற்றின் மகிமையாலும் அப்பெருங்காயம் குணமடைந்ததென்றால் அதுவும் ஒரு அற்புதமே.

# வருடாந்த மகோற்சவம்



இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஒவ்வொரு ஆடிமாதத்திலும் தவறாது நடைபெறும். அத்தினங்களில் ஒவ்வொரு நாளும் இரண்டு நேரப்பூசையும் திருவிழாவும் நடந்தேறும். பகற்பூசை மதியம் 12.00மணிக்கு ஆரம்மாகும். பூசை நேரத்தில் தேவாரம், திருப்புராணம் முதலிய திருமுறைப் பாடல்கள் மாத்திரமன்றி கந்தசஷ்டி கவசமும் பாடப்படும். நைவேந்தியங்கள் படைத்து தீபாராதனைகள் செய்து பூசை நடைபெறும். பூசை இடம்பெறும் நேரத்தில் மங்கையர்கள் கற்பூரச்சட்டி ஏந்தித் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றத் தவறுவதில்லை. சங்கு, நாதசுரம் ஒலிக்க மேளவாத்தியங்கள் முழங்க பக்தர்கள் அரோகரா கோசமிட பூசை நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

இதே போன்று இரவிலும் 9.00மணிக்கு பூசை ஆரம்பமாகி மேற்கூறியபோல் நடைபெற்று முடிந்ததும் திருவிழா ஆரம்பமாகும். முதலில் சுவாமி உள்வீதி வலம்வந்ததும் வெளிவீதி வலம்வருவதற்காக ஆலயத்தின் வெளிப்புற முன்றலில் ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும் மயில்வாகனத்தில் ஆரோகணஞ்செய்து மேளவாத்தியங்களின் ஒலியுடனும் அடியார்களின் அரோகராக் கோஷத்துடனும் தோத்திரப்பாடல்களுடனும் மின்குமிழ், தீவட்டி, கற்பூரச்சட்டிகளின் ஒளி வெள்ளத்தில் மிதந்து வெளிவீதி வலம்வருவார். உபயகாரர்களின் வசதியைப் பொறுத்து முத்துச்சப்பரத்திலும் சுவாமி வலம்வருவதுண்டு. வெளிவீதி வலம்வந்து சுவாமி வசந்த மண்டபத்தை வந்தடைந்ததும் திருவிழா முற்றுப்பெறும். வழக்கம் போல் அடியார்கள் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு வீடு செல்வர்.

உற்சவ காலங்களில் அடியார்கள் தாம் கேட்ட வரமருளிய முருகனுக்கு நன்றிசெலுத்தும் முகமாக காவடிகள் எடுத்தாடியும் ஆலயத்தைச் சுற்றிப்பிரதட்சிணம் செய்தும் கற்பூரச்சட்டிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி மகிழ்வர். திருவிழாக்கள் 7நாட்கள் தொடர்ந்து நடைபெற்று முடிந்ததும் மறுநாட்காலையில் ஆடிப்பூரனையும் திருவேண நட்சத்திரமும் சேர்ந்து வரும் நேரத்தில் முருகப்பெருமானின் சமுத்திரத் தீர்த்தம் அருகிலுள்ள வங்காளவிரிகுடாக் கடலில் இடம்பெறும். தீர்த்தம் நிறைவு பெற்றதும் தர்மசிந்தனையுள்ள சில பரோபகாரிகளால் அன்னதானம் வழங்கப்படும். அதன்பின் அடியார்கள் தத்தமது இருப்பிடங்களுக்குப் புறப்பட்டுச் செல்வர்.



# கந்தசஷ்டி விரதம்

இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் முக்கிய விரதங்களுள் கந்தசஷ்டியும் ஒன்றாகும். இவ்விரதம் பிரதமையிற் தொடங்கிச் சஷ்டியில் முடிவுறும். முருகப் பெருமான் சூரபன்மனை வதைசெய்யுந் தினத்தில் ஆலயங்களில் சூரன்போர் நடைபெறும்.

இவ்விரதங்களை பலரும் பலவாறாக அனுஷ்டிக்கின்றனர். ஆலயத்தில் பூசை முடிவடைந்தவுடன் ஏழு மிளகை உட்கொண்டு ஆலயத்தில் கொடுக்கப்படும் தீர்த்தத்தையும் பருகி சிலர் விரதமிருப்பர். இது மிகவும் கடினமான முறையாகும். சிலர் பால், பழங்களை அருந்தியும் விரதம் நோற்பர். இன்னுஞ் சிலர் பகலுணவை மாத்திரம் உட்கொண்டும் விரதத்தினை அனுஷ்டிக்கின்றனர். விரதத்தின் இறுதி நாளன்று பகல்முழுவதும் நீர் உட்பட எதனையும் உட்கொள்ளாது இரவில் விடியும் வரை கண்விழித்து உபவாசமிருந்து காலையில் உணவை உட்கொண்டு விரதத்தை நிறைவு செய்வர். கந்தசஷ்டி விரதத்தை நம்பிக்கையுடன் நோற்பவர்களுக்கு முருகப்பெருமான் கேட்டவரத்தை அளிப்பார் என்பது இந்துக்களின் உறுதியான நம்பிக்கையாகும்.

இவ்வாலயத்தில் முதன் முதலாக கந்தசஷ்டி விரதத்தை சிவலிங்கம் அவர்களே ஆரம்பித்துவைத்தார். அப்போது அவருக்கு வயது பதினான்கு(14). ஒரு வெள்ளிக்கிழமை திராய்மடு ஆலயத்திற்கு சென்று கொண்டிருக்கையில் வழியில் சடையப்பர் சுவாமிகளைச் சந்தித்தார். அக்காலத்தில் சுவாமிகளை இளம்வயதினர் "சாமி அப்பாச்சி" என்று தான் அழைப்பது வழக்கம். அவரும் சுவாமிகளை கண்டவுடன் "சாமி அப்பாச்சி! எனக்குக் கந்தசஷ்டி விரதம் நோற்பதற்கு மிகவும் ஆவலாக இருக்கிறது. ஆச்சிரமத்திலிருந்துகொண்டு விரதமிருக்கலாமா?" என்று கேட்டார். சுவாமிகளும் தமது வழக்கமான

சிரிப்புடன் "ஆம் அதற்கென்ன தாராளமாக விரதமிருக்கலாம்." என்று தமது சம்மதத்தை தெரிவித்தார். அதற்கமைய 1957ம்வருடம் விரதம் ஆரம்பிக்கும் தினத்தில் திராய்மடுவிற்குச் சென்று தன்னந்தனியனாயிருந்து விரதந்நோற்றார். காலகதியில் அவருடன் சேர்ந்து பிற அடியார்களும் விரதமிருக்கத் தொடங்கினர். ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கணிசமான எண்ணிக்கையில் அடியார்கள் வருடாவருடம் இவ்வாலயத்தில் விரதமனுஷ்டித்து முருகனிடத்தில் தாம் கேட்ட வரங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். விரதகாலத்தில் ஆலயத்தில் கந்தபுராணம் பாராயணம் செய்யப்படும், கந்தசஷ்டி கவசமும் பாடப்படும். இவ்வாலயத்தில் தற்சமயம் சூரன்போர் நடைபெறுவதில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் அதற்கான முயற்சிகளை ஆலய நிர்வாகம் எடுக்கும் என்று நம்பலாம்.

# பாண்டவர்கள் வனவாசம்

"சுவாமிகளின் பிறப்பிடம்" என்ற உப தலைப்பின் கீழ் மட்டிக்கழி கிராமத்தைப் பற்றி விபரிக்கும் போது அங்குள்ள திரௌபதி அம்மன்ஆலயத்தைப் பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாலயத்தில் வருடாவருடம் சடங்கு நடைபெறும் சமயத்தில் பஞ்சபாண்டவர்கள் திரௌபதியுடன் வனவாசம் செய்யும் நிகழ்வும் இடம்பெறுவதுண்டு. திராய்மடு ஒரு வனமாக அக்காலத்தில் காட்சியளித்த காரணத்தால் வனவாச நிகழ்வுக்கு திராய்மடு பிரதேசத்தையே ஒரு பொருத்தமான இடமாக தேர்ந்தெடுத்தனர். அதன் காரணமாக திரௌபதி அம்மன் ஆலய வருடாந்த சடங்கின் போது வனவாசத்திற்கென ஒதுக்கப்பட்ட தினத்தில் பாண்டவர்கள் பாஞ்சாலி சகிதம் திராய்மடுத் திருத்தலத்திற்கு வனவாசம் செய்வதும் அங்கு பகற்பொழுதைக் கழித்த பின் தமது ஆலயத்திற்கு திரும்பிச்செல்வதும் ஒரு சிறப்பம்சமாகும்.

# முடிவுரை

மனிதன் தெய்வமாகப் பூசிக்கப்படுவதும், நல்லவனாக நேசிக்கப்படுவதும், கெட்டவனாக தூஷிக்கப்படுவதும் அவரவர் செயல்களையும் அவற்றின் தன்மைகளையும் பொறுத்ததே. அந்த வகையில் ஒரு சாதாரண மனிதன் தெய்வமாக பூசிக்கப்பட்ட இடமே இத்திராய்மடு திருத்தலமாகும்.

தெய்வீகத் தன்மையெய்திய சடையப்பர் சுவாமிகள் வாழும்போதே அடியார்கள் அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். பின்னர் அவர் மகா சமாதியடைந்ததும் அவரது சமாதியில் நைவேதியங்கள் படைத்தும் தீபாராதனைகள் செய்தும் தோத்திரப்பாடல்கள் பாடியும் பூசை செய்து வழிபடுகின்றனர். "மனிதனும் தெய்வமாகலாம் " என்ற கூற்றை மெய்ப்பித்த ஒரு தெய்வப்பிறவிதான் சடையப்பர் சுவாமிகள் என்றால் அது மிகையாகாது.

அது போலவே இங்கு தெய்வமும் மனித உருவில் அவ்வப்போது நடமாடிய சந்தர்ப்பங்கள் "அற்புதங்கள் " என்ற உபதலைப்பின் கீழ் ஆதாரங்களுடன் விபரிக்கப்பட்டுள்ளன.
"குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடுமிடத்திலே" என்ற பாடல் வரியை மெய்ப்பிக்கும் வகையில் முருகன் தன்னைக் கொண்டாடும் இடமான இத் திராய்மடு திருப்பதியில் மனித உருவில் அடியாரோடு அடியாராக நடமாடி உறவாடி இருந்த சந்தர்ப்பங்கள் உண்மையில் அற்புதமானவைகளே.



சடையப்பர் சுவாமிகளால் "திராய்மடு" என்று பெயரிடப்பட்டு உருவாக்கப்பட்ட இத்திருத்தலம் தற்சமயம் ஒரு பிரசித்தி பெற்ற ஒரு புனிதத் தலமாகச் சிறப்புற்று விளங்குவதை ஆலயத்தை தரிசிக்கச் செல்லும் அடியார்கள் நேரடியாகக் காணமுடியும். சடையப்பர் சுவாமிகளின் தீர்க்க தரிசனமான எதிர்வு கூறல்கள் யாவும் முழுமையாகப் பலித்து நிதர்சனமாகும் பட்சத்தில் மேலும் பிரசித்தி பெற்ற ஒரு புனிதபூமியாகத் திராய்மடு திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சடையப்பர் சுவாமிகளின் திருநாமமும் திராய்மடுத் திருத்தலத்தின் பெருமையும் புகழும் இப்பூவுலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.



உ

ஓம் சரவணபவ

# ஓம் சற்குருநாத சடையப்ப சுவாமி

## ஸ்ரீ நல்லதம்பி அவர்கள் சிவபதம்

தோற்றம்:
13
07
1909



சிவபதம்:
24
09
1992

**அருள்மிகு ஸ்ரீ திராய்மடு முருகன் ஆலயம், ஆச்சிரமம் ஆகியவற்றின் ஸ்தாபகரும், தர்மகத்தாவுமான ஓம் சற்குருநாத சடையப்ப சுவாமி ஸ்ரீ நல்லதம்பி அவர்கள் 24-09-1992ந் திகதி வியாழக்கிழமை சிவபதம் எய்தியுள்ளார்.**

**அன்னாரின் சமாதி அடக்கம் 25-09-1992ந் திகதி வெள்ளிக்கிழமை ஆச்சிரமவளவில் காலை 10.00மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பி.ப சுமார் 3.00மணியளவில் முடிவுறும் என்பதை அன்பர்கள், அடியார்கள், பக்தர்கள் அனைவர்க்கும் அறியத்தருவதுடன் மேற்படி கிரியைகளில் கலந்துகொள்ளுமாறும் இறை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

இப்படிக்கு
ஸ்ரீ திராய்மடு ஆலய, ஆச்சிரம
நிருவாகிகள்.
மட்டக்களப்பு.

# மகோற்சவ உபயகாரர்களின் விபரம்

| | | |
|---|---|---|
| ஆடித்திருவிழா கும்பப் பூசை | – | அமரர் திரு. த. மாணிக்கம் குடும்பம் |
| 1ம் திருவிழா | – | அமரர். திரு.திருமதி. இராசன் முத்தம்மா குடும்பம் |
| 2ம் திருவிழா | – | சடையப்பர் சுவாமிகள் |
| 3ம் திருவிழா | – | திரு.சீ. கீர்த்திசிங்கம் குடும்பம் – அமிர்தகழி |
| 4ம் திருவிழா | – | அமரர். திரு. எஸ்.செல்லத்தம்பி குடும்பம் – புன்னைச்சோலை |
| 5ம் திருவிழா | – | நாவலடி வாழ்பொதுமக்கள் |
| 6ம் திருவிழா | – | சத்துருக்கொண்டான் வாழ்பொதுமக்கள் |
| 7ம் திருவிழாவும் தீர்த்தோற்சவமும் | – | பாலமீன்மடு, திராய்மடு வாழ்பொதுமக்கள். |
| வைரவர் பூசை | – | அமரர். க. புஸ்பராசா குடும்பம் – திராய்மடு |

# விசேட தினப் பூசைகள்

வருடாந்த மகோற்சவத்தைத் தவிர இத்திருத்தலத்தில் வருடாவருடம் வேறுபல விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விசேட தினங்கள் | | உபயகாரர்கள் |
|---|---|---|
| புதுவருடப் பிறப்பு - | - | திரு.இரா.பிரதீபன் |
| தைப்பொங்கல் | - | திரு.சீ. பாலசுந்தரம் |
| தைப்பூசம் | - | அமரர். கு.கோபாலப்பிள்ளை குடும்பம் |
| மாசிமகம் | - | திரு. R.K. குணசேன |
| மகாசிவராத்திரி | - | 1ம் சாமம் திரு.மு.தவராசா - மட்டிக்கழி<br>2ம்சாமம்திரு.யோகேந்திரன்-அமிர்தகழி<br>3ம்சாமம்திரு.சு.கந்தசாமி - கொக்குவில்<br>4ம்சாமம் திரு.க.கந்தசாமி- பாலமீன்மடு |
| பங்குனி உத்தரம் | - | திரு. சு. கந்தசாமி - கொக்குவில் |
| சித்திரை வருடப்பிறப்பு | - | அமரர். செ. பூபாலரெத்தினம் குடும்பம் திராய்மடு |
| சித்திரகுப்த விரதம் | - | திரு. சீ. குணம் - மட்டிக்கழி |
| வைகாசி விசாகம் - | - | திரு.க.கந்தசாமி - நாவற்கேணி |
| ஆனி உத்தரம் | - | திரு. பா. தம்பிதுரைச்சாமி |
| ஆலய கும்பாபிசேகப் பூசை- | | திரு.வே. கணேசமூர்த்தி |

**ஆவணிச்சதுர்த்தி -** - அமரர். க. கனகசபை குடும்பம்
**சடையப்பரின் சிரார்த்த தினம்-** திரு. S. சுசில்
திரு.S.இராசலிங்கம் திராய்மடு

**தீபாவளி** - திரு.A.இராமச்சந்திரன் - எல்லை வீதி
**கந்தசஷ்டி விரதம்** - விரதகாரர்கள்
**விஜயதசமி** - திரு. க. நல்லரெத்தினம் குடும்பம்

**குமாராலயதீபம்** - திரு. சா. முத்துலிங்கம்

**விநாயகர் விரதம்** - பெருங்கதை -திரு.S.நல்லையா குடும்பம் - அமிர்தகழி

**திருவெம்பாவை** - திருவெம்பாவை பூசையானது முதன்முதலாக 1969ம் ஆண்டுதான் இவ்வாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| 1ம் நாள் | - | திரு.S. நல்லையாகுடும்பம் -அமிர்தகழி |
| 2ம் நாள் | - | அமரர்.S.மாணிக்கம் குடும்பம் - அமிர்தகழி |
| 3ம் நாள் | - | திரு.சி.விஜயசிங்கம் - அமிர்தகழி |
| 4ம் நாள் | - | அமரர்.S. சின்னராசா குடும்பம் -புன்னைச்சோலை |
| 5ம் நாள் | - | திரு.வே. விநாயகமூர்த்தி குடும்பம் |
| 6ம் நாள் | - | அமரர்.S. நாகமுத்து குடும்பம் |
| 7ம் நாள் | - | திரு.S. சீனித்தம்பி குடும்பம் - பாலமீன்மடு |
| 8ம் நாள் | - | திரு.சீ. கீர்த்திசிங்கம் குடும்பம் அமிர்தகழி |
| 9ம் நாள் | - | அமரர்.வை.கார்த்திகேசு குடும்பம் - பாலமீன்மடு |
| 10ம் நாள் | - | திரு. அ. குலேந்திரா குடும்பம் - பாலமீன்மடு |

# வெள்ளிக்கிழமை பூசை உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| அமரர். சீ.தம்பிராஜா | - | பாலமீன்மடு |
| திரு.K.S. நாகேஸ்வரன் | - | பாலமீன்மடு |
| திரு.தி. தனெகராஜ் | - | பாலமீன்மடு |
| திரு.பா.இந்திரராசா | - | திராய்மடு |
| திரு. இரா.யோகலிங்கம் | - | பாலமீன்மடு |
| திரு. எஸ். மணிவண்ணன் | - | நாவலடி |
| திரு. செ. மகாலிங்கம் | - | பாலமீன்மடு |
| திரு. சு. இராமச்சந்திரன் | - | திராய்மடு |
| திரு. இ.பிரியராஜ் | - | திராய்மடு |
| திரு. த. தவக்குமார் | - | பாலமீன்மடு |
| திரு. திருமதி.க.கோணேஸ்வரன் | - | பாலமீன்மடு |
| திருமதி. ந.ராகினி | - | திராய்மடு |
| திரு. கோ. நகுலேஸ்வரன் | - | திராய்மடு |
| திரு. க.நவரெத்தினம் | - | திராய்மடு |
| திரு. து. சிவநேசராசா | - | பாலமீன்மடு |
| திரு. க. வேணுராஜ் | - | பாலமீன்மடு |
| திரு. தி. ரகு | - | திராய்மடு |
| திரு. எஸ்.கோவிந்தராசா | - | பாலமீன்மடு |
| திரு. த.சிவகுமார் | - | திராய்மடு |
| திரு. ச. சசிக்குமார் | - | திராய்மடு |
| திரு. உ.அருணகிரிநாதன் | - | பாலமீன்மடு |
| திரு. ந. சிதம்பரநாதன் | - | திராய்மடு |
| திரு. க. கவியழகன் | - | பாலமீன்மடு |
| திரு. கி. கண்ணன் | - | திராய்மடு |
| திரு. S. முகுந்தன் | - | திராய்மடு |

| | | |
|---|---|---|
| திரு. த. ரவிக்குமார் | - | பாலமீன்மடு |
| திரு. ந. ஜெயகுமார் | - | பாலமீன்மடு |
| திரு. பூ. சண்முகநாதன் | - | பாலமீன்மடு |
| திருமதி. ரா.சந்திரசேகரம் குடும்பம் | - | திராய்மடு |
| திரு. ம. பாலேந்திரராசா | - | திராய்மடு |
| திரு. எஸ். குணபால | - | நாவலடி |
| திரு. அ.ஜீவசுந்தர் | - | பாலமீன்மடு |
| திரு. ப. சுபாஸ்கரானந்தம் | - | கல்லடி |
| திரு. வே. வினாயகமூர்த்தி | - | திராய்மடு |
| திரு. பூ.சங்கர் | - | பாலமீன்மடு |
| திரு. க. கந்தசாமி | - | நாவற்கேணி |
| திரு. வே. யோகேந்திரன் | - | திராய்மடு |
| திரு. வ. ஸ்ரீபன் | - | பாலமீன்மடு |
| திரு. க.கதிர்காந்தன் | - | திராய்மடு |
| அமரர். திரு. வி.விக்னேசமூர்த்தி | - | திராய்மடு |
| திரு. பூ. துரைராஜசிங்கம் | - | திராய்மடு |
| திரு. க. கணேசமூர்த்தி | - | பாலமீன்மடு |
| திரு. ந. சுதாகரன் | - | திராய்மடு |
| திரு. நா. நகுலேஸ்வரராசா | - | பாலமீன்மடு |
| திரு. கே. செல்வதாஸ் | - | பாலமீன்மடு |
| திரு. எஸ்.ஆர். ஸ்ரீபிரகலாதன் | - | பாலமீன்மடு |
| திரு. அ.சர்வேஸ்வரன் | - | பாலமீன்மடு |
| திரு. பு.பரராஜசிங்கம் | - | நாவலடி |
| திரு. ம.சிறிதரன் | - | திராய்மடு |
| திரு. எஸ்.புவனேந்திரன் | - | பாலமீன்மடு |
| திரு. த.தேவகுமார் | - | திராய்மடு |
| திரு. ந.ஜெகதீசன் | - | பாலமீன்மடு |

## அமரர் - ம. நல்லதம்பி சாஸ்திரியார் எழுதிய

# காவடிச் சிந்து

1. பனைமதுரை வம்மியொடு நாவல் காரை
பாலைமரம் சூழுதிராய் மடுவில் வந்து
அனைவரையும் காத்தருளும் ஐயா எங்கள்
ஆறுமுகனே அடியோனைக் கண்ணால் பாரும்
வினைமிருகம் தீண்டாமல் விலக்க வேண்டும்
வீணர்பகை பேய்பில்லி விலக்க வேண்டும்
தினைமாவில் தேன்கலந்து உண்டவேலா - சுவாமி
தேசிகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

2. பாலனுக்காய் மனமிரங்கி இந்தவேளை
பட்சமுடன் வரவேண்டும் பரமன்பாலா
சூழம்வாள் தண்டெடுத்து எதிர்த்த சூரன்
தொலைந்திடவே வேலெறிந்த துணிந்த நாதா
ஆலவிஷமுண்ட சிவனார் தமக்கு
அரிய உபதேசமது கொடுத்த நாதா
கோலமுடன் திராய்மடுவில் வந்தமர்ந்த - சுவாமி
குருபரனே உயிர் காத்து இரட்சிப்பாயே.

3. பித்தனைப்போல் நானின்று கத்துறேனே
பேசாமல் இருப்பதுவும் நியாயந்தானோ
சித்தமது இரங்காமல் இருக்கின்றீரோ
செவிடோ உன் காது பன்னிரெண்டுமையா
வத்துகின்ற குளத்தில் மீன் தவிக்குமாப்போல்
வாடுகின்றேன் மெய்வருந்தி உன்னைத் தேடி
தத்திநடமாடி திராய்மடுவில் வந்த - சுவாமி
சண்முகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

4. பீரங்கி துப்பாக்கி குண்டு தானும்
பின்னிடுமே உன்னுடைய வேலைக்கண்டால்
பாரெங்கும் கீர்த்திபெற்று அடியார் தம்மை
பாதுகாக்கும் நீயாதல் பார்க்கொணாதா
கார் என்று உன்னையன்றி யாரைச்சொல்வேன்
காசினியில் வேறுமொரு தெய்வமுண்டோ
வீரமரம் சூழதிராய் மடுவில் வாழும் - சுவாமி
வேலவனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

5. புனந்தனிலே புகுந்த குறவள்ளிக்காக
போயலைந்து மனம்மெலிந்து சுனநீர் உண்டு
வனந்தனில் வாழ் மதகரியைக் காட்டியந்த
வள்ளியரை மணமுடித்த வடிவேலையா
இனந்தனையே தானிழந்து தனிமையானேன்
ஏனென்றும் கேளாமல் இருக்கின்றீரோ
தினம் பணிந்தேன் திராய்மடுவில் அமர்ந்த தேவா - சுவாமி
தேசிகனே உயிர்காத்து இரட்சிப்பாயே

6. பூதலத்தில் உன்னையன்றித் தெய்வம் வேறு
புண்ணியனே யாருமுண்டோ புகழ்வீரையா
மாதவம்செய் மாமுனிவர் தேவர் மூவர்
யாவரையும் சிறைமீட்டுத் துயரம் தீர்த்தாய்
பாதங்கள் செய்தகொடும் பாவியென்றோ
பாலன் என்னைப் பாராமல் இருக்கின்றீரோ
ஆதரிப்பாய் திராய்மடுவில் அமர்ந்த தேவா - சுவாமி
ஆறுமுகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.



7. பெற்றதாய் தனையிழந்த பிள்ளை தேம்பி
பெமூச்சி விட்டழுது புலம்புமாப்போல்
உற்றதுணை இல்லாமல் வாடுகின்றேன்.
ஓடி வர வேண்டுமையா இந்தவேளை
கற்றறியேன் உன்புகழைப் பாடுதற்கு
கரிமுகனுக்கிளைய எங்கள் கந்தவேலே
சற்றுதிராய் மடுநகரில் வந்தமர்ந்த - சுவாமி
சண்முகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

8. பேசாதஊமையைவாய் பேசவைத்தாய் குருடுசெவிடும் தீர்த்தாய்
பெருநோய்கள் பேய்பில்லி அகலவைத்தாய் பிணியும் தீர்த்தாய்
கூசாமல் அமர்செய்த பத்மா சூரன்
கிளையோடு மாண்டுவிழ வேலெறிந்தாய்
ஓயாத கவலை கொண்டு வாடுகின்றேன்
உனக்கபயம் என்முன்னே ஓடிவாரும்
ஆசாரமான திராய்மடுவில் வாழும் - சுவாமி
ஆறுமுகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

9. பையரவு மதிநதியை சடையில் சூடும்
பரமசிவன் அருளிளைய மகனாய் வந்தாய்
கைதனிலே வேலேந்தி அமரர்க்காக
கடியசமர் செய்து வெற்றிகொண்டாய்
மெய்வருந்தி வாடுகின்ற அடியார்க்காக
வேற்றுருவமாகி வந்து வினையும் தீர்த்தாய்
செய்ய சிறு திராய்மடுவில் அமர்ந்த நாதா - சுவாமி
தேசிகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

10. பொங்குகடல் சூழ் உலகமெங்கும்
எனைப்போல் மூடன்கண்டதுண்டோ புகழ்வீரையா
சங்குதொனி மணியோசையாலே காது
சற்றேனுங் கேளாமல் இருக்கின்றீரோ
எங்கும் பகை வறுமை பிணி கவலையாற்றேன்
ஈராறு கண்ணுடைய இறைவா பாரும்.
தங்கியிந்த திராய்மடுவில் வந்தமர்ந்த - சுவாமி
சண்முகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

11. போற்றி செய்தேன் புண்ணியனே இப்போவாவா
புனக்குறத்தி மணவாளா புனிதா வா வா
கூற்றுவந்தணுகாமல் என்முன் வா வா
குமரகுரு தேசிகனே குருவே வா வா
மாற்றறியாத்தங்க வடிவேலா வா வா
மாதுளையாள் புத்திரனே மனதில் வா வா
ஆற்றமுள்ள திராய்மடுவில் அமர்ந்த தேவா வா வா - சுவாமி
அடியேன் தன் உயிர்காத்து இரட்சிப்பாயே.

12. பௌந்தரமும் கசம்பிளைவை கண்டமாலை
பகரவொண்ணா கேன்ஷரோடு வாதரோகம்
நைந்த இருவிழி குருடுபடலம் காசம்
நாடு மரையாப்பினொடு மேகம் சூழை
அயந்த பெரு வியாதிகளும் அணுகாவண்ணம்
அறுமுகனே அடியேனைக் காக்க வேண்டும்
சௌந்தரமாய் திராய்மடுவில் அமர்ந்த தேவா - சுவாமி
சண்முகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

13. இப்போதே மனமிரங்கி என்முன் வா வா
ஏழைபடும் துயர்தீர்க்க இரங்கி வா வா
தப்பாமல் அருள் கீர்த்தி செல்வம் தா தா
தமையனுக்கு உன்னுடைய கருணை தா தா
எப்போதும் உனைத் துதிக்க எண்ணம் தா தா
ஈஸ்பரியாள் புத்திரனே இரங்கி வா வா
செப்பாரும் திராய்மடுவில் அமர்ந்த தேவா - சுவாமி
தேசிகனே உயிர்காத்து இரட்சிப்பாயே.

## அமரர் . ம. நல்லதம்பி சாஸ்திரியார் எழுதிய

# கும்மிப் பாடல்கள்

1. சீர்வளம் பெற்றுக் குயில்கூவும்
திராய்மடு என்னும் நகர்வாழும்
வேலவர் மேல் கும்மி பாடுவதற்கு
வேளமுகனே காப்பாமே

2. காப்பாக நாளும் சரஸ்வதி அம்மனை
காதலுடன் இருதாள் பணிந்து
கைகூப்பியே கும்மி பாடுவதற்கு
அன்னை கோதை பத்ரகாளி தாழ்துணையே

3. துணையாக வேண்டும் எந்தன் கிருபை
தோத்தரித்தே மன கீர்த்தியுடன்
தினைமாவை உண்டோன்மேல் கும்மி பாடுவதற்கு
தெய்வானை வள்ளி காப்பாமே.

4. தங்கவேல் வந்திங்கே தங்கவந்த
சங்கதி சொல்லென் நாவினிலே
சிங்கத்திலேறிய பூரணியே
செப்ப அருள்தர வேணுமம்மா.

5. வேணுமென்று சடைச்சுவாமி நல்லதம்பி
வேலவன் கோயில் அமைத்த செய்தி
கூறுவேன் கும்மியப் பாடுகிறேன்
கோதையரே நின்று கேளுமம்மா

6. அம்மையின் பெயர் அமராபதியாம்
அப்பரின் பெயர் தம்பியப்பாவாம்
செம்மையுடன் சின்ன மட்டிக்களிநகர்
சேயனும் வந்து பிறந்தாண்டி.

7. வந்து பிறந்துமே தந்தையிழந்து
வளர்ந்தார் தாயுடன் நல்லதம்பி
சிந்தை மெலிந்து வந்து அலைந்தவர்
சேர்ந்தார் திராய்மடு மாநகரில்

8. திராய்மடு என்னும் நகரடைந்து
உண்ண வழியொன்றும் இல்லாமல்
கரமதிலே ஒரு கத்தி எடுத்துமே
காடுவனங்களில் தான் புகுந்தான்

9. காடுவனங்களில் தான் புகுந்து
கம்பு அலம்பல்முள் வெட்டி வந்து
நாடுநகரெங்கும் தான் சுமந்து
சுவாமி நல்லதம்பி விற்று வந்தாண்டி

10. வந்து கற்பூரம் சாம்பிராணி
மண்ணெண்ண தேங்காய் என்ன வாங்கி வந்து
சிந்தை மகிழ விளக்கேற்றி அந்த
செந்தில் வடிவேலைக் கைதொழுதான்



11. கைதொழுதேற்றி வரும் நாளில் கந்தன்
மனதில் மிக மகிழ்ச்சி கொண்டு
பையவே செஞ்சடையுண்டாக்கி இந்த
பார் முழுதும் புகழாக்கி வைத்தார்

12. வந்த சடையின் மகத்துவத்தால்
வையக மீதினில் உள்ளவர்கள்
பைத்தியக்காரர் என்றெண்ணாமல்
அவர் பாதம் பணிகிறார் கோடிசனம்.

13. பணிந்து பாத காணிக்கையும்
பச்சைப் படியும் நெல் அரிசும்
துணிந்து அன்னமும் தான் கொடுப்பார்.
சூரர் சங்காரர் தன்னருளால்

14. சூரனை வென்ற வடிவேலுக்கு
அங்கே தோன்று கோயில் கிணறுகளும்
வாறவர் தங்கள் பிணிதீர்துக் கந்தன்
வாங்கிக்கொண்டான் கடன் பாருங்கடி

15. பாருங்கள் சங்கு கேசண்டி தவில்
பாட்டும் படிப்பும் இரச்சல்களும்
ஆரும் புகழ்ந்திட ஆச்சிரமம் தனில்
ஆறுமுகன் அருள் பாருங்கடி

16. ஆறுமுகமென்ற பெயருடையான் நம்மை
ஆளும் திராய்மடு ஊருடையான்
சீருடையான் வடிவேலன் பெருமையை
திராய்மடுவில் வந்து பாருங்கடி.

17. வந்து சிலசனம் பொங்குவதும்
வாறதுவும் வந்து போறதுவும்
சிந்தை மகிழ திராய்மடுவில் உள்ள
சிறப்பைக் கண்ணாலே பாருங்கடி.

18. கண்ணப்பநாயனார் தான் பிறந்து இந்தக்
காட்சியைக் காட்டத்தான் வந்தாரோ
மண்ணில் சடைச்சுவாமி செய்கின்ற பூசைபோல்
வையகத்தில் யாரும் கண்டதில்லை.

19. இல்லையென்று சொல்ல மாட்டாண்டி
எல்லோர்க்கும் அன்னம் போட்டாண்டி
கல்லுமுருக மனக்கயிற்றால் வேலைக்
கட்டிக்கொண்டார் சுவாமி நல்லதம்பி

20. நல்ல வேதம் பல கற்றறியார் அவர்
நாலாறு பிள்ளையும் பெற்றறியார்
சொல்லும் பொய் களவு விற்றறியார்
சூது கபடுகள் அற்றவண்டி.



21. அற்றவண்டி புகழ் உற்றவண்டி அந்த
ஆறுமுகனருள் பெற்றவண்டி
ஞானம் கற்றவண்டி வேலை உற்றவண்டி
கம்பு அலம்பல் முள் விற்றவண்டி

22. வேங்கை வரிப்புலி பன்றி குரங்குகள்
மேவும் திராய்மடு மாநகரில்
ஓங்கு புகழ் பெற்ற சண்முகநாதா
உத்தம வேலனைப் பாருங்கடி

23. வேடன் உருவமெடுத்தாண்டி காட்டு
வேங்கை மரமாய் முளைத்தாண்டி
புனம் தேடித் தினைமாவைப் புசித்தாண்டி அந்த
தேவி வள்ளியை மணம் முடித்தாண்டி

24. பச்சை வளையல்கள் விற்றாண்டி கிழப்
பண்டாரம் போல் வடிவுற்றாண்டி
நச்சரவில் பள்ளி கொண்டோன் மருமகன்
நல்ல திராய்மடு உற்றாண்டி

25. நாவலடி வாழும் நல்லதம்பி இதை
நாடியே பாடி அறிந்தளவும்
ஓதினோர் கேட்கும் அன்பர்கள் யாவரும்
வாழிய வாழிய வாழியவே.

# ஸ்ரீ திராய்மடு முருகன் காவடிச்சிந்து

1. முந்தி முந்தி வினாயகனே முதல்வோனே
மூலப்பொருளான கணபதியே அய்யா
தொந்தி வயிற்றோனே துங்கக்கரிமுகனே
அரனின் முன்மகனான திருமகனே
பாற்கடலில் துயில்கொள்ளும் மாயவனே
பாரதத்தை முன் நின்று முடித்த கண்ணா
தேடியே உம் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

2. சடையப்ப சுவாமிகண்ட திராய்மடுவிலே தான்
சக்தி வடிவேலோடு காட்சிதந்தாய்
தனித்துவரும் மக்களுக்கு அருளும் தந்தாய்
தீராத நோய் பிணிகள் தீர்த்தும் வைத்தாய்
பசித்துவரும் மக்களுக்கு பசியும் தீர்த்தாய்
பாவி என்னைப் பாதுகாத்து உயரவைத்தாய்
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

3. சிங்காரவேலவனே என் முன் வா வா
சிவசக்தி பாலகனே என் முன் வாவா
திருமாலின் மருகோனே என் முன் வா வா
தினம் பணிந்தேன் என் முன்னே வா வா
தங்க மயில் வாகனனே என் முன் வா வா
தரணியிலே உனைத்துதிக்க ஓடி வா வா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

4. அரனின் கண் கனலாய் வந்தாய்
ஆறுகமலத்தின் உருவாய் நின்றாய்
கார்த்திகைப் பெண்பால் உண்டாய்
சக்திவடிவேலும் பெற்றாய்
தந்தைக்கு உபதேசம் சொல்லிவைத்தாய்
தமையனுக்கு மயில் ஏறிக் காட்சிதந்தாய்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

5. தந்தையிடம் மாம்பழத்தை பெறவே எண்ணி
உலகுதனை ஒரு நொடியில் சுற்றி வந்தாய்
பழம் கிடைக்கவில்லை என்ற பதற்றத்தோடு
பழனியிலே ஆண்டியாக நின்றவேலா
பார்முழுதும் நினைக்க வைத்த பழனிவேலா
பக்தியோடு பாடுகின்றேன் சக்தி மைந்தா
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

6. நாரதரும் உன்னிடத்தில் வந்துநின்று
வள்ளி வடிவழகு தன்னை வகுத்த போது
மயில் ஏறி வள்ளி தினைப் புனத்தில் வந்து
வள்ளி வடிவழகு தன்னில் மையல் கொண்டாய்
வேலநம்பி தங்கருபன் தன்னைக் கண்டு
வேங்கை மர உருவாக நின்றவேலா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே



7. வேடுவர்கள் வள்ளி தினைப் புனத்திலேதான்
வேங்கை மர உருவாக நின்றபோது
வேரோடு உன்தனை அகற்றஎண்ணி
வெட்டிணார்கள் வேடுவர்கள் உதிரம் கண்டார்
ஐ ஐ யோ அரன் மகனே என்றலற
ஆண்டியாக உருமாறி நின்ற வேலா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

8. தேனும் தினைமாவும் தின்றபோது
வேலவர்க்கு தாகமதில் விக்கல் வந்து
சுனையதனில் நீர் சுரப்பச் சென்றபோது
பூவலத்தில் தவறியல்லோ விழுந்தாயப்பா
தையலவள் கை கொடுக்க இழுத்தனைத்து
தாகமில்லை மோகமென்று சொன்ன வேலா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

9. ஆண்டியென வந்து நின்று மான்மகளை
அனைத்திடவே மான்மகளும் அருவருக்க
ஆனையுடன் அச்சமென்று அவளும் கூற
அண்ணாவே வா என உடன் நினைக்க
ஆனைமுகன் வந்து நின்று ஒலி எழுப்ப
ஐ ஐ யோ என்றலறி அணைத்தபோது
மெய்யான உருமாறி நின்ற வேலா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே

10. தையலவள் வேலவரின் உருவம் கண்டு
தயங்கியே பாதமதில் சரணடைந்து
தொண்டனிட்டுத் தன் தவறை உரைத்தபோது
தயங்காதே உன்னை மணம் முடிப்பேன் என்றாய்
அவ்வேளை ஆனைமுகன் அருகில் வந்து
ஆசி கூறி இருவர் மனம் முடித்த வேலா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே.

11. நாட்டினிலே நாங்கள் படும் துயரம் கண்டு
நாளிகைக்குள் உன் வரவை நாடுகின்றோம்.
சூரர் குலம் அழிக்க வந்த சண்முகனே உன்
சொந்த இனம் அழியுமுன்னே ஓடிவாராய்
காத்துநின்று அருள் கொடுக்கும் கருனை வேலா
காலமெல்லாம் உன்னையே சரணடைந்தோம்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள்செய்வாயே.

ஆக்கம்
திருமதி. வசந்தாதேவி நல்லரெட்ணம்
திராய்மடு



# திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய நிர்வாகசபை

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.த. விஜயகுமார் |
| செயலாளர் | :- | திரு.வி.கிருஷ்ணமூர்த்தி |
| பொருளாளர் | :- | திரு.ம.சிறிதரன் |
| உபதலைவர் | :- | திரு.இரா.யோகலிங்கம் |
| உபசெயலாளர் | :- | திரு.க. கதிர்காந்தன் |

**ஆலோசகர்கள்**

திரு. வே. கணேசமூர்த்தி
திரு. ந. ஜெகதீசன்
திரு. த. கந்தசாமி

**கணக்குப் பரிசோதகர்**

திரு. K.S. நாகேஸ்வரன்

## நிருவாக உறுப்பினர்கள்

1. க. நல்லரெத்தினம்
2. பூ. துரைராஜசிங்கம்
3.ச. புவனேந்திரன்
4. அ. சர்வேஸ்வரன்
5. பு. செல்வகாந்தன்
6. வி. விக்னேசமூர்த்தி
7. உ. சுவேந்திரகுமார்
8. ஐ. சிறிதரன்
9. உ. சந்திரகுமார்
10. த. சண்முகம்
11. த. தவக்குமார்
12. ந. வசந்தகுமார்
13. ச. சதீஸ்குமார்
14. லோ. ரமேஸ்
15. மு. பாபு
16. தி. தனீகராஜ்
17. இரா. கலைவேந்தன்
18. செ. சசிதரன்
19. சு. ராஜசேகர்
20. ந. இளங்கோ
21. ச. சசிக்குமார்
22. ர. நிஷாந்தன்
23. மு.சாந்தன்


# பிழைதிருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 6 | 2 | 1 | தீத்தோற்சவம் | தீர்த்தோற்சவம் |
| 24 | 1 | 9 | புன்னச்சோலை | புன்னைச்சோலை |
| 27 | 1 | 9 | பூராணந்த | பூரணானந்த |
| 27 | 1 | 12 | பூராணந்த | பூரணானந்த |
| 28 | 1 | 4 | அன்மித்ததாலோ | அண்மித்ததாலோ |
| 40 | 2 | 4 | மயிர்க்கூச்சரிய | மயிர்க்கூச்செறிய |
| 45 | 2 | 1 | அன்மையில் | அண்மையில் |
| 47 | 2 | 9 | நிமிடங்கள் | நிமிடங்களில் |
| 48 | 1 | 16 | கனத்தில் | கணத்தில் |
| 52 | 1 | 3 | நிரூபனமாகி | நிரூபணமாகி |
| 57 | 1 | 2 | மேற்கூறியபோல் | மேற்கூறியதுபோல் |
| 57 | 2 | 6 | ஆடிப்பூரனையும் | ஆடிப்பூரணையும் |
| 57 | 2 | 6 | திருவேண | திருவோண |

நூலாசிரியர் பற்றிய விபரங்கள்
பக்கம் xviii ல் தரப்பட்டுள்ளன.



கவிஞர் . கா.சிவலிங்கம்









துர்க்கா அச்சகம் 1ம் குறுக்கு, கொக்குவில், மட்டக்களப்பு. 0654922496